

இலங்கை முன்னிலை
பக்கம் 27


# உதயன்

சுடர்: 29 கதிர்: 243 வள்ளுவர் ஆண்டு: 2045 ஆடி 11, ஞாயிறு 27.07.2014

stay connected with: uthayan.print uthayanprint

Uthayan - A lively National Tamil Daily

32 பக்கங்கள்

யாழ். - 30/=
வன்னி - 20/=


தெளிவான வானிலை
காற்றுவீச்சு: தென்மேற்குக்காற்று 34 km/h
ஈரப்பதம்: 48%
காற்றழுத்தம்: 1008 hPa
வெளிச்சத் தெளிவு: மிக நன்று
சூரியோதயம்: 05:23
சூரியஸ்தமனம்: 18:04

# வடக்கு ஊடகவியலாளர்கள் பயங்கரவாதிகள்

கொழும்பு, ஜூலை 27
வடபகுதி ஊடகவியலாளர்கள் பயங்கரவாதிகள் என்றும், பயங்கரவாத ஊடகவியலா ளர்களுக்குச் செயலமர்வை நடத்த வேண்டாம் எனக் கோரியும் கொழும்பில் நேற்றுக் காலை கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டுள்ளது.
கொழும்பு இதழியல் கல்லூரிக்கு முன்பாக நேற்றுக் காலை 11 மணியிலிருந்து மதியம் 12 மணி வரையில் இந்தக் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.
தேசிய ஒற்றுமையைக் கட்டி எழுப்பும் குழு என்று தம்மை அடையாளப்படுத்தியவர்களே இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.
'ரைட்ஸ் நவ்' என்ற அமைப்பின் ஏற்பாட்டில் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்த ஊடகச் செயலமர்வில் கலந்துகொள்வதற்காக வடபகுதியிலிருந்து ஊடகவியலாளர்கள் சிலர் கொழும்புக்குச் சென்றிருந்தனர்.
இந்த நிலையில் அத்தகைய செயலமர்வை நடத்தக்கூடாது என்று எதிர்ப்புத் தெரிவித்தே கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டுள்ளது.
போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பயங்கரவாத ஊடகவியலாளர்களுக்கு செயலமர்வு நடத்தாதே, நாட்டைக் காட்டிக் கொடுத்துச் சர்வதேச விசாரணைக்கு இட்டுச் செல்பவர்கள் இவர்கள்தான், புலிகளுக்கு இங்கு செயலமர்வு வேண்டாம்' என்ற கோஷங்களைச் சிங்களத்தில் எழுப்பியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.
மேற்படி செயலமர்வில் கலந்து கொள்வதற்காகச் சென்ற ஊடகவியலாளர்களையே நேற்று முன்தினம் இரவு ஓமந்தைச் சோதனைச் சாவடியில் அவர்களது வாகனத்தில் கஞ்சா இருந்ததாகத் தெரிவித்து இராணுவத்தினரும்,

❖ 25 ஆம் பக்கம் பார்க்க

# வடக்கு மாகாணத்துக்கு கிடையாது விசேட நிதி

## ஏனைய மாகாணங்களைப் போன்றே வழங்கப்படும் என்று அரசு அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 27
வடக்கு மாகாணத்துக்கு எதுவித விசேட நிதி ஒதுக்கீடுகளும் வழங்கப்படாது. ஏனைய மாகாணங்களுக்கு வழங்கப்படும் நிதியைப் போன்றே வடக்கு மாகாணத்துக்கும் வழங்கப்படும் என அரசு கூறியுள்ளது.
வடக்கு மாகாண மீன்பிடி அபிவிருத்திக்கு 850 மில்லியன் ரூபா வழங்குமாறு கோரிக்கை விடுத்தபோதும் 50 மில்லியன் ரூபாவே வழங்கப்பட்டுள்ளது.
ஏனைய மாகாணங்களைப் போன்றே வடக்குக்கும் நிதி ஒதுக்கப்படும் எனவும் விசேட நிதி எதுவும் வழங்கப்படாது எனவும் அந்த அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார்.
ஒன்பது மாகாணங்களின தும் மீன்பிடி அமைச்சர்களுக்கும், மத்திய அரசின் மீன்பிடி அமைச்சர் மற்றும் செயலாளர்களுக்கும் இடையில் கடந்த மாதம் கொழும்பில் கலந்துரையாடல் இடம்பெற்றது. இதில் வடக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்படும் சகல மீன்பிடி அபிவிருத்தி நடவடிக்கைகளும் வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சினூடாகவே மேற்கொள்ளப்படும் என்று கடற்தொழில் நீரியல் வளத்துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்திருந்தார்.
இதற்கமைய் கடந்த வாரம், ஒன்பது மாகாணங்களின் மீன்பிடி அமைச்சின் செயலாளர்களுக்கும், மத்திய கடற்தொழில் அமைச்சின் செயலாளருக்கும் இடையில்சந்திப்புநடைபெற்றது. இதன்போது வடக்கு மாகாணத்தின், 5 மாவட்டங்களிலுமுள்ள நீரியல் வளத் திணைக்களத்தினூடாகப் பெறப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் மாகாண அமைச்சின் அபிவிருத்தித் திட்டங்கள் என்பவற்றை உள்ளடக்கியதாக, 122 அபிவிருத்தித் திட்டங்களுக்கு 848.3 மில்லியன்

❖ 25 ஆம் பக்கம் பார்க்க

## வடக்கு முதல்வரின் பொறுப்புக்கள் பகிரப்படும்

யாழ்ப்பாணம், ஜூலை 27
வடக்கு மாகாண முதலமைச்சரின் கீழ் வரும் சில விடயங்கள் ஏனைய அமைச்சுக்களுக்குப் பகிரப்படவுள்ளன என்று நம்பகரமாகத் தெரியவருகின்றது.
வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனின் கீழ், 13 அமைச்சுப் பொறுப்புக்கள் உள்ளன. உள்ளூராட்சி, நிதி, காணி, கூட்டுறவு உள்ளிட்ட முக்கியமான அமைச்சுப்

❖ 25 ஆம் பக்கம் பார்க்க

## ஜனாதிபதி வேட்பாளராக ஷிராணி

கொழும்பு, ஜூலை 27
அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் நடைபெறும் என எதிர்பார்க்கப்படும் ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராக முன்னாள் பிரதம நீதியரசர் கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்க நிறுத்தப்படலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது.
கடந்த வியாழக்கிழமை கொழும்பு புதிய நகர மண்டபத்தில் கோட்டை நாகவிகாராதிபதி வண.மாதுலுவாவே சோபித தேரரின் தலைமையில் நடைபெற்ற எதிர்க்கட்சிகளின் கூட்டத்தில் இந்த அழைப்பு விடுவிக்

❖ 25 ஆம் பக்கம் பார்க்க

## முல்லைத்தீவு பொலிஸ் விடுதியில் நேற்று பெரும் வெடிப்புச் சம்பவம்



யாழ்ப்பாணம், ஜூலை 27
முல்லைத்தீவு பொலிஸ் நிலைய விடுதியில் நேற்று மாலை இடம்பெற்ற வெடிப்புச் சம்பவத்தில் பொலிஸ் விடுதிக் கட்டடம் சேதமடைந்துள்ளது. பொலிஸ் வாகனம் ஒன்றும் சேதத்திற்குள்ளாகியுள்ளது.இந்த வெடிப்புச் சம்பவம் நேற்று மாலை 4.15 மணியளவில் இடம்பெற

❖ 25 ஆம் பக்கம் பார்க்க

## அரச காணியில் நாம் ஏன் குடியமரக்கூடாது?

### இடம்பெயர்ந்த மக்கள் கேள்வி

யாழ்ப்பாணம், ஜூலை 27
இராணுவத்தினர் அனுமதியின்றி எங்கள் காணிகளைப் பிடித்து வைத்திருக்கின்றபோது, நாங்கள் ஏன் அரச காணியில் அத்துமீறிக் குடியமரக் கூடாது.
இவ்வாறு கோப்பாயில் அரச காணியில் தங்கியுள்ள, வலி. வடக்கைச் சேர்ந்த மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.
அரச் காணியில் மக்கள் தங்கியுள்ளமைக்கு எதிராகக் கோப்பாய் பிரதேச செயலாளரால் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையிலேயே மக்கள் இவ்வாறு கேள்வியெழுப்பியுள்ளனர்.

❖ 25 ஆம் பக்கம் பார்க்க

## 28 வருடங்களின் பின்னர் வருகிறார் சீன ஜனாதிபதி

கொழும்பு, ஜூலை 27
28 வருடங்களின் பின்னர் இலங்கைக்குச் சீன ஜனாதிபதி வருகை தரவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.
எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 9 ஆம் திகதி மூன்று நாள் பயணமாக அவர் வரவுள்ளார். சீன ஜனாதிபதியின் இலங்கைப் பயணத்துக்கு முன்பதாக, ஜப்பானியப் பிரதமரும் இலங்கை வருவார் என்று தெரிவிக்கப்படுகின்றது.
தென் சீனக் கடல் சர்ச்சை உள்ளிட்ட பல்வேறு விவகாரங்களில், சீனாவும் - ஜப்பானும் ஏட்டிக்குப் போட்டியாகச்

❖ 25 ஆம் பக்கம் பார்க்க

## ஊடகவியலாளர்களின் வானில் நாம் கஞ்சாவை வைக்கவில்லை

### தகவல் கிடைத்ததை அடுத்தே அதனை மீட்டதாகச் சொல்கிறார் ராணுவப் பேச்சாளர்

யாழ்ப்பாணம், ஜூலை 27
ஊடகவியலாளர்கள் பயணம் செய்த வாகனத்தினுள் இராணுவத்தினர் கஞ்சாவை வைக்கவில்லை. எங்களுக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் சோதனையிட்ட போதே, குறித்த வாகனத்தில் இருந்த கஞ்சாவைப் பொலிஸார் கைப்பற்றியதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவன் வணிகசூரிய தெரிவித்துள்ளார்.

❖ 25 ஆம் பக்கம் பார்க்க

## உரிய தீர்வு இல்லையேல் இலங்கையிடமே தஞ்சம்

### இராமேஸ்வரம் மீனவர்கள் எச்சரிக்கை



இராமேஸ்வரம், ஜூலை 27
மீனவர் பிரச்சினைக்கு மத்திய அரசு நடவடிக்கை எடுக்காவிடில் காலவரையறையற்ற வேலைநிறுத்தம் நீடிக்கும். அல்லது கச்சதீவுக்கு வெள்ளைக்கொடியுடன்சென்று இலங்கைக் கடற்படையிடம் தஞ்சமடைவது என்று மீனவர்கள் முடிவெடுத்துள்ளதாக

❖ 25 ஆம் பக்கம் பார்க்க

உதயன்
27.07.2014

# கீரிமலையில் பிதிர்க்கடன் செலுத்த நேற்று ஆயிரக்கணக்கானோர் கூடினர்

## விசேட பூசை வழிபாடுகளும் இடம்பெற்றன

யாழ்ப்பாணம், ஜூலை 27

ஆடிஅமாவாசை தினமான நேற்றுக் கீரிமலையில் ஆயிரக் கணக்கான மக்கள் கூடித் தமது தந்தையர்களை நினைவு கூர்ந்து பிதிர்க் கடனை நிறைவேற்றினார்கள்.



நேற்றுக் காலை முதல் மாலை வரை பெரும் எண்ணிக்கையான மக்கள் கீரிமலை தீர்த்தக் கரையில் நீராடிய பின்னர் சமயக் கிரியைகளில் ஈடுபட்டுப் பிதிர்க் கடன்களை நிறைவேற்றியதை அவதானிக்க முடிந்தது. அங்கு நூற்றுக் கணக்கான சிவாச்சார்யார்கள் பிதிர்க் கடன் நிறைவேற்றும் சமயக் கிரியைகளை நடத்தினார்கள்.

யாழ்.குடாநாடு மற்றும் நாட்டின் பல பகுதிகளில் இருந்து நேற்றுப் பெரும் எண்ணிக்கையானோர் கீரிமலை தீர்த்தக் கரைக்கு வருகை தந்திருந்தனர். இதனால் அங்கு பெரும் சன நெரிசல் ஏற்பட்டது.

பொலிஸாரும், தொண்டர் அமைப்பினரும் மக்களை ஒழுங்கு படுத்துவதிலும், போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதிலும் ஈடுபட்டனர்.

வட பிராந்திய போக்குவரத்துச் சபை தனியார் மினிபஸ் சங்கம் என்பன மக்களுக்கான விசேட பஸ் சேவைகளை கீரிமலை வரை நடத்தின.

தூர இடங்களில் இருந்து மக்கள் வாகனங்கள், மோட்டார் சைக்கிள்களில் கீரிமலைக்கு படையெடுத்து வந்தனர். மக்களின் அத்தியாவசிய வசதி கருதி தாகசாந்தி மற்றும் அன்னதானம் என்பன அங்கு வழங்கப்பட்டன.

கீரிமலை கேணியடிப் பிள்ளையார் ஆலயம், நகுலேஸ்வரர் ஆலயம் ஆகியவற்றில் காலை தொடக்கம் மாலை வரை விசேட பூசைகள் நடைபெற்றன. (த-17-86)

## ஆலயத்தில் பக்தர்களை தாக்கிய கருங்குளவிகள்

ஆலயப் பொங்கலில் ஈடுபட்டவர்களை ஒருவகைக் கருங்குளவிகள் தாக்கியதில் மூன்று வயது குழந்தை உட்பட ஒன்பது பேர் பாதிப்புக்குள்ளானார்கள். இந்தச் சம்பவம் நேற்று பளை அரசர் கேணியில் இடம்பெற்றது.

பாதிக்கப்பட்ட ஒன்பது பேரும் பளை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு இருவர் மேலதிக சிகிச்சைக்காகச் சாவகச்சேரி மருத்துவமனைக்கு கொண்டு வரப்பட்டுள்ளனர்

பளை அரசர் கேணியைச் சேர்ந்த இரத்தினசிங்கம் இராஜேஸ்வரி (வயது-57), கனகர் செல்லம்மா (வயது-70) ஆகியோர் சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் பளை அரசர்கேணியைச் சேர்ந்த யோகலிங்கம் கனகாம்பிகை (வயது-43), மார்க்கண்டு அன்னலட்சுமி (வயது-60), இவரது பேரப்பிள்ளையான சால்டன் கவிநயா (வயது-3), சுனில் ரோகினி (வயது-13), ஆறுமுகம் செல்வராசா (வயது -60), பாஸ்கரன் பிரியங்கா (வயது-15), சுதர்சன் துஷியந்தினி (வயது-33) ஆகியோர் பளை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

அரசர்கேணிப் பகுதியில் உள்ள பெரியதம்பிரான் ஆலயத்தில் ஆடி அமாவாசையான நேற்றுப் பொங்கல் உட்பட படையல் வேலையில் ஈடுபட்ட வேளையில் ஒருவகை குளவிகள் தம்மைத் தாக்கியதாகப் பாதிக்கப்பட்டுச் சாவகச்சேரி மருத்துமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள பெண் தெரிவித்தார். (த-9)

# மீனவர் பிரச்சினை தீராமைக்கு முழுக் காரணம் இலங்கை அரசே

## தமிழக அரசு குற்றச்சாட்டு

சென்னை, ஜூலை 27

இரு நாட்டு மீனவர்களதும் பேச்சுக்களில் தீர்வு காணப்படாமைக்குக் காரணம் இலங்கை அரசே என தமிழக அரசு குற்றஞ்சாட்டியுள்ளது.

எல்லை தாண்டி மீன் பிடித்தல் தொடர்பில் இருநாட்டு மீனவர்களும் தொடர் பாதிப்புக்குள்ளாவது தொடர்பில் இணக்கப்பாடு காணப்படவேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்து இரு கட்டப் பேச்சுக்கள் முடிவுற்றுள்ள நிலையில் இதுவரை தீர்க்கமான ஒரு முடிவு எட்டப்படவில்லை. பேச்சு பயனற்றது என்ற ரீதியில் இலங்கை மீனவர்கள் மூன்றாம் கட்டப் பேச்சில் பங்குபற்றுவதற்குப் பின்னடித்துள்ள நிலையில் உயர்மட்ட அதிகாரிகள் கொண்ட குழுவினருடன் மூன்றாம் கட்டப் பேச்சைச் சென்னையில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இந்திய மீனவர்கள் முன் வைக்கும் கோரிக்கையை இலங்கை மீனவர்கள் ஏற்க மறுக்கும் நிலையில் பேச்சுக்களில் முடிவுகள் எதுவும் எடுக்கப்படுவதில்லை.

இலங்கை அரசு மீனவர் பேச்சு தொடர்பில் கண்டுகொள்ளாமல் இருப்பதால் பேச்சில் எடுக்கப்படும் தீர்மானங்கள் புறக்கணிப்புச் செய்யப்படுகின்றன.

இருநாட்டு அரசும் இதற்கான தீர்வை முன்வைத்தால் தான் மீனவர்களது பிரச்சினை தீர்க்கப்படும் என மீனவர்கள் எதிர்பார்க்கும் நிலையில் இலங்கை அரசு மீனவர் விடயத்தில் மௌனமாக இருப்பதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது.

மூன்றாம் கட்டப் பேச்சுக்கு மத்திய அரசு அழைப்பு விடுத்துள்ள நிலையில் அதில் கலந்துகொள்வது தொடர்பில் இலங்கை அரசால் தீர்க்கமான முடிவு இன்னும் அறிவிக்கப்படவில்லை.

இந்த பேச்சில் இலங்கை மீனவர்கள் பங்குபற்ற வேண்டும் என்பதே தமிழக அரசின் எதிர்பார்ப்பாகவுள்ளது.

இந்த நிலையில் அடுத்த மாதம் உயர் மட்ட அதிகாரிகள் கொண்ட குழுவினர் சென்னையில் சந்திப்பை மேற்கொள்ளவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-14)

# காஸாவில் மோதல் நிறுத்தம்

காஸா, ஜூலை 27

இஸ்ரேலிய அரசாங்கத்துக்கும் ஹமாஸ் குழுவினருக்கும் இடையே உடன்பாடு ஒன்று எட்டப்பட்டதை அடுத்து காஸாவில் 12 மணி நேரத்துக்கான மோதல் இடைநிறுத்தம் நடைமுறைக்கு வந்துள்ளது.

மனிதாபிமான அடிப்படையிலான சின்ன இடை வேளை தான் இதுவென்றும், தாங்கள் தாக்கப்பட்டால் பதிலுக்கு தாக்கவே செய்வோம் என்றும் இஸ்ரேல் எச்சரித்துள்ளது.

# பிரிட்டன் தமிழ் இளையோரின் கறுப்பு ஜூலைக் கவனவீர்ப்பு

லண்டன், ஜூலை 27

லண்டன் நகரில் கறுப்பு ஜூலை நினைவேந்தல் நிகழ்வுகள் கவனவீர்ப்புப் போராட்டமாக நடைபெற்றது.

நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை பிரிட்டன் தமிழ் இளையோர் அமைப்பினர் இந்தக் கவனவீர்ப்புப் போராட்டத்தை ஏற்பாடு செய்திருந்தனர்.

திடீரென்று வீதியில் இறங்கிய மாணவர்களும் இளையோர்களும் கறுப்பு ஜூலை பற்றிய நிகழ்வினை நாடகம் மூலம் வேற்றின மக்களுக்கு தெரியப்படுத்தினார்கள்.

வீதியால் சென்ற மக்கள் நின்று நிதானமாக இளையோர்களின் நடிப்பினை பார்த்தும் அதனால் கொடுக்கப்பட்ட செய்தியினை உள்வாங்கியும்சென்றதைக் கவனிக்கக் கூடியதாக இருந்தது. மழைக்கு மத்தியிலும் மாணவர்கள் சளைக்காமல் தங்களது தேசிய உணர்வுகளை வெளிப்படுத்தினார்கள். (த)

இலவச விசா ஆலோசனைகள்

* ஜக்கிய அமெரிக்கா
* கனடா
* அவுஸ்ரேலியா
* நியுஸிலாந்து
* ஜரோப்பிய நாடுகள் (UK, France, Italy, Swiss, Germany, Poland, Latvia, Cyprus)
* ஆசிய நாடுகள் (Singapore, Malaysia, India, China, Russia )

Student Visa
Work Permits
Skilled Migration
Visit Visa

# Entry with G.C.E O/L
# IELTS Not required
# Free Accommodation
# Very low Course fee
# Financial Sponsorships
# Full Scholarships

* Conditions Apply

(C15554)

வெளிநாட்டில் படிக்க, உழைக்க எமது இலவச சட்ட ஆலோசனை மூலம் பலர் பயன் பெற்றுள்ளனர் .......

iCS Study Overseas
77, மணிக்கூட்டு கோபுரவீதி, யாழ்ப்பாணம்
107-B 1/1,Galle Road, Colombo - 06
021 7306000, 077 3013060

நீங்கள்

இலஞ்சம் அல்லது ஊழல்
காரணமாக அநீதிக்கு உள்ளாகிய ஒருவரா?

இலஞ்சம் அல்லது ஊழலுக்கு
எதிராக உங்களால் செய்யக்கூடியவைப் பற்றி நீங்கள் அறியாது இருப்பவரா?

இலஞ்சம் அல்லது ஊழலுக்கு
எதிராக உங்களால் முன்வைக்கப்பட்ட முறைப்பாட்டுக்கு உரிய பதில் கிடைக்கவில்லையா?

உங்களது உரிமைகள் தொடர்பாக இன்றே செயல்படுங்கள்.
உங்களுக்கு இலவச சட்ட ஆலோசனைகள் வழங்க நாங்கள் தயாராகவுள்ளோம்.



வவுனியா நிலையம்
வைரவர்கோவில் வீதி,
02ம் குறுக்குத்தெரு
வவுனியா
தொலைபேசி இலக்கம்: 024 2227676

மட்டக்களப்பு நிலையம்
இல: 296, ½
திருகோணமலை வீதி,
மட்டக்களப்பு
தொலைபேசி இலக்கம்: 065 2229594

மாத்தறை நிலையம்
இல: 17, காளிதாச வீதி,
மாத்தறை
தொலைபேசி இலக்கம்: 041 2233522

TRANSPARENCY INTERNATIONAL SRI LANKA
a nation that upholds integrity

"நேர்மையின் புகலிடம்" கொழும்பு நிலையம் 183/5 ஹைலெவல் வீதி,
கொழும்பு – 06
தொலைபேசி இலக்கம்: 0112 513313

# குழந்தைக்கு உரிய நேரத்தில் சிகிச்சை வழங்க அசமந்தம்

## அரச வைத்தியசாலைக்கு எதிராக தந்தையாரால் பொலிஸில் முறைப்பாடு

சாவகச்சேரி, ஜூலை 27

தனது ஒன்றரை வயதுக் குழந்தைக்கு உரியநேரத்தில்சிகிச்சை வழங்க வைத்தியசாலை தரப்பினர் தவறிவிட்டனர் என்று ஒருவர் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இந்தச் சம்பவம் குறித்துத் தெரிய வருவதாவது:-

தென்மராட்சியைச் சேர்ந்த ஒன்றரை வயதுக் குழந்தை ஒன்று தவறி வீழ்ந்ததில் தலையில் காயம் அடைந்துள்ளது.

நேற்றுமுன்தினம் மாலை 6.30 மணியளவில் குழந்தையை தந்தை அரச மருத்துவ மனைக்குக் கொண்டு சென்றுள்ளார். அங்கு மருந்து பெறுவதற்கான சிட்டையைபதிவு செய்து பெற்றுக்கொண்ட அவரை மருத்துவர் வரும்வரை காத்திருக்குமாறு கடமையில் இருந்த ஊழியர்கள் தெரிவித்துள்ளனர்.

இரத்தம் கொட்டியவாறு இருந்த குழந்தையுடன் தந்தையாரும் ஒரு மணிநேரமாகக் காத்திருந்துள்ளார். எனினும் அங்கு மருத்துவர் வரவில்லை. ஏனையவர்களும் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.

அதனால் ஆத்திரம் அடைந்தவர் குழந்தையை அழைத்துக் கொண்டு சாவகச்சேரி பொலிஸ் நிலையம் சென்று, தனது குழந்தைக்கு நேர்ந்த கதியை சொல்லி முறையிட்டுள்ளார்.

பின்னர் தனியார் மருத்துவமனையில் குழந்தைக்கு சிகிச்சை பெற்று தான் வீடு திரும்பினார் என்று அந்தத் தந்தையார் தெரிவித்தார்.

(ஐ-9)

# கால் நடைகளுக்கு நீர் வெறுப்பு நோய்

## கட்டாக்காலி நாய்களால் கடியுண்டமையால்

தென்மராட்சி, ஜூலை 27

கட்டாக்காலி நாய்களால் கடியுண்ட வளர்ப்புக் கால்நடைகளுக்கு நீர் வெறுப்பு நோய் ஏற்பட்டு சாவடைந்துள்ள சம்பவங்கள் தென்மராட்சிப் பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளன.

கடந்த வாரம் நாவற்குழிப் பகுதியில் தெரு நாயினால் கடியுண்ட பசு மாடும் கல்வயல் பகுதியில் ஆடு ஒன்றும் பல இடங்களில் வளர்ப்பு நாய்களும் நீர்வெறுப்பு நோய் ஏற்பட்டு சாவடைந்துள்ளன.

இந்த விடயம் தொடர்பாக சாவகச்சேரி கால்நடை மருத்துவர் பணிமனை, சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை போன்றவற்றுக்கு அறிவிக்கப்பட்டு அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டதுடன் வீட்டு நாய்களுக்கு விலங்கு விசர் நோய் தடுப்பூசி மருந்து ஏற்றப்பட்டுள்ளது.

இதேவேளை சாவகச்சேரி மருத்துவமனையில் பெறப்பட்ட புள்ளி விவரங்களின் பிரகாரம் தெரு நாய் மற்றும் வளர்ப்பு நாய்களால் கடியுண்ட நிலையில் மாதாந்தம் 100 இற்கும் மேற்பட்டோர் சிகிச்சை பெற்று வருவதாகத் தெரியவருகிறது.

மேலும் பிரதேசத்தில் வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி (ஏ.ஆர்.வி) கடந்த 2013 ஜூலை மாதத்தில் ஏற்றப்பட்டு ஓராண்டு நிறைவு பெற்றுள்ளதாவும், இதுவரைக்கும் வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி ஏற்றப்படவில்லையெனவும் பொதுமக்கள் தெரிவித்தனர். (த-9)

# குறைந்த நிறையில் பாண்: பேக்கரிகள் மீது நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 27

நிறைகுறைந்த அளவில் பாணை உற்பத்தி செய்து விற்பனை செய்யும் பேக்கரிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என பாவனையாளர் அதிகார சபை அதிகாரி எஸ். வசந்தகுமார் தெரிவித்திருக்கிறார்.

450 கிராம் பாணை 350 கிராமாக குறைத்து உற்பத்தி செய்து விற்பனை செய்ததாக குற்றஞ்சாட்டி ஒருவரை கடந்த வெள்ளிக்கிழமை பாவனையாளர் அதிகாரசபையின் அதிகாரிகள் கைது செய்திருந்தனர். நேற்று முன்தினம் பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட நீதிவான் குறித்த பேக்கரி உரிமையாளரைக் கடுமையாக எச்சரித்ததுடன் 4 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார். அத்துடன் பேக்கரி செயற்பாடுகள் ஒழுங்காக நடக்கின்றனவா என்று பாவனையாளர் அதிகாரசபையின் அதிகாரிகளை கண்காணிக்குமாறு உத்தரவிட்டுள்ளார். பேக்கரி களை ஒழுங்காக நடத்த தகுதியில்லாவிட்டால் அவற்றை மூடிவிடுமாறு நீதிவான் கடும் தொனியில் எச்சரித்தார்.

இந் நிலையில் நிறைகுறைந்த அளவில் பாணை உற்பத்திசெய்யும் பேக்கரிகள் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என பாவனையாளர் அதிகார சபையின் அதிகாரி வசந்தகுமார் தெரிவித்தார். அவ்வாறு பேக்கரிகள் இனங்காணப்பட்டால் நீதிமன்றம் மூலமாக கடுமையான சட்ட நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படும் எனவும் அவர் கூறினார்.

(த-109)

# அனுமதி இன்றி மாட்டிறைச்சி வைத்திருந்த நால்வருக்குப் பிணை

சாவகச்சேரி, ஜூலை 27

அனுமதிப் பத்திரமின்றி 25 கிலோ கிராம் மாட்டிறைச்சியை வாகனத்தில் கொண்டு சென்ற நால்வருக்கு சாவகச்சேரி நீதிமன்று தலா 50 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆள் பிணையில் செல்ல அனுமதித்தது.

நேற்று அதிகாலை கொடிகாமம் பகுதியில் வாகனத்தைப் பரிசோதனை செய்த போதே அதனுள் இரண்டு பைகளில் கட்டப்பட்டிருந்த 25 கிலோ மாட்டிறைச்சியையும் வாகனத்தையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

அத்துடன் வாகனத்திலிருந்து மாடு வெட்டுவதற்குரிய கத்திகளும் மீட்கப்பட்டன.

அனுமதிப் பத்திரமின்றி மாட்டிறைச்சியை கொண்டு சென்ற நால்வரையும்பொலிஸார் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தினர். அவர்களை தலா 50 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆள் பிணையில் செல்ல மன்று உத்தரவிட்டது.

(ஐ-9)

# ஒரு கிலோ தேங்காய் நாற்பது ரூபா மட்டும்




தென்மராட்சி, ஜூலை 27

சாவகச்சேரி சந்தை வரலாற்றில் முதன்முறையாக தேங்காய் நிறுவை மூலம் நேற்றுக் கொள்வனவு செய்யப்பட்டது.

கிலோ 40 ரூபா வீதம் சந்தைக்கு கொண்டு வரப்பட்ட பெருமளவு தேங்காய் கொள்வனவு செய்யப்பட்டது.

இதுவரை காலமும் சந்தைக்கு கொண்டுவரப்படும் தேங்காய் மேடையில் கொட்டப்பட்டு கேள்வி மூலம் கொள்வனவு செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுவதே வழக்கம்.

ஆனால் ஒரு வியாபாரி தேங்காய் விற்பனைப் பிரிவில் தராசு மூலம் தேங்காய்களை நிறுத்து கிலோ 40 ரூபா வீதம் கொள்வனவு செய்தார். தான் 'கொப்பரா' உற்பத்திக்காக தேங்காயை இவ்வாறு கொள்வனவு செய்கிறார் என்று தெரிவித்தே அந்த நடவடிக்கையில் அவர் ஈடுபட்டார்.

(ஐ-9)

# கண்டகி சென்று தீர்த்தமாடினார் சண்முகன்



வலி.வடக்கு, ஜூலை 27

வரலாற்றுப் புகழ்மிக்க மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த காம்யோற்சவ பெரும் திருவிழாவில் நேற்று சனிக்கிழமை இந்து சமுத்திரத்தில் அமைந்துள்ள கீரிமலை கண்டகி தீர்த்தத்தில் சுவாமியின் தீர்த்தோற்சவம் காலை 7.30 மணியளவில் இடம்பெற்றது.

காலை 6 மணியளவில் மாவிட்டபுரத்தில் இருந்து அடியவர்கள் புடை சூழ ஊர்வலமாக சண்முகப்பெருமானை இரண்டரை கிலோ மீற்றர் தூரம் அடியார்கள் தோள்களில் சுமந்து சென்றனர்.

கீரிமலை நகுலேஸ்வரத்தை அடைந்ததும் நகுலேஸ்வரர் ஆலயத்தில் இருந்து சிவன், பிள்ளையார், முருகன் ஆகிய கடவுளர்களும் இணைந்து தீர்த்தக் கரைக்குச் சென்றனர். மண்டபத்தில் விசேட பூசை வழிபாடுகளும் இடம் பெற்றன. நகுலேஸ்வரத்தில் இருந்து ஆலயத்தில் வளர்க்கப்பட்டு வரும் இடப வாகனம் முன்னே செல்ல அதனைத் தொடர்ந்து சுவாமி கடல் தீர்த்தத்தைச் சென்றடைந்தமை குறிப்பிடத்தக்கது.

(ஒ-86-17)

# நீதிமன்றுக்குப் போலி ஆவணம் வழங்கியவருக்கு மறியல்

தென்மராட்சி, ஜூலை 27

பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் இறப்பர் முத்திரையை போலியாக தயாரித்துப் பயன்படுத்தி கடிதம் சமர்ப்பித்து நீதிமன்றை ஏமாற்ற முயன்ற நபரை, சாவகச்சேரி நீதிமன்றம் விளக்க மறியலில் வைக்க உத்தரவிட்டது.

வடமராட்சிப் பகுதியில் தன்னை கர்ப்பிணியாக்கி கைவிட முயன்ற, வரணியைச் சேர்ந்தஒருவருக்கு எதிராக பாதிக்கப்பட்ட பெண் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்திருந்தார். பொலிஸார் குறித்த சந்தேக நபரைக் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தியிருந்தனர்.

இதன் போது பெண்ணின் கர்ப்பத்துக்கு தானே காரணம் எனவும் அந்தப் பெண்ணை மனைவியாக ஏற்றுக்கொள்கிறேன் என்றும் நீதிமன்றத்தில் குறித்த நபர் தெரிவித்திருந்தார்.

இதனையடுத்து வழக்கை ஒத்திவைத்த நீதிவான் அடுத்த தவணையில் திருமணப் பதிவுச் சான்றிதழுடன் வருமாறு உத்தரவிட்டார். நீதிமன்றில் இருந்து அழைத்துச் சென்றபெண்ணை நான்கு நாள்களின் பின்னர் வீட்டில் இருந்து துரத்திவிட்டார் என்று குறித்த பெண் மீண்டும் நீதிமன்றில் முறையிட்டிருந்தார்.

வழக்குத் தவணைக்கு வந்த நபர் பெண்ணின் கர்ப்பத்துக்கும்தனக்கும் சம்பந்தம் இல்லை என்று தெரிவித்தார்.

இதனால் அவரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டு வழக்கை ஒத்தி வைத்தது.

மீண்டும் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது குறித்த சந்தேக நபர் திருமணமானவர் என்று கோப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியினால் வழங்கப்பட்ட கடிதம் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது. இது சம்பந்தமாக பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர்.

இதன் போது கோப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தான் அவ்வாறு கடிதம் எதனையும் வழங்கவில்லை என்று தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் வெள்ளிக் கிழமை வழக்கு மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்ட போது கோப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் அறிக்கையை பொலிஸார் நீதிமன்றில் தாக்கல் செய்தனர்.

நீதிமன்றை ஏமாற்றிய குற்றத்துக்காக அந்தச் சந்தேக நபரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

(ஐ-9)

# பாடசாலையில் மோட்டர் திருட்டு

நள்ளிரவு வேளை பாடசாலை வளாகத்தில் உள் நுழைந்த திருடர்கள் அங்கு இருந்த தண்ணீர் இறைக்கும் மோட்டரை அபகரித்துச் சென்ற சம்பவம் கைதடி சேதுகாவலர் வித்தியாலயத்தில் கடந்த வியாழன் இடம்பெற்றுள்ளது.

மேற்படி தண்ணீர் தாங்கிக்கு அருகே சென்ற திருடர்கள் அங்கு சங்கிலி போடப்பட்டுப் பூட்டப்பட்ட கதவை உடைத்து தண்ணீர் இறைக்கும் மோட்டரை அபகரித்துச் சென்றதாகவும் காலை பாடசாலைக்கு ஆசிரியர்களுக்கும், மாணவர்களும் வந்த வேளையே திருட்டுப்போன விடயம் தெரிய வந்ததாகவும் இந்தச் சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸாருக்கு முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து அங்கு வந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்தத் திருட்டினால் மாணவர்களுக்கான குடிநீர் விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளதுடன் தற்போது பாடசாலையிலுள்ள ஏனைய பொருள்களுக்கும் பாதுகாப்பு இல்லாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் பாடசாலை சமூகத்தால் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

பாடசாலை வளங்களைப் பொறுத்தவரை பாதுகாப்பு மதில், இரவுக் காவலாளி இல்லாத நிலையில் இனிவரும் காலங்களிலும் இங்கு திருட்டுக்கள் தொடர வாய்ப்புள்ளதாகவும் கூறப்படுகிறது. (த-288)

# ஆடி அமாவாசைத் தினத்தில் வினைத்திறன் காண் பரீட்சை

## தந்தைக்கு பிதிர்க்கடன் செய்ய நேற்றுப் பலர் அவதி

யாழ்ப்பாணம், ஜூலை 27

சைவத் தமிழ் மக்களால் தந்தைக்குப் பிதிர்க்கடன் நிறைவேற்றும் ஆடி அமாவாசை தினமான நேற்று வட மாகாணம் தழுவிய ரீதியில் வினைத்திறன் காண் தடை தாண்டல் பரீட்சை நடத்தப்பட்டது.

இதனால் தந்தைக்கு பிதிர்க்கடன் செய்ய வேண்டிய அரச ஊழியர்கள் பலர் தாம் நெருக்கடிகளை எதிர்கொண்டனர் என்று தெரிவித்தனர்.

வட மாகாணத்தைச் சேர்ந்த அபிவிருத்தி உதவியாளர்களுக்கான வினைத்திறன் காண் தடை தாண்டல் பரீட்சை நேற்று நடைபெற்றது.

நேற்று ஆடி அமாவாசை தினம் என்பதால் தந்தைக்குப் பிதிர்கடன் செய்ய வேண்டிய அரச உத்தியோகத்தர்களும் பரீட்சைக்கு செல்ல வேண்டி ஏற்பட்டது.

இதனால் தாம் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டனர் என்றும், இது குறித்து வடக்கு மாகாண சபை நிர்வாகத்தினர் அக்கறை கொள்ளவில்லை என்றும் அவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

(ஐ-402)

## மரண அறிவித்தல்



### பாஸ்கரன் விஜயகுமார்

(V.S. சைவ உணவக உரிமையாளர்- முத்திரைச்சந்தி)

நல்லூரைப் பிறப்பிடமாகவும், கலைமகள் வீதி, கல்வியங் காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட பாஸ்கரன் விஜயகுமார் நேற்று முன்தினம் (25.07.2014) வெள்ளிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பாஸ்கரன்-சரஸ்வதி தம் பதியரின் மூத்த மகனும், ராஜ்குமார், வினோதினி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சர்மிளாவின் பாசமிகு கணவரும், கஜன், திருவேரகன், தனுஷன் ஆகியோரின் அன்பு தந்தையும், கணேஷலிங்கம், செல்வரதி ஆகியோரின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.07.2014) ஞாயிற்றுக்கிழமை இல.60/11, கலைமகள் வீதி, கல்வியங் காட்டில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மு.ப. 10 மணியளவில் செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

T.P: 077 61 55 260 (50403)(10)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### திருமதி இராஜேஸ்வரி அருட்செல்வம்

ஈவினைப் பதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இராஜேஸ்வரி அருட்செல்வம் நேற்று (26.07.2014) சனிக்கிழமை அமரத்துவம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அருட்செல்வத்தின் அன்பு மனைவியும், றமேஸ் (லண்டன்), பிருந்தா, தினேஸ், றம்மியா, பௌத்திரா, பால குமார், கஜமுகன் (வயாவிளான் ம.ம.வி) ஆகியோரின் பாசமிகு தாயும், நகுலேஸ்வரன், பரமேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், செல்வதேவி, சத்தியதேவி ஆகியோரின் அன்பு மைத்துனியும், பமிலா (யாழ். பல்கலைக்கழகம் முகாமைத்துவப் பீடம்), ஏஞ்சலின் எமிமாள், மோசே தேவப்பிரியன் (வயாவிளான் ம.ம.வி), றேச்சல் ஜெபசீலி (புன் னாலைக்கட்டுவன் அ.த.க. பாடசாலை), காண்டீபன், விமலதாஸ், றஜித்தா ஆகியோரின் அன்பு மாமியாரும், சஞ்சீவ், லக்சியன், ஜஸ்வின், ஜதுஸ்சியன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (27.07.204) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மதியம் 12 மணியளவில் ஈவினையம்பதி விலங்கன் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஈவினை மத்தி,
சுன்னாகம். (50321)(10)

தகவல்:
குடும்பத்தினர்,
ப. நகுலேஸ்வரன்

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் இராசையா சரவணபவன்

(பழனி ஆசாரி)



தோற்றம்
13.04.1953

மறைவு
07.08.2013

திதி: 27.07.2014

என்றென்றும் எம்முள்ளே
ஏற்றம் தர வந்தவரே
எம்மை விட்டு பிரிந்து
ஓராண்டு சென்றாலும்
எந்த வேளையும் எம் நெஞ்சில்
வாழ்வாங்கு வாழ்வீரே,

நீர் ஏற்றி வைத்த தீபங்கள்
பிரகாசமாய் பாரினிலே
ஒளிவீசும்
பாதைகள் உருவாக்கியவரே
நாங்கள் பாக்கியம் செய்தவர்கள்
உம்மடியில் பயின்றதால்.

மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

சங்குவேலி தெற்கு,
மானிப்பாய்.

## பிதிர்க்கடன் செலுத்திவிட்டு வந்தோரை மறித்துச் சோதனை

வலி.வடக்கு. ஜீலை 27

கீரிமலையில் பிதிர்க்கடன் செலுத்திவிட்டு காங்கேசன்துறை வீதி வழியாக மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் தெல்லிப்பழை சந்தியில் பொலிஸாரினால் மறித்துச் சோதனைக்கு உட்படுத்தப்பட்டார் கள்.

கொதிக்கும் வெயிலின் மத்தியில் தமது தந்தையருக்கு பிதிர்க்கடனைச் செலுத்திவிட்டு களைத்துப் போய் வந்தவர்களை மறித்துச் சோதனைக்கு உட்படுத்தியமையினால் பலரும் சிரமங்களுக்கு உள்ளாகியதுடன் மனம் வருந்தியுள்ளார்கள். குறிப்பாக போக்குவரத்துப் பொலிஸார் இந்து மக்களின் இத்தகைய நிகழ்வுகள் மற்றும் ஆலயங்களின் உற்சவங்களுக்குச் செல்பவர்களையும், சென்று விட்டு திரும்புபவர்களையும் மறித்து துன்புறுத்துவது வழமையான செயலாகும் என்று அவர்கள் வெதும்பினர்.

வயோதிபர் ஒருவர் "நக்குகிற நாய்க்கு செக்கும் சரி சிவலிங்கமும் சரி" என்று ஆத்திரத்துடன் கூறித் தனது வெறுப்பை வெளியிட்டார். (ஒ-86)

## இடைநிலைப் பாட விதான மறுசீரமைப்பு 2015 இல்

யாழ்ப்பாணம்ஜீலை25

இடைநிலைப் பாட விதானம் அடுத்த வருடம் (2015) தொடக்கம் மறு சீரமைக்க கல்வி அமைச்சு முடிவு செய்துள்ளது. 2015 ஆம் ஆண்டில் தரம் 6 மற்றும் தரம் 10 தரங்களுக்காகவும், 2016 ஆம் ஆண்டில் 7 மற்றும் 11 தரங்களுக்காகவும், 2017 ஆம் ஆண்டில் 8 ஆம் தரத்துக்காகவும், 2018 ஆம் ஆண்டில் 9 ஆம் தரத் துக்காகவும் இந்த மறுசீரமைக்கப்பட்ட பாட விதானங்கள் நடைமுறைப்படுத்தப்படும். மேலும் பழைய பாட விதானம் 2015 ஆம் ஆண்டு 7,8,9 மற்றும் 11 தரங்களுக்காகவும் , 2016 ஆம் ஆண்டில் 8 மற்றும் 9 தரங்களுக்காகவும் 2017 ஆம் ஆண்டில் 9 தரத்துக்காகவும் நடைமுறையில் இருக்கும். (வ-9)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

### வீடு வாடகைக்கு

சாவகச்சேரி நகரின் மத்தியில் நாலு பரப்புக் காணியில் ஏழு அறைகள் கொண்ட வீடு உடன் வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 077 671 3599 (50408)(10)

### நாய்க் குட்டிகள் விற்பனைக்கு

55 நாள்கள் நிரம்பிய டோமன் இன பெண் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 0777 341 994 (50404)(10)

## 70ஆவது பிறந்தநாள் வாழ்த்துக்கள்



இன்று தனது பிறந்தநாளைக்
கொண்டாடும்
எங்கள் அன்புத் தாய்

### இராசதுரை இராசமுத்து

அவர்களுக்கு எங்கள் இதயம்
கனிந்த 70ஆவது பிறந்தநாள்
வாழ்த்துக்கள்.
உங்கள் வாழ்க்கையில்
சந்தோசங்களும்,
சகல சௌபாக்கியங்களும்
கிடைக்கப்பெற
நல்லூரான் அருளாசியுடன்
பல்லாண்டு காலம் வாழ
வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துபவர்கள்:
கணவர், பிள்ளைகள்,
சகோதரி, மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

126/1, நாயன்மார்வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். 021 222 9081

oticon HEARING AIDS Since 1904

நீங்களும்
கேட்டல் குறைபாட்டால்
அவதிபடும் ஒருவரா?

இதோ அதற்கான ஒரு சிறந்த தீர்வு...



விஷன் கெயாவிடமிருந்து

முழுமையான இலவச செவி பரிசோதனையின் பின்னர், புதிய தொழில்நுட்பத்துடன் கூடிய கேட்டல் உபகரணமொன்றை அணிந்து மாற்றத்தை அறிந்துகொள்ளுங்கள்...

நீங்கள் இதற்காக செய்யவேண்டியதாவது, உங்களுக்கு அண்மையில் உள்ள "விஷன் கெயாவை" அழைத்து பதிவுசெய்துக் கொள்வது மட்டுமே.

VISION CARE OPTICAL SERVICES

யாழ்ப்பாணம் - 077-0035377
திருகோணமலை - 077-0122763
மட்டக்களப்பு - 077-4782957

### வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம் குருநகர், இல.43, கதிற்றல் வீதியில் (பெரிய கோவிலுக்கு அருகில்) 5 படுக்கை அறைகள், 2 குளியல் அறைகளுடன் கூடிய புதிய மாடி வீடு வாடகைக்கு உண்டு

தொடர்பு:
077 923 2345, 077 087 0575 (50404)(10)

### பஸ் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள 61-xxxx இலக்கமுடைய Rosa bus, Mitsubishi Bus 28 seats உடைய பஸ்கள் விற்பனைக்கு உண்டு. விலை பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு: 071 698 2677 (f/15251)(10)

## வரணி மத்திய கல்லூரியில் இன்று 3 மாடிக் கட்டடம் திறப்பு

வரணி மத்திய கல்லூரியில் நிர்மாணிக்கப்பட்ட மூன்று மாடிக் கட்டடத் தொகுதி திறப்பு விழா இன்று ஞாயிறு 4 மணிக்கு கல்லூரி அதிபர் க.மங்களேஸ்வரன் தலைமையில் நடைபெறும்.
நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தனவும், சிறப்பு விருந்தினர்களாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி, மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், மாகாணக் கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, நாடாளுமன்ற உறுப்பினரும் தென்மராட்சி பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான சில்வேஸ்திரி அலென்ரின் ஆகியோர் கலந்து கொள்வர். (ஓ-9)

# மரண அறிவித்தல்

## திருமதி சிவதேவி திலீபன்



புத்தூர் வடக்கு புத்தூரை வசிப்பிடமாகக் கொண்ட சிவதேவி திலீபன் 24.07.2014 வியாழக்கிழமை சிவபதமடைந்தார்.
அன்னார் பத்மநாதன் ஈஸ்வரதேவி தம்பதியரின் மகளும் திலீபனின் (லண்டன்) அன்பு மனைவியும் கிருஸ்ணகுமார் (சுவிஸ்), செல்வகுமார் (லண்டன்), கந்தக்குமார் (கனடா), ஜெகதேவி (லண்டன்)ஆகியோரின் அன்புச் சகோதரியும், விஜயமாலினி (சுவிஸ்), கார்த்திகா (லண்டன்), சிந்துஜா (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனியும் விஸ்னுதா ,அபிராம் (சுவிஸ்), பிவிசா (லண்டன்), துசாரா (கனடா) ஆகியோரின் அன்பு அத்தையும் ஆவார்.
அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (28.07.2014) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 9 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக புத்தூர் கிந்துசிட்டி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புத்தூர் வடக்கு,
புத்தூர்.

தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## நமசிவாயம் பரமலிங்கம்



நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும், 74/6, ஆத்திசூடி வீதி கந்தர்மடத்தில் வசித்தவருமான நமசிவாயம் பரமலிங்கம் அவர்கள் (ஓய்வுபெற்ற வங்கி ஊழியர், தேசிய சேமிப்பு வங்கி, பருத்தித்துறை) 20.07.2014 ஞாயிற்றுக்கிழமை அன்று யாழ்ப்பாணத்தில் காலமானார்.
அன்னார் காலஞ்சென்ற நமசிவாயம்-பொன்னம்மா தம்பதியரின் கடைசி மகனும் திரு திருமதி தங்கமணி அம்பலம் தம்பதியரின் மருமகனும், ஜெயந்தியின் கணவரும், தனுஜா, தஜேந்திரா, ராகேந்திரா காலம் சென்றவர்களான ப்ரியங்கா, லஷேந்திரா ஆகியோரின் அன்புத் தந்தையும் சுபாஸ்கரனின் மாமனாரும், அனிசனின் அருமைத் தாத்தாவும் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம், கந்தையா, நடராசா (லிங்கம்), கிளி மற்றும் மனோன்மணி, வள்ளியம்மை, பராசக்தி, பசுபதி, லஷ்மி ஆகியோரது அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற சுதாகரன், நேமிநாதன், நந்தினி, சிவானந்தன், சத்யவாணி ஆகியோரது மைத்துனரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (28.07.2014) திங்கட் கிழமை காலை 7 மணிக்கு கோம்பயன் மணல் மயானத்திற்கு அருகிலுள்ள இன்பம் மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு 10 மணிக்கு அங்கிருந்து கோம்பயன் மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொலைபேசி: 0776692419,0775516453, 0724166034

தகவல்:
மனைவி,
பிள்ளைகள்

# மரண அறிவித்தல்

## திருமதி யோகவதி மகேஸ்வரன்



துன்னாலையைப் பிறப்பிடமாகவும் இல. 107/13 கொழும்புத்துறை (மொறிஸ் லேன்) சுண்டுக்குளியை வதிவிடமாவும் கொண்ட திருமதி யோகவதி- மகேஸ்வரன் நேற்றுமுன்தினம் (25.07.2014) வெள்ளிக் கிழமை காலமாகிவிட்டார்.
அன்னார் காலஞ்சென்ற ஓய்வுபெற்ற புகையிரத அதிகாரி மகேஸ்வரனின் அன்பு மனைவியும்,முத்துப்பிள்ளை, சதாசிவம் அவர்களின் அன்பு மகளும், திரு. திருமதி நாகலிங்கத்தின் அன்பு மருமகளும், கணேசலிங்கம் (UK) காலஞ்சென்றவர்களான பத்மலிங்கம்,சண்முகலிங்கம் மற்றும் நிர்மலிங்கம் (UK) பாஸ்கரலிங்கம் (சிங்கப்பூர்) ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.
அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (27.07.2014) ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக துண்டி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## சரவணமுத்து செந்தில்நாதன்



வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும், கொழும்பு, லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து செந்தில்நாதன் 18.07.2014 அன்று இறைவனடி சேர்ந்தார்.
அன்னார் வேலணையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சரவணமுத்து (தபாலதிபர்-போசர்)-இரத்தினம் தம்பதியரின் இளையமகனும், வட்டுநகர் துணவியூரைச் சேர்ந்த காலஞ்சென்ற கந்தையா-ஞானரெத்தினம் தம்பதியரின் மருமகனும், வர்ணலெட்சுமியின் அன்புக் கணவரும், கபிலா (லதா-லண்டன்), சுதாகரன் (சரவணா-லண்டன்), கோணேஸ்வரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், கிருஷ்ணகுமாரனின் (லண்டன்) அன்பு மாமனும், மதுராவின் (லண்டன்) அன்பு பாட்டனும், காலஞ்சென்றவர்களான நல்லைநாதன், கனஞ்சயன் மற்றும் சிவலோகநாதன் (கனடா) ஆகியோரின் இளைய சகோதரனும், மங்கையர்க்கரசி (லண்டன்), சிவசுந்தர் (கனடா), இராஜேஸ்வரி (கனடா), காலஞ்சென்ற ஜெயராணி மற்றும் செல்வராணி (கொழும்பு),சோதிநாதன் (லண்டன்), தங்கராணி (கொழும்பு), தனலெட்சுமி (லண்டன்), யோகலட்சுமி(கொழும்பு) றஜனி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.07.2014) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் 12 மணிவரை TM UNITED knk STADIAM (THE HURI), IMPERIAL FIELDS BISHOPSTORD ROAD, MORDEN, SURREY SM4 6BF LONDON எனும் முகவரியில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(50407)(10)

## அபிவிருத்தி காணாத நிலையில் சாவற்கட்டு, காக்கைதீவு சந்தைகள்

வலி.தென்மேற்கு, ஜூலை 27
வலி.தென்மேற்குப் பிரதேசத்திலுள்ள சந்தைகளில் சாவற்கட்டு, காக்கைதீவு ஆகிய இரு சந்தைகளும் பல வருடங்களாக அபிவிருத்தி செய்யப்படவில்லை. இதனால் அங்கு கட்டாக் காலி நாய்களின் ஆதிக் கம் அதிகரித்துள்ளதுடன் சுகா தாரச் சீர்கேடுகளும் நிலவு கின்றன. சாவற்கட்டு சந்தை பல வருடங்களாக சிறிய கட் டடத்தில் இயங்கி வருவதால் அங்கு வரும் பாவனையாளர்கள் நடமாட முடியாமல் ஒரு வருடன் ஒருவர் முட்டி மோதுகின்றனர். எனவே முன்னுரிமை அடிப்படையில் இரு சந்தைகளும் அபிவி ருத்தி செய்யப்பட வேண்டும்.
இவ்வாறு வலி.தென்மேற்குப் பிரதேச சபை ஆளும் கட்சி உறுப்பினரான எஸ்.பரமகுரு பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத்தில் பேசும்போது தெரி வித்துள்ளார்.
தவிசாளர் எஸ்.சிவகுமார் தலைமையில் சபை மண்ட பத்தில் நடைபெற்ற மாதாந்தக் கூட்டத் தில் மேற்படி இடங்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் உறுப்பினரான பரமகுரு தொடர்ந்து பேசும்போது கூறியதாவது;
காக்கைதீவுக் கடற்கரையில் பல லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ள சந்தைக் கட்டடம் வியாபாரிகளுக்கு உகந்ததாக அமையாததால் வியாபாரிகள் கடலுணவுகளை வீதியோரத்தில் தரையில் வைத்து விற்பனை செய்து வருகின்றனர். மீனவர்களின் ஆலோசனையின்றி திட்ட மிடப்படாமல் அமைக்கப்பட்ட சந்தைக் கட்டடம் வெறிச்சோடி இருக்கின்றது. அங்கு கட்டாக் காலி நாய்களும் கால் நடைகளும் படுத்து உறங்குகின்றன. வீதியோரத்தில் வைத்து கடலுணவுகள் விற்பனை செய்யப்படுவதால் போக்குவரத் துக்கு இடையூறு ஏற்பட்டுள்ளது.
அதேபோல் சைக்கிள் பாது காப்புத் தரிப்பிடம் அமைப்பதற்கு நிரந்தரமான, பொருத்தமான இடம் சபையால் வழங்கப் படாததால் சைக்கிள் பாதுகாப்பு சரியான முறையில் இடம் பெறுவதில்லை. வீதியின் இரு பக்கங்களிலும் சைக்கிள்கள் நிறுத்தப்படுவதால் சந்தையை குத்தகைக்கு எடுத்தவருக்கு பாதிப்பு ஏற்பட் டுள்ளது. எனவே சைக்கிள் பாதுகாப்புக்கு ஒரு நிரந்தரமான இடத்தை சபை அமைத்துக் கொடுக்க வேண்டும்.
சாவற்கட்டு சந்தையைப் பொறுத் தவரை ஒரு சிறிய கட்டடத்தில் ஆரம்பகாலம் தொட்டு வசதியீனங்கள் மத்தியில் இயங்கி வருகிறது. இந்த சந்தையை அபிவிருத்தி செய்வதன் மூலம் மக்களும் வியாபாரிகளும் நன்மையடைவதுடன் பிரதேசசபையின் வருமானத்தையும் அதிகரிக் கலாம் என்று பல தடவை தெரிவித்திருந்த போதிலும் இன்றுவரை அபிவிருத்தி செய் யப்படவில்லை. வரவு - செலவுத் திட்டங்களிலும் பணம் ஒதுக்கப்படவில்லை.
எனவே இரு சந்தைகளையும் முன்னுரிமை அடிப்படையில் அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகளை பிரதேச சபை மேற்கொள்ள வேண் டும்.
இரு சந்தைகளையும் அபி விருத்தி செய்யாமல் மானிப்பாய் சந்தையை அபிவிருத்தி செய் வதற்கு அனுமதிக்கமாட்டோம் என்றும் தெரிவித்துள்ளார். (வ-115)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

# மரண அறிவித்தல்

## அருட்சகோதரி மொறின் கொலின்ஸ் - தி.கு



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், யாழ். திருக்குடும்ப சபையைச் சேர்ந்தவருமான அருட்சகோதரி மொறின் கொலின்ஸ் வியாழக்கிழமை (24.07.2014) இறைபதம் இணைந்து விட்டார்.
இவரது பூதவுடல் நாளை (28.07.2014) காலை 7.30 மணிக்கு பூதவுடல் யாழ். திருக்குடும்ப மாகாண இல்லத்தில் இருந்து புனித மரியாள் பேராலயத்துக்கு எடுத்துச் செல்லப்படும். தொடர்ந்து அங்கு 9.00 மணிக்கு இவரது ஆன்ம இளைப்பாற்றுக்காக ஒப்புக் கொடுக்கப்படும். இரங்கல் திருப்பலியின் பின்னர் புனித யாழ். மரியாள் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

**தகவல்:** அருட் சகோதரி கிறிஸ்ரா மரியதாஸ் (மாகாண தலைவி)
121, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

### விற்பனைக்கு

ஐஸ்கிறீம் உற்பத்தி செய்யும் இ'பந்திரமும்,டீப் பிறீசரும் விற்பனைக்குண்டு.
தொடர்பு:- 077 0592241

### விற்பனைக்கு

மிகவும் நல்ல நிலையில் உள்ள மகேந்திரா பிக்கப் NP PQ xxxx விற்பனைக்குண்டு
T.P: 075 039 5688
(50313) (10)

# மரண அறிவித்தல்

## கந்தசாமி குலேந்திரன்

இலக்கம் 104/1, பத்திரகாளி கோவில் ஒழுங்கை, வண்ணார் பண்ணை யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், வெள்ளவத்தையை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி குலேந்திரன் நேற்றுமுன்தினம் (25.07.2014) வெள்ளிக்கிழமை அகல மரணமானார்.
அன்னார் காலஞ்சென்ற கந்தசாமி- செல்லம்மா தம்பதியரின் அன்புப் புதல்வரும்,மதிகலாவின் கணவரும், பாலச்சந்திரன், யோகச்சந்திரன், இராசேந்திரன், யோகராணி,விசிதா, சுகிதா, திரவியராசா ஆகியோரின் அன்புச் சகோதரரும், மேகலா, செல்வராணி, காலஞ்சென்ற சந்திரமோகன்,மணிவண்ணன், ஸ்ரீதரன், லதா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.
அன்னாரின் இறுதிச் சடங்கு இன்று (27.07.2014) ஞாயிற்றுக்கிழமை மதியம் 12.00 மணிக்கு 104/1 பத்திரகாளி கோயில் ஒழுங்கையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.
104/1, காளி கோயிலடி லேன்,
வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்.

# மரண் அறிவித்தல்

## இளையதம்பி அப்புத்துரை



கோப்பாய் மத்தியைப் பிறப்பிடமாகவும், விசுவமடு, துன்னாலை சந்திரவளவை வதிவிடமாகவும் கொண்ட இளையதம்பி அப்புத்துரை நேற்று (26.07.2014) சனிக்கிழமை காலமானார்.
அன்னார் இளையதம்பி-ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், சுப்பிரமணியம்-தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், சோதிமலரின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சண்முகதாஸ் மற்றும் தபேந்திரதாஸ், லோகீசன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சோபிதா, மயூரதா ஆகியோரின் மாமனும், பார்த்தீபனின் பேரனுமாவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.07.2014) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியளவில் நடைபெற்று, துன்னாலை பிட்டிதூ மயானத்துக்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சந்திர வளவு, துன்னாலை
கரவெட்டி

(C/15254)(10)

தகவல்:
குடும்பத்தினர்.

## வீடு, காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணத்தில் மாநகரசபைக்கு உட்பட்ட பகுதியில் ஏ9 வீதிக்கு அண்மையில் 2½ பரப்புடன் கூடிய வீடும், ஏ9 வீதியை முகப் பாகக் கொண்ட 5 பரப்பு வெற்றுக்காணியும் (2, 3 பரப்புகளாக அல்லது முழுமையாக ) நியாயமான விலைக்கு விற்பனைக்குண்டு.

தொடர்பு: 071 828 5692

ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணியின் பின் தொடர்பு கொள்ளவும். (சி/15556) (3.6.4)

## நிரந்தர வேலைவாய்ப்பு

* றேடியோ மெக்கானிஷம் (T.V,Radio திருத்தக்கூடியவர்கள்)
* இலத்திரனியல் தெரிந்தவர்கள் (Wiring செய்யத் தெரிந்தவர்கள்)

நிரந்தர முழுநேர வேலைவாய்ப்பு (திங்கள் முதல் சனி வரை. EPF, ETF உட்பட மேலதிக கொடுப்பனவுகள்)

தொடர்புகளுக்கு: (சி15242) (12.3.6)

MICRO PC SYSTEMS
MICRO Pc SYSTEMS (Pvt) Ltd, No.218, Hospital Road, Jaffna. Tel: 021 222 5893

## சூரியன் திருமணசேவை

எங்களிடம் அரச/தனியார் மற்றும் வெளி நாட்டு ஆண்/பெண் குறிப்புக்களும் உள்ளன.

தொடர்புகளுக்கு:
சூரியன் திருமணசேவை (50294) (12.3.6)
இல.561, K.K.S.வீதி,
மனோகராச்சந்தி அருகில், யாழ்ப்பாணம்.

## தேவை

செங்கற்றாழை (சிவப்பு பிள்ளைக் கற்றாழை), பாம்றி விதைகள், மலைவேம்பு விதைகள் தேவை.
நியாயமான விலையில் வாங்கப்படும்.
ஆதரவு கைத்தொழில் நிலையம், மீசாலை.
077 735 1148 (சி15243) (12.3.6)

## VACANCY

Tours & Travels நிறுவனத்திற்கு பெண் நிர்வாக உத்தியோகத்தர்கள் தேவை.
வயதெல்லை - 18-28
தகைமை - O/L, A/L
உங்கள் சுயவிவரக்கோவையினை 7 நாள்களுக்குள் கிடைக்குமாறு அனுப்பி வைக்கவும்.
இல. 106, பலாலி வீதி,
தபாற்பெட்டி சந்தி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். (50297) (7.6.3)

## ஓய்வூதியர்களுக்கான கடன் திட்டம் பற்றிய கலந்துரையாடல்

பான் ஏஷியா வங்கியினால் அறிமுகப்படுத்தப்பட்டு கடந்த ஒரு வருட காலத்திற்கும் மேலாக வெற்றிகரமாக செயற்படுத்தப்பட்டு வரும் ஓய்வூதியர்களுக்கான கடன் திட்டம் பற்றிய கலந்துரையாடல் எதிர்வரும் 29.07.2014 காலை 9.30 மணியளவில் யாழ் இந்துக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

இக் கடனின் சிறப்பம்சங்களாவன
* ரூபா 500,000/- வரையான கடன் தொகை
* மிக இலகுவான செயற்படுத்தல்
* பிணைகள், பொறுப்புக்கள் தேவையற்றது
* 70 வயது வரையான கடன் மீளச் செலுத்தும் வசதி

நிபந்தனைகள்
* ரூபா 10,000/- இற்கு அதிகமான ஓய்வூதியம் பெறுபவர்கள் விண்ணப்பிக்கலாம்
* கடன் பாதுகாப்புத் திட்டம் ஒழுங்கு செய்யப்படும்
(ஒழுங்குகள் அனைத்தும் வங்கியினால் செய்யப்படும்.)

எமது வங்கியில் ஏற்கனவே கடனைப் பெற்றவர்களும் மேலதிகக் கடன் தொகையைப் பெறும் வாய்ப்புகள் உண்டு.

இவை பற்றிய மேலதிக விபரங்களை கலந்துரையாடலில் பங்கு பற்றி அறிந்து கொள்ள அன்புடன் அழைக்கின்றோம்.

| | |
|---|---|
| கலந்துரையாடல் நடைபெறும் இடம் | யாழ் இந்துக் கல்லூரி |
| காலம் | 29.07.2014 காலை 9.30 மணி |
| மேலதிக விபரங்களுக்கு | பான் ஏஷியா வங்கி, 570, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 021 4 925 118, 021 4 925 119, 021 4 976 777 |

பான் ஏஷியா வங்கி

## நல்லூர் திருவிழாவை முன்னிட்டு யாழ்.கன்னாதிட்டி சொவ்லொஜிக் காட்சியறையில் எங்குமில்லாதவாறு விசேட விலைக்கழிவுகள்.....



Panasonic LED TV 32"
ஆரம்ப கட்டணம் 8000/=
வட்டி இல்லாத மாதாந்தக் கட்டணம்
4000x12




Panasonic LED TV 24"
ஆரம்ப கட்டணம் 6000/=
வட்டி இல்லாத மாதாந்தக் கட்டணம்
2420x12





SAMSUNG
Single Door
குளிர்சாதனப் பெட்டி
ஆரம்ப கட்டணம் 6000/=
வட்டி இல்லாத
மாதாந்தக் கட்டணம்
3170x12



SAMSUNG
Double Door
குளிர்சாதனப் பெட்டி
ஆரம்ப கட்டணம் 8000/=
வட்டி இல்லாத
மாதாந்தக் கட்டணம்
5000x12

12 மாத வட்டி இல்லாத குறைந்த ஆரம்பக் கட்டணங்களுடன் Japan தொழில்நுட்பத்துடன் கூடிய 5 வருட உத்தரவாதத்துடன் கூடிய Panasonic AC கள் விசேட விலையில் உண்டு இன்றே முந்துங்கள்.

குறிப்பு : இலவசமாகப் பொருத்துதல்
3 இலவசமாக சேவீஸ் என்பன செய்து தரப்படும்.

(C/15240)(7.6.3)

softlogic
BEST IN THE BUSINESS

இல. 63, கன்னாதிட்டிச் சந்தி,
யாழ்ப்பாணம்.
T.P : 021 567 1108, 077 739 7734
077 048 2041, 077 169 7203

## சிரார்த்த தினமும் நூல் வெளியீடும்

கரணவாய், ஜூலை 27
தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் முன்னாள் தலைவரும் ஓய்வு நிலை ஆசிரியருமான க.கிருஷ்ணபிள்ளையின் மூன்றாம் ஆண்டு சிரார்த்த தினமும், 'சமூக விடுதலைப் போராளி' என்ற நூல் வெளியீடும் இன்று ஞாயிறு மாலை 4 மணிக்கு இடம் பெறவுள்ளன.

அல்வாய் கிழக்கு பாரதி சனசமூக நிலைய மண்டபத்தில் சி.வேலாயுதம் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் வடமாகாண சபை உறுப்பினர்களான வே.சிவயோகன், அ.பரஞ்சோதி, ஓய்வு பெற்ற கோட்டக் கல்விப் பணிப்பாளர் த.தவேந்திரராசா, கிளிநொச்சி கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி பிறேமா மதுரநாயகம் மற்றும் வடமராட்சி தெற்கு-மேற்கு பிரதேச சபை உறுப்பினர் க.பரஞ்சோதி உட்பட பலரும் உரையாற்றவுள்ளனர். (ஓ-108)

## நல்லூர் உற்சவ கலந்துரையாடல்

நல்லூர் கந்த சுவாமி கோயில் வருடாந்த மஹோற்சவத்துக்கான முன்னாயத்த ஏற்பாடுகள் தொடர்பான இரண்டாவது கலந்துரையாடல் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு முதல்வர் அலுவலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

மாநகர முதல்வர் தலைமையில் கலந்துரையாடல் நடைபெறும். (ஓ)

## மருத்துவ முகாம்

வவுனியா, ஜூலை 27
வடமாகாண சுதேச சுகாதார அமைச்சின் அனுசரணையுடன் வவுனியா மாவட்ட சித்த ஆயுள்வேத பாதுகாப்புச் சபையால் நடத்தப்பட்டு வரும் மருத்துவ முகாம் இன்று ஞாயிறு காலை 8.30 மணி முதல் மதியம் ஒரு மணி வரை ஓமந்தை பிரதேசத்துக்கு உட்பட்ட மாதப்பணிக்கல் மகிழங்குளம் பலநோக்கு மண்டபத்திலும் கோயில் குஞ்சுக்குளம் பலநோக்கு மண்டபத்திலும் நடைபெறும். (ஓ-421)

## சாரதிகள் தேவை

ஓட்டோ மற்றும் வான் செலுத்தக்கூடிய சாரதிகள் தேவை.
ஆதரவு கைத்தொழில் நிலையம், மீசாலை.
077 735 1148

## அரைக்கும் ஆலை (மில்) இயந்திரங்கள் விற்பனைக்கு

இயங்கிக் கொண்டிருக்கும் (மில்) இயந்திரங்கள் விற்பனைக்கு உண்டு அதே இடத்தில் நடத்த விரும்புபவர்களும் தொடர்பு கொள்ளலாம். (50299) (7.6.3) தொடர்பு : 075 735 1477

## எடிசலாற் நிறுவனத்தில் வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் எடிசலாற் நிறுவனத்தில் வேலை செய்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். வெளி மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு தங்குமிட வசதி வழங்கப்படும். ஆரம்ப சம்பளம் 35,000/= தொடக்கம். தகைமைகள் தேவையில்லை.

எடிசலாற்
முதலாம் மாடி, கார்கில்ஸ் சதுக்கம், ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (41333) (10.6.3)
தொடர்புகளுக்கு: 072 222 9119 (யாழ்)
072 238 7770 (யாழ்), 072 2343 777 (கிளி/முல்லைத்தீவு)

## எதிர்காலத்தில் பசுமை உலகம் (தனியார்) நிறுவனம் வரைவுள்ளது

எமது நிறுவனத்தின் திட்டங்களான விவசாயம், விலங்கு வேளாண்மை, மரவளர்ப்பு, கைத்தொழில் சார்ந்த திட்டங்களினூடாக எமது மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தக்கூடிய புதிய திட்டங்களை நாம் அறிமுகப்படுத்த உள்ளோம். அந்த வகையில் எம்மோடு இணைய விரும்பும் பயனாளிகள் எம்மோடு உடனடியாக 077 330 3337 எனும் இலக்கத்தினூடாக அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளும்படி வேண்டப்படுகின்றீர்கள். (50142) (12.3.6)

திட்ட அமுலாக்கல் பிரிவு,
எதிர்காலத்தில் பசுமை உலகம் (தனியார்) நிறுவனம் வரைவுள்ளது,
இல.133, கண்டி வீதி, கச்சேரி, யாழ்ப்பாணம்.

## வீடும் காணியும் விற்பனைக்குண்டு

சுன்னாகம் கே.கே.எஸ்.வீதி, ஜெற் மோட்டோர்ஸ் அருகில் சுற்றுமதிலுடன் கூடிய பெரிய நாற்சார் வீட்டுடன் பதின்நான்கு பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (50315) (12.3.6)
தொடர்பு:0041 7883 24545/077 729 9384

## HYUNDAI Accent CAR விற்பனைக்கு



NP HC-xxxx, Silver Colour, A/C, Power Shutter, Auto, 1500cc, CD/MP3/Radio/wp Player, Sub woofer, Leather Seat in good Conditioned car for sale. Price-1, 160, 000/= (1.16 million) Negotiable

Contact: Somasundaram Avenue, Chundikuli, Jaffna.
T.P: 077 790 3090

அவர்களை நான் என் திருமலைக்கு அழைத்து வருவேன்;
இறைவேண்டல் செய்யப்படும் என் இல்லத்தில் அவர்களை மகிழச்செய்வேன்;
அவர்கள் படைக்கும் எரிபலிகளும் மற்றபலிகளும் என் பீடத்தின் மேல் ஏற்றுக்கொள்ளப்படும்;
ஏனெனில், என் இல்லம் மக்களினங்கள் அனைத்திற்கும் உரிய
"இறை மன்றாட்டின் வீடு" என அழைக்கப்படும். (எசாயா : 56/7)



மடு தியான இல்லத்தில்...
இந்திய (சாலக்குடி) டிவைன் தமிழ் தியான குழுவினர்
வழிநடத்தும் நற்செய்தியும், குணமளிக்கும் சிறப்பு தியானம்.

நற்செய்தி அளிப்பவர்கள்



Rev. Fr. Sebastian Anchumurlyil



Rev. Fr. Arun Louis

Bro. Livingston, Bro. Antony

| தியான விபரங்களுக்கு | தியான விபரம் |
|---|---|
| Speiman Fernando Colombo Phone : 0777 35 98 92 | திகதி : ஆகஸ்ட் 20,21,22,23,24,(2014) இடம் : தியான இல்லம் (மடு திருத்தலம்) |

போக்குவரத்து பதிவுகளுக்கு

| Thomas Rodrigo | Jesper Fernando | Jerom Fernando |
|---|---|---|
| 02, Jempettah Street, Colombo | Colombo | Colombo |
| Phone : 011 243 23 00 | Phone : 077 34 550 96 | Phone : 0774 393 264 |

## சங்கானை ஆலயத்தில் திருட்டு

சங்கானை, ஜூலை 27

சங்கானை பிரதான வீதியில் அமைந்துள்ள கூடத்து மனோன்மணி அம்பாள் ஆலயத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு ஆதி மூல விக்கிரகம் மற்றும் ஒரு விக்கிரகம் புரட்டப்பட்டு அதன் கீழ் உள்ள ஐம்பொன் தகடுகளும், அம்பாள் விக்கிரகத்தின் தாலி, பொட்டு என்பனவும் திருடப்பட்டுள்ளன. (ஒ-29)

4 ஆவது பிறந்தநாள் வாழ்த்து

உதயகுமாரன்-ராகினி

தம்பதியரின் இரட்டைச் செல்வங்களான




தங்களது நான்காவது பிறந்த தினத்தை மந்துவில் கிழக்கிலுள்ள தமது இல்லத்தில் இன்று (27.07.2014) ஞாயிற்றுக்கிழமை வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார்கள்.
இவர்கள் பல்கலைகளும் கற்றுப் பல்லாண்டு காலம் வாழ இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துபவர்கள்:

அப்பா, அம்மா, பெரியன்ரா, பெரியப்பா, சின்னன்ரா, குட்டிச்சித்தா-சித்தி, ரவி மாமா- அத்தை, சிறி மாமா-அத்தை, வித்தி மாமா-அத்தை, அக்கராயன் மாமா-அத்தை, தாத்தா- அம்மம்மா, அப்பம்மா, அஜந்தன் அண்ணா (கவிஸ்), கார்த்தி அண்ணா, அக்காமார், மச்சான்மார், மச்சான்மார், கண்டா அம்மம்மா, வினோ சித்தி.

நா.உதயகுமாரன்(தேவன்)
மந்துவில் கிழக்கு, கொடிகாமம்.

(C/15249)(10.6)

அசத்தலான ஆடித் தள்ளுபடி

நம்ப முடியாத விலைக்கழிவில்
அனைத்து ஆடைத் தினுசுகளும்
எதிர்வரும் 16.08.2014 வரை
விற்பனை செய்யப்படுகின்றன.
சாறி 500/= இல் இருந்து 2000/=
கவுண் 200/= இல் இருந்து
பஞ்சாபிசெற் 700/= இல் இருந்து
ஸ்கேட் 400/=இல் இருந்து
பஞ்சாபி சில்க் துணி 500/= இல் இருந்து
ரீசேட் 400/= இல் இருந்து
பெனாரிஸ் சாறி2000/=
பட்டோலா சாறி 1000/=
மேலும் அனைத்து வகையான புடைவை வகைகளுக்கும் விஷேட ஆடி கழிவுகள் வழங்கப்படும்.
உங்கள் தெரிவுகளுக்கு இன்றே முந்துங்கள்
விதம்விதமக அள்ளிச் செல்லுங்கள்.



T.K த.குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ்
44, 42, Grand Bazaar, Jaffna. Tel: 222 8847, Fax: 222 8847
(சி/15494)(4.3.6)

## கிளிநொச்சியில் சிறுவர் சங்கமம்

கிளிநொச்சி, ஜூலை 27

சமூக செயற்பாட்டு மையத்தின் சிறுவர் கழகங்கள் இணைந்து வழங்கும் "சிட்டுக்களின் சிந்தனையில் சிறுவர் சங்கமம்" நிகழ்வு இன்று பிற்பகல் 2 மணிக்கு கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் நடைபெறும்.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை மகப்பேற்று நிபுணர் வைத்திய கலாநிதி க.குருபரனும், சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சி யுனிசெவ் நிறுவனத்தின் சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் ச.சர்மிலி, கிளிநொச்சி மகா வித்தியாலய அதிபர் அ.பங்கயற்செல்வன், சமூக செயற்பாட்டு மைய இணைப்பாளர் ந.சுகிர்தராஜ் ஆகியோரும் கலந்து கொள்வர். (ஒ-10)

## போதையில் இடையூறு; ரூபா 2,500 தண்டம்

யாழ்ப்பாணம்,ஜூலை 27

மதுபோதையில் பொது இடத்தில் அசிங்கத்தை ஏற்படுத்தினார்கள். பொதுமக்களுக்கு இடையூறு விளைவித்தனர் என்ற குற்றச்சாட்டில் இரு சந்தேகநபர்கள் நெல்லியடி பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டிருந்தனர். இவர்கள் இருவரும் வெள்ளிக்கிழமை பருத்தித்துறை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

நீதிவான் இருவருக்கும் தலா 2,500 ரூபா வீதம் அபராதம் விதித்ததோடு அபராதத் தொகையை செலுத்தத் தவறின் மூன்று மாத கால சாதாரண சிறைத்தண்டனையை அனுபவிக்க வேண்டும் எனவும் உத்தரவிட்டார்.

இதேவேளை கவனக்குறைவாக வாகனத்தைச் செலுத்தியதாக குற்றஞ்சாட்டி முற்படுத்தப்பட்ட சந்தேக நபர் ஒருவருக்கு பருத்தித்துறை நீதிமன்றம் ஆயிரம் ரூபா அபராதம் விதித்து தீர்ப்பளித்துள்ளது. (ஒ-109)

## பதிவுகளை மேற்கொள்ளவும்

யாழ்ப்பாணம்,ஜூலை 27

வடமாகாணம் தவிர்ந்த வேறு மாகாணங்களுக்கு பட்டதாரி ஆசிரியர் நியமனத்தை விரும்புகின்ற பல் கலைக்கழகப் பட்ட தாரிகள் எதிர்வரும் முதலாம் திகதிக்கு முன்பாக மாவட்டச் செயலகத்தில் (அறை இல.42) அமைந் துள்ள யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இணைத் தலை வர் அலுவலகத்தில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு வேண்டப்படு கின்றார்கள். பதிவுகளை மேற்கொள்ளும் பொழுது பின்வரும் ஆவணங்களின் பிரதிகளையும் கொண்டு வருதல் வேண்டு எனவும் இணைத் தலைவர் அலுவலகத்தின் இணைப்பாளர் கேட்டுக்கொண்டுள்ளார். சுயவிவரக் கோவை, பட்டச்சான்றிதழ், விரும்புரிமைக் கடிதம் (க)

வெற்றிடம்

ஒரு முன்னணி நிறுவனத்தில் லொறி சாரதி (Lorry Drivers) வெற்றிடங்கள் உள்ளன.
★ 03 ஆண்டுகள் அனுபவம் - 40 வயதுக்கு கீழ் இருத்தல் வேண்டும்.
(F/15564) (10) 0777 579 122 / 0775 563 640
31/6,1st Lane. Negombo Road, Oliyamulla, Wattala.

விற்பனைக்கு

மோட்டார் சைக்கிள் MD 90 இலக்கம் BAN-xxxx மற்றும் பாவித்த 400 ஓடுகள் விற்பனைக்குண்டு.
(50120) (10) T.P: 077 706 6487

பாராட்டி வாழ்த்துகின்றோம்



கலைவாணி வீதி,
வடலியடைப்பைச் சேர்ந்த
சாந்தலிங்கம் சுதர்சன் J.P.
(B.BA Hons.)
அவர்கள் 21.07.2014 அன்று மல்லாகம் நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்ததையிட்டு பாராட்டி வாழ்த்துகின்றோம்.
அவர் மேன்மேலும் பல பட்டங்களையும் பதவிகளையும் பெற்று நீடூழி காலம் சிறப்புடன் விளங்க வேண்டும் என்று வடலியடைப்பு ஸ்ரீ மகா காளி அம்மனை வேண்டி மனதார வாழ்த்துகின்றோம்.
Best Wishes
வாழ்த்துவோர்:
சாந்தலிங்கம் (அப்பா), இதயராணி (அம்மா), சயந்தன் (அண்ணா), சியாளினி (அண்ணி), சயந்தி (சகோதரி), யோகசுகிர்தன் (மைத்துனர்).
கலைவாணி வீதி,
வடலியடைப்பு.
(50300)(10.6.3)

மலேசியா

தமிழ் பேசும் பெண்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு
மலேசியாவில் உள்ள தமிழ் VIP வீடுகளுக்கு
தமிழ் பேசும் பணிப்பெண்கள் தேவை

| | |
|---|---|
| மாதாந்த சம்பளம் | RM 850 |
| இலங்கைப் பெறுமதிக்கு | ரூபா 36,000 |

- கடவுச்சீட்டு (Passport) - இலவசம்
- மெடிக்கல் (Medical) - இலவசம்
- இன்சூரன்ஸ் (Insurance) - இலவசம்
- விமான டிக்கட் (Air Ticket) - இலவசம்
- தங்குமிடவசதி (Accomodation) - இலவசம்
- உணவு (Food) - இலவசம்
- 2 வருட கால ஒப்பந்தம் (2 Years Contract)

பாஸ்போட் இல்லாதவர்கள் உரிய ஆவணங்கள் கொடுத்தால் இலவசமாக பாஸ்போட் செய்துதரலாம்
முற்றும் இலவசம்
Labour Licence No.1785
Rizviya Travels & Tours
No.74, Symonds Road, Maradana, Colombo - 10.
Tel: 011-3091521, Hotline: 077-3179592

மலிவு விற்பனை
Mega Sale






தம்ரோ, பியெஸ்ரா ஏக விநியோகஸ்தராகிய எங்களிடம்
★ நீங்கள் வாங்கும் ஒவ்வொரு Sofa செற்றிகளுடனும் 7500/= பெறுமதியான Coffee table இலவசம்.
★ நீங்கள் வாங்கும் ஒவ்வொரு மெத்தைகளுடனும் ஒரு தலையணை (Pillow) இலவசம்.
★ நீங்கள் வாங்கும் ஒவ்வொரு Damro Door களுடனும் ஒரு Door Lock இலவசம்.
★ Innovex TV மற்றும் Preethi Mixi, Stand Fan, Rice Cookers ஐ அதிகூடிய விலைக் கழிவுடனும் Damro உத்தரவாதத்துடனும் பெற்றுக்கொள்ளலாம்.
★ 32", 40", 50" LED TV களுடன் ஒரு DVD Player இலவசம்.
★ 25000/= க்கு மேற்பட்ட பெறுமதியான பொருள்கள் கொள்வனவு செய்தால் இலவசமாக விநியோக சேவை (Home Delivery) செய்யப்படும்.
★ Damro, Piyestra, Nilkamal, Phonix, Arpico ஆகிய பொருள்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

Jamuna Furniture
(C/15248)(10.6.3)
181, Navalar Road, Jaffna.
T.P.No: 021 222 1092, 077 757 4776

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## பொறுப்பற்றதனமாக நடந்து கொள்ளாதீர்கள்

காரைநகரில் 11 வயதுச் சிறுமி ஒருத்தி உட்பட இரு சிறுமிகள் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்ட சம்பவத்தை இலங்கை நாட்டின் பிரதமர் டி.எம். ஜயரத்ன "சிறியதொரு சம்பவம்" என்று நாடாளுமன்றத்தில் வர்ணித்திருப்பது கவலை கொள்ள வைப்பதுடன் அச்சப்படவும் வைக்கிறது.

ஒரு சிறுமி - அதிலும் பாடசாலைக்குச் சென்று வரும் பருவமடையாச் சிறுமி, காமுகன் ஒருவனால் ஈவிரக்கமின்றி வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டமை சிறியதொரு சம்பவமா? இந்த நாடு இந்தச் சம்பவத்தை அப்படித்தான் கணித்துக்கொள்ளப்போகிறதா? அப்படியென்றால், அதன் விழுமியம், இலங்கை பௌத்த நாடு என்று கொண்டாடுவோர் கூறும் ஒழுக்க விழுமியம் கேள்விக்குள்ளாகிறது.

சிறுவர்களை அவர்களது அப்பா, அம்மா, ஆசிரியர்கூடத் தண்டிப்பது தகாது என்று சொல்லும் காலத்தில் ஒரு சிறுமி வன்புணரப்பட்டிருப்பது சிறிய விடயம் என்று பொறுப்புள்ள ஒரு பிரதமர் இலங்கை நாட்டின் அதியுயர் நிறுவனத்தில் கருத்துத் தெரிவிக்கிறார் என்றால் அது பற்றி மக்கள் அனைவரும் வெட்கப்படவேண்டும்.

தனது வீட்டில் அல்லது தனது பேர்த்திக்கு இப்படி ஒரு சம்பவம் இடம்பெற்றால் அதனைச் சின்னதொரு விடயம் என்று கூறி ஒதுக்கிவிட பிரதமரால் முடியுமா என்கிற கேள்வி தன்னிச்சையாக எழுவதைத் தவிர்க்க முடியவில்லை.

பொறுப்பான பதவியில் உள்ளவர்கள், வழிகாட்டிகளாகச் செயற்பட வேண்டியவர்கள், இப்படிப் பொறுப்பற்ற விதத்தில் கருத்துக்களை உமிழ்வது எதிர்காலச் சந்ததியினர் பற்றிய கவலையை ஏற்படுத்துகின்றது.

அதேநேரத்தில், தன்னை வன்புணர்வு செய்தவர் நீலநிற சீருடை அணிந்த நபர் என்று பாதிக்கப்பட்ட சிறுமி கூறியதாக அரச ஆவணங்கள் சாட்சிப்படுத்துகின்றபோதும், கடற்படையினர் மீது நேரடியான குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளபோதும் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் சீருடை போன்ற உடையணிந்த ஒருவர் தூக்கிச் சென்ற சிறுமியைத்தான் கடற்படையினர் காப்பாற்றினர் என்று பிரதமர் முழுப் பூசனிக்காயை சோற்றில் மறைத்திருப்பது, இலங்கை நாட்டில் தமிழ் மக்களின் எதிர்காலம் என்ன என்ற அச்சத்தை ஏற்படுத்துகிறது.

சாதாரணமாகச் சுவரொட்டி ஒட்டினார்கள் என்பதற்காகவே புலிச் சந்தேகத்தில் ஒருவர் உடனடியாகக் கைது செய்யப்படும் யாழ்ப்பாணக் குடாநாட்டில், புலிச் சீருடையுடன் நடமாடிய ஒருவரை கடற்படையினர் தப்ப விட்டிருக்கின்றனர் என்று பிரதமர் நாடாளுமன்றத்தில் கூறுவது வியப்பளிக்கிறது.

புலிச் சீருடையுடன் ஒருவர் அந்தப் பகுதியில் நடமாடிய பின்னரும், அங்கு தேடுதல்களோ சுற்றி வளைப்புகளோ ஏதும் நடக்கவில்லை. அந்தப் புலிச் சந்தேகநபர் இதுவரையில் கைது செய்யப்படவும் இல்லை. அந்த அளவுக்கா பாதுகாப்பு வடக்கில் பலவீனமாக இருக்கிறது என்று பிரதமர் கருதுகிறார்?

ஆக, இவை எல்லாம் இட்டுக்கட்டிச் சோடிக்கப்படும் கதைகள் என்பது வெளிப்படையாகவே தெரிகிறது. பாதிக்கப்பட்டவள் தமிழ்ச் சிறுமி என்ற காரணத்தால் மட்டுமே பிரதமர் இப்படிப் பொறுப்பற்ற முறையில் பதில் சொல்லியிருந்தால், இலங்கை நாட்டில் சிறுபான்மை இனங்கள் ஒருபோதும் சம மதிப்புடன் நடத்தப்படப் போவதில்லை என்ற அச்சத்தை அது ஏற்படுத்து கின்றது.

போர் முடிந்த சூழலில் சிறுபான்மை இனங்களின் அச்சங்களைக் களைந்து அவர்களை அரவணைத்து, இந்த நாட்டின் குடிமக்களாக அவர்களையும் உணரச் செய்யவேண்டிய தலைவர்கள், சிறுபான்மை இனங்களை மேலும் அச்சமடைய வைத்து அநாதரவாக்கும் வகையில் நடந்துகொள்வது இலங்கையில் இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்தை சாத்தியமாக்கப் போவதுமில்லை.

கட்டுரை

# தமிழர்கள் எப்படி அரசை நம்புவது?





கந்தவனம் கோணேஸ்வரன்

வடமாகாண ஆளுநராக மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி மீண்டும் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டிருக்கிறார். இந்நியமனத் திகதியிலிருந்து அடுத்துவரும் ஐந்து வருடங்களுக்கு அவரே வடமாகாண ஆளுநராகச் செயற்படுவார். அவர் தானாகப் பதவியைத் துறந்தாலோ, அல்லது ஜனாதிபதியால் பதவிநீக்கம் செய்யப்பட்டாலோவன்றி அவரை யாரும் எதுவும் செய்துவிடமுடியாது.

ஆயினும், மாகாணத்தின் ஆளுநர் ஒருவரை அம்மாகாணம் சார்ந்த மாகாண சபையால் பதவிநீக்கம் செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்வதற்கு மாகாண சபைச் சட்டங்கள் இடமளித்திருக்கின்றன. ஆனால், அத்தகைய முயற்சிக்கு இலக்காகும் ஆளுநர்மீது, அரசமைப்பை வேண்டுமென்றே மீறியுள்ளார்; துர்நடத்தைக்கோ அல்லது ஊழற் பழக்க வழக்கத்துக்கோ குற்றவாளியாகவுள்ளார்; இலஞ்சத்தவறு அல்லது ஒழுக்கக்கேடு காரணமாக குற்றவாளியாகியுள்ளார் என்பவற்றுள் ஏதேனும் ஒன்றையாவது அந்த மாகாண சபையால் உறுதிப்படுத்த இயலுமாக விருந்தால் மாத்திரமே, ஆளுநரின் பதவி நீக்கம் தொடர்பான முயற்சிகளை மேற்கொள்ளக்கூடியதாக இருக்கும்.

அந்த முயற்சிகூட ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்படும் ஒரு வேண்டுகோளாக மட்டுமே அமையமுடியும். அந்த வேண்டுகோளோ அல்லது ஆளுநர் தொடர்பான ஆலோசனையோ மாகாணசபை ஒன்றால் சமர்ப்பிக்கப்படுமிடத்து அது கட்டாயமாக ஜனாதிபதியால் பரிசீலனைக்குட்படுத்தப்படும் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை. ஜனாதிபதி விரும்பினால் பரிசீலிக்கலாம்: இல்லையேல் கைவிடலாம். எனவே, தாம் அனுப்பிவைத்த தீர்மானம் என்னவாயிற்று என்று கேட்கும் உரிமைகூட மாகாணசபைக்குக் கிடையாது.


தமது பகுதி ஆளுநர் தொடர்பாக ஜனாதிபதிக்கு அனுப்பிவைக்கப்படும் ஆலோசனைக்கான முயற்சியைக்கூட இலகுவில் மேற்கொள்ளப்படமுடியாதவாறு பதின்மூன்றாம் திருத்தச்சட்டம் பலமான தடைகளை மாகாணசபைகளுக்குப் போட்டிருக்கிறது. இதனை மறுபுறமாகக் கூறுவதாயின், மாகாண சபைகள் சட்டங்களாலேயே ஆளுநர் பலமாகப் பாதுகாக்கப்படுகிறார் என்பதாகும்.

கடந்தவருட நவம்பரில் வடமாகாண சபை தனது ஆளுநர் தொடர்பாக ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்திருந்தது. அது ஏகமனதான தீர்மானமாகவும் அமைந்திருந்தது. எனினும், அது மாகாண சபைகள் குறிப்பிடும் சட்டங்களுக்கு அமைய ஆளுநருக்கெதிராக நிறைவேற்றப்பட்ட தீர்மானமன்று. ஆளுநரை பதவியிலிருந்து அகற்றுங்கள் என்று அந்தத் தீர்மானம் ஜனாதிபதியைக் கோரவில்லை. ஆளுநர் தமது பதவிக்குப் பொருத்தப்பாடாக நடந்து கொள்ளவில்லை என்ற குற்றச்சாட்டுகள் எவையும் அங்கே முன்வைக்கப்படவில்லை. மாறாக, படைத்துறை சாராத ஒரு சிவில் ஆளுநரைத் தாருங்கள் என்று கோருவதாகவே அது அமைந்திருந்தது.

அந்தக் கோரிக்கையில் படைத்துறை சாராமை மட்டும்தான் ஆளுநரின் சிறப்புத் தகுதியாக வடமாகாண சபையால் வலியுறுத்தப்பட்டிருந்தது. அதில் இன, மத, மொழி எவையும் கருத்திற் கொள்ளப்படவில்லை. இத்தீர்மானத்தின் நோக்கம் சுமுகமான ஓர் ஆட்சி முறையை வடமாகாணத்தில் நிலைபெறச் செய்வதாகவே இருந்தது.

அந்தத் தீர்மானம் பலவழிகளிலும் பெறுமதி மிக்கதாக அமைந்திருந்தது. மாகாணசபை வரலாற்றில் முன்னர் எந்தவொரு மாகாணசபையும் பெற்றிராத ஏகமனதான உணர்வுகளை அத்தீர்மானம் தாங்கியிருந்தது. ஒருசிவில் அலுவலரை ஆளுநராக நியமிப்பதில் ஜனாதிபதிக்கு எந்தச் சிக்கலும் இருக்கப் போவதில்லை. இராணுவ மிடுக்குடன் செயற்படாமல் மக்களின் விருப்பங்களை உணர்ந்து இசைவுவழியில் அவர் செயற்படுவார் என்பதைத் தவிர வேறுபாடுகள் எவையும் அமையப் போவதில்லை.

வடபகுதி மக்களுக்கோ, மக்களின் அதீத பெரும்பான்மை ஆதரவுடன் மாகாண சபையைக் கைப்பற்றியிருக்கும் வடமாகாணசபைப் பிரதிநிதிகளுக்கோ ஆளுநர் என்ற பதவியின்மேல் எவ்வித வெறுப்பும்கிடையாது. அவர்கள் விரும்புவதெல்லாம் தங்களையும் இந்த நாட்டுப் பிரஜைகளாக மதித்துச் செயற்படத்தக்க அதிகாரி ஆளுநராக வரவேண்டும் என்பதுதான். கிழக்கு மாகாணத்தில்கூட ஆளுந்தரப்புப் பிரதிநிதிகள் எவ்விதக் கருத்தைக் கொண்டிருந்தாலும் தமிழர்கள் அனைவரும் முஸ்லிம் மக்களில் பெரும்பான்மையோரும் ஒரு சிவில் ஆளுநரைத்தான் விரும்புகிறார்கள்.



இலங்கையில் ஒன்பது மாகாண சபைகள் இயங்குகின்றன. அவற்றுள் ஏழு மாகாணசபைகள் சிங்கள மக்களைப் பெரும்பான்மைக் கொண்டனவாகவும் ஏனைய இரு மாகாண சபைகள் தமிழ்பேசும் மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்டனவாகவும் அமைந்திருக்கின்றன. சிங்கள மக்களைப் பெரும்பான்மையாகக்கொண்ட மாகாண சபைகள் சிவில் ஆளுநர்களின் மேற்பார்வையில் இயங்கும்போது தமிழ்பேசும் மக்களின் மாகாணசபைகளான வடக்கு, கிழக்கு மாகாணசபைகளுக்குப் படைத் தரப்பு அதிகாரிகளே ஆளுநர்களாக நியமனம்பெறுவது சங்கடமான விடயம்.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சிங்களவர் அல்லாத மாகாணசபைப் பிரதிநிதிகள் அரச நலன்களுக்கெதிரான நகர்வுகளை மேற்கொண்டு விடுவார்கள் என்ற அச்சத்தால் தமிழ் முஸ்லிம் பிரதிநிதிகளின் அதி காரத்துக்குட்பட்டிருக்கும் வடக்கு, கிழக்கு மாகாணசபைகளுக்கு படைத்துறைசார் ஆளுநர்கள் நியமனம் பெறுகிறார்கள் என்றால் அது தமிழர்கள் மீதும், முஸ்லிம் கள்மீதும் அரசுக்கு நம்பிக்கையில்லை என்ற உண் மையைப் பட்டவர்த்தனமாக வெளிப்படுத்தி நிற்கிறது.

படைத்துறை அதிகாரிகளைத்தான் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு ஆளுநர்களாக நியமிப்பேன் என ஜனாதிபதி முடிவெடுத்தால் எந்தச் சட்டத்தாலும் அதனைத் தடுத்துவிட முடியாது. ஆனால், அத்தகைய ஆளுநர்கள் மக்களின் மனங்களில் இடம்பெற்றவர்களாக ஒருபோதும் காணப்படமாட்டார்கள். அவர்களுக்குக் கீழ் பணிபுரியும் அதிகாரிகளின் மனதிற்கூட ஆளுநராகப் பதவி வகிப்பவர் படைத்துறைசார் மிடுக்குடைய அதிகாரியாகத்தான் இடம்பெறுவாரேயொழிய வேறுவிதமாகவல்ல என்பது தான் உண்மை. வடக்கு, கிழக்கு மாகாண சபை அமைந்திருந்த காலத்தில் ஆளுநராகப் பணியாற்றிய காமினி பொன்சேகா இன்றும்கூட மக்களால் பெருமையுடன் பேசப்படுகிறார் என்பதை யாரும் நிராகரித்துவிட முடியாது. இதுதான் ஆளுநர் பணியின் வெற்றி.


இப்போது வடக்கு, கிழக்கு மாகாணங்களின் படைத்துறைசார் அதிகாரிகளான ஆளுநர்களால் ஆற்றப்படும் கடமைகள் அனைத்தும் சிவில்துறைசார் ஆளுநர்கள் நியமனம் பெற்றாலும் தங்கு தடையின்றி ஆற்றப்படும்.

ஆனால், இலங்கை அரசு இவற்றை விரும்பவில்லை. வடக்கு, கிழக்கு மக்களை இரண்டாந்தரக் குடிமக்களாகவே நடத்த விரும்புகிறது. வடக்கு, கிழக்கு நிலங்கள் யுத்தத்தின் மூலம் கையகப்படுத்தப்பட்ட நிலங்களாகத்தான் அரசுக்குத் தெரிகிறது. வடக்கு கிழக்கு தன்நாட்டின் ஒருபகுதி என்றோ, வடக்கு கிழக்கு மக்கள் தம்மக்கள் என்றோ அரசு நடைமுறையில் கொள்வதாகத் தெரியவில்லை.

தமிழ்மக்களின் மனங்களை வெல்லத்தக்க சிறுசிறு முயற்சிகளைக் கூட எடுக்க விரும்பாத அரசு, தெரிவுக்குழு வைத்திருக்கிறோம் வாருங்கள்: பேசுங்கள்: என்றால் தமிழ்ப்பிரதிநிதிகளால் எப்படி அரசை நம்பிப் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ள முடியும்? சிவில் அதிகாரி ஒருவரை வடக்கின் ஆளுநராகத் தருவதாக வடக்கு முதலமைச்சருக்கு வாக்களித்து விட்டு இன்று அதனைப் புறந்தள்ளிச் செயல்படும் ஜனாதிபதியை தமிழ் மக்கள் எவ்வாறு நம்பமுடியும்? தமிழர்கள் தாங்களும் இந்த நாட்டின் சமபிரஜைகளே என்று எவ்வாறு பெருமைகொள்ள முடியும்? இவற்றுக்கெல்லாம் அரசில் அங்கம்வகிக்கும் நல்லிணக்க அமைச்சர்கள்தாம் பதில்கூற வேண்டும்.



# உணவு வகைகளை சரியான முறையில் நாம் தெரிவு செய்வது எவ்வாறு?



இலங்கையில் பல வகையான பழங்கள், மரக்கறிகள், தானியங் கள் மற்றும் வெவ்வேறு உணவு வகைகள் வருடம் முழுவதும் கிடைக்கக் கூடியதாக இருப்பினும், நாம் உயர்ந்தளவு ஆரோக்கியம் சார் சுட்டிகளை அடைந்திருப்பினும், இலங்கையர்களின் போசாக்கு மட்டமோ அன்றி போஷாக்கு சார் சுட்டிகளோ ஏனைய நாட்டவர்களுடன் ஒப்பிடுகையில் எந்த வகையிலும் திருப்தி அளிக்கக் கூடிய வகையிலோ அல்லது மகிழ்ச்சி அடையக் கூடியதாகவோ இல்லை.

எங்களுடைய நாட்டில் பிறக்கும் குழந்தைகளில் 16.6 வீதமானவர்கள் குறைந்த பிறப்பு நிறையுடையவர்களாக இருப்பதுடன், கர்ப்ப காலத்தின்போது தாயின் மந்த போசனை குறையூட்டமே இதற்கு பிரதான காரணமாக உள்ளது. மேலும் எமது நாட்டில், சனத்தொகை பரம்பல் மற்றும் சமூக மதிப்பீடு 2006-2007 இன்படி, 15 வீதமான ஐந்து வயதுக்கு குறைந்த பிள்ளைகள் குறுகிய கால குறையூட்டத்துக்கு உட்படுகின்றனர். விற்றமின், கனியுப்பு குறைபாடு உடையவர்கள் எங்கள் நாட்டில் அதிகமாக உள்ளதுடன், குருதிச்சோகை மற்றும் விற்றமின் 'ஏ' குறைபாடு என்பன பிரதான போசணை பிரச்சினைகளாகவும் உள்ளன.

குறையூட்டத்தைத் தவிர, கட்டுப்பாடு இல்லாமல், உணவுகளை உட்கொள்வதனால் உருவாகின்ற மிகையூட்டமும் எங்களுக்கிடையில் அதிகரித்துச் செல்கின்றது. 15 வயதிலிருந்து 49 வயது வரையான பெண்களுக்கிடையில் அதிக நிறையும், அதீத உடற்கொழுப்பும் 31 வீதம் வரை உயர்வடைந்துள்ளது. உடற்பயிற்சி, சுறுசுறுப்பான செயற்பாடுகளின்மை மற்றும் எண்ணெய், மா, சீனி போன்றவற்றை அதிகமாக உட்கொள்ளுதல், அதிக நிறை ஏற்படுவதற்கான காரணங்களாகும். மேலும் அதிக நிறையினால் ஏற்படுகின்ற நீரிழிவு நோய், இதயநோய், உயர்குருதி அமுக்கம், பாரிசவாதம் மற்றும் புற்றுநோய் போன்ற நோய்கள் அதிகரித்துக்கொண்டே செல்கின்றன.

போசணை சம்பந்தமான சகல பிரச்சினைகளிலிருந்தும் மீள்வதற்கான ஒரேவழி நாங்கள் எல்லோரும் ஆரோக்கியமான உணவுப் பழக்கத்தைப் பற்றி அறிந்து, அவற்றை பழக்கப்படுத்துதல் ஆகும். நாம் உட்கொள்ளும் உணவுகள் ஆறு உணவுப்பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன. எல்லா உணவுப் பிரிவுகளிலும் உள்ள உணவுகளைப் பெற்றுக்கொள்வதுடன் அவற்றை அவசியமான அளவுகளில் தெரிவு செய்யக்கூடிய ஆற்றலானது ஆரோக்கிய உணவுப் பழக்கவழக்கங்கள் எனப்படும். ஆரோக்கியமான உணவுப் பழக்கமானது தனிநபரின் ஆரோக்கியமான, வினைத்திறன் மிக்க நீண்ட ஆயுட் காலத்துக்கு வழிசெய்யும். ஆரோக்கியமான உணவுப் பழக்க வழக்கங்களாவன:-

1. **வெவ்வேறு வகையான உணவுகளைத் தினமும் உணவுக்கு எடுத்துக்கொள்ளுங்கள்**
   நாம் உண்ணும் உணவானது ஆரோக்கியத்துடன் தொடர்புபட்டுள்ளதுடன், அது உடல் தொழிற்பாடு உடல், உள வளர்ச்சிக்கு உதவுகின்றது. மேலும் சகல உணவு வகைகளும் சிற்சில போசணைப் பொருள்களைக் கொண்டிருப்பினும் ஓர் உணவானது சகல போசணை பொருள்களையும் கொண்டிருப்பதில்லை. எனவே, தினமும் பல்வகையான உணவுகளை உண்பதன் மூலம் அவசியமான சகல போசணைக் கூறுகளையும் பெற முடியும்.

2. **இயலுமான அளவுக்கு குறைவாக சோறு, தானியம் மற்றும் மா சேர்ந்த உணவுகளைத் தினமும் மூன்று முறை எடுத்துக் கொள்ளுங்கள்.**
   எமது பிரதான உணவு சோறு ஆகும். இதைத் தவிர தானிய வகைகள், கிழங்கு வகைகளை நாம் உண்பதுடன், இவை சக்தி வழங்கும் பிரதான மூலங்களாகும்.

3. **மரக்கறிகள் மற்றும் பழங்களை ஒவ்வொரு நாளும் எடுத்துக்கொள்ளுங்கள்**
   இலங்கை வாசிகளான எமக்கு கிடைத்த மகத்தான வரப்பிரசாதங்களில் ஒன்று, வருடம் முழுவதும் பலவகையான பல சுவையான பழங்கள் மற்றும் மரக்கறிகள் கிடைத்தல் ஆகும்.

4. **மீன், முட்டை, கருவாடு, இறைச்சி, பருப்பு வகைகள் போன்றவற்றில் ஒன்றையோ அல்லது சிலவற்றையோ தினமும் உட்கொள்ளுங்கள்**
   மீன், முட்டை, இறைச்சி, பருப்பு வகைகள் போன்றவற்றையும் கடலை, கௌபி, பயறு போன்ற விதைவகைகளும், போஞ்சி, பயற்றங்காய், சிறகவரை, சோயா போன்ற அவரை வகைகள் புரதம் அதிகமுள்ள உணவுகளாகும். இவை உடல் வளர்ச்சி, புதிய கல உருவாக்கம், இழையங்களின் தேய்வுற்ற பகுதியைப் புதுப்பித்தல், உடலின் தொழிற்பாடுகளைச் செயற்படுத்தல், நோயிலிருந்து பாதுகாத்தல், நோய் எதிர்ப்பு பதார்த்தங்களைச் செயற்படுத்தல் என்பவற்றுக்கு உதவும்.

5. **பால் அல்லது பால் உணவுகளை தினமும் உட்கொள்ளுங்கள்**
   பால் மற்றும் யோகட், தயிர், வெண்ணெய், மோர் முதலிய பாலுற்பத்திப் பொருள்கள் என்பு, பல் வளர்ச்சிக்கு அவசியமான Ca,P ஐ சத்துக்களை அதிகளவில் கொண்டிருப்பதுடன் அவை காபோவைதரேற்று, புரதம், விற்றமின்களை அதிகளவில் கொண்டுள்ளன. பாலாடையில் அதிகளவுவிற்றமின் 'ஏ' உள்ளது. எனவே தினமும் பால் மற்றும் பாலுற்பத்திப் பொருள்களை உள்ளெடுத்தல் முறையான உடற்பயிற்சி என்பன என்பு வளர்ச்சிக்கும், என்பு வலுப்பெறவும் உதவும்.


6. **உங்களுடைய உணவுக்காக நடுநிலை அளவான கொழுப்பை உட்கொள்ளுங்கள்**
   எண்ணெய் மற்றும் கொழுப்பு உடலுக்கு அத்தியாவசியமான உணவுக் கூறுகளாக இருப்பதுடன் விற்றமின் ஏ, டி, கே, ஈ போன்ற கொழுப்பில் கரையும் விற்றமின்கள் அகத்துறிஞ்சவும் அவசியமாக உள்ளது. மேலும் கொழுப்பு, உயர் சக்திப் பெறுமானம் உடையதாக இருப்பதுடன் உணவுக்கு ருசி, மணம் மற்றும் உணவு உண்பதற்கான நாட்டத்தையும் ஏற்படுத்துகின்றது. கொழுப்பின் மூலம் பெறப்படும் சக்தி ஒரு நாளில் உணவிலிருந்து பெறப்படும் மொத்த சக்தியில் ஆகக் கூடியளவு 30 வீதம் மட்டுமே இருக்க முடியும்.


7. **சீனி, இனிப்பு வகைகள், உப்பு மற்றும் உப்புச் சேர்ந்த உணவுகள் பாவிப்பதைக் குறையுங்கள்**
   நாம் இனிப்புச்சுவைக்கு அதிக விருப்புடையவர்களாக இருப்பதுடன் அடிக்கடி தேநீர், கோப்பி முதலிய பானங்களும் பருகுகின்றோம். செயற்கையான குடிபானங்கள் (சோடா) அல்லது சீனி சேர்த்து தயாரிக்கப்பட்ட போத்தலில் அடைக்கப்பட்ட பழச்சாறுகள், ஐஸ்கிறீம், கேக், பிஸ்கட், சொக்லேட், கற்கண்டு போன்றவை அதிக அளவில் சீனியைக் கொண்டுள்ளன. எனினும் அதிக சீனி சேர்த்த உணவுகளை அடிக்கடி உள்ளெடுத்தல் நல்லதல்ல. நாம் உணவுகளை சுவையாக்க உப்புச் சேர்ப்பதுடன் உப்பிலிருந்து சோடியம் என்ற கனியுப்பு கிடைக்கின்றது. உணவுகளில் உடலுக்குத் தேவையான அளவு சோடியம் அடங்கியுள்ளதால், செயற்கையான உப்புப் பாவனை அவசியமற்றது. ஆனாலும் தினமும் ஒரு தேக்கரண்டி (5 கிராம்) அளவு உப்பை உணவுடன் சேர்க்க முடியும்.

8. **சுத்தமான நீரைக் கூடுதலாகப் பருகுங்கள்**
   எங்களின் உடலில் 2/3 பங்குக்கும் விட அதிகமான அளவில் இருப்பது நீர் ஆகும். மேலும் நீர், உடலினுள் நடைபெறும் வெவ்வேறு பரிமாற்றச் செயற்பாடுகளுக்கு அத்தியாவசியமான ஊடகமும் ஆகும். எனவே கொதித்தாறிய வடிகட்டிய நீர் அல்லது மழைநீரை நாளொன்றுக்கு 1.5 - 2 லீற்றர் வரை பருகுதல் அவசியமாகும். உடலின் நிறைக்கு ஏற்ப பருக வேண்டிய நீரின் அளவும் வேறுபடும்.

9. **சுத்தமானதும், பாதுகாப்பானதுமான உணவுகளை உட்கொள்ளுங்கள்**
   நாம் மிகவும் வேலைப்பளுவுடனான இயந்திர வாழ்க்கையை வாழுகின்றமையால், எமது சம்பிரதாயமான, தனித்துவமான உணவுப் பழக்கத்திலிருந்து விலகி, உணவு விடுதிகளில் சமைக்கப்பட்ட (restaurant foods) உணவுகள், உடனடி உணவு வகைகள் அல்லது முன்னரே தயாரிக்கப்பட்டு விற்கப்படும் உணவுகளைப் பயன்படுத்தப்படிப்படியாக பழக்கப்பட்டுக் கொண்டு இருக்கின்றோம். இந்த வகையான உணவுகளின் பழுதடையக் கூடிய தன்மை வீடுகளில் தயாரிக்கப்படும் உணவுகளை விட மிக அதிகமாகும்.

10. **உடற்பயிற்சி மற்றும் சுறுசுறுப்பான வாழ்க்கை மூலம் விரும்பத்தக்க, ஆரோக்கியமான உடல்நலத்தைப் பேணிக் கொள்ளுங்கள்**
   தனிநபர் ஒருவராயின், வயது பிரிவுக்கு ஏற்றவாறு அவருடைய அல்லது அவளுடைய ஆரோக்கியத் தன்மையையும் போசணைத் தன்மையையும் தீர்மானம் செய்வதற்கு, உடலில் நிறை மிகவும் முக்கியமான காரணியாகும்.
   உயரத்துக்கு ஏற்ற நிறையைப் பேண, போசாக்குள்ள உணவுகளை அவசியமான அளவில் உள்ளெடுத்தலும், தினமும் உடற்பயிற்சி செய்தலும் அவசியம் ஆகும்.





மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு அறிவுறுத்தல்களையும் பற்றி விரிவாக அடுத்து வரும் வாரங்களில் காண்போம்.

போசாக்கியலாளர்
தாரணி முரளிஹரன்,
(Mphil - Reading (Food & Nutrition))
நீரிழிவு சிகிச்சை நிலையம்,
யாழ். போதனா வைத்தியசாலை.

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**நாளை**

ஆடி-12 திங்கட்கிழமை 28.07.2014
திதி: பிரதமை கா.06.35 வரை
நட்சத்திரம்: ஆயிலியம் மு.இ.09.29 வரை
சுபநேரம்: 12.02 - 01.32 வரை
இராகுகாலம்: 07.32-09.02 வரை

**மேடம்:** நட்பு வட்டாரம் விரிவடையும். உறவினர்களின் வருகையுண்டு. பண வரவு திருப்தி தரும். வியாபாரத்தில் மறைமுக எதிர்ப்புகளைச் சமாளிப்பீர்கள். பிரபலங்களைச் சந்திப்பீர்கள். உத்தியோகத்தில் மகிழ்ச்சியுண்டு.

**இடபம்:** சில தினங்களாகத் தடைப்பட்டு வந்த காரியங்களெல்லாம் இன்று சுமுகமாக முடியும். உறவுகளுக்கு மத்தியில் மதிக்கப்படுவீர்கள்.

**மிதுனம்:** வீண் செலவுகளைத் தவிர்ப்பீர்கள். பேச்சில் தன்னம்பிக்கை பிறக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரியின் ஆதரவைப் பெறுவீர்கள். முன் கோபம் குறையும். வெளியூர்ப் பயணங்கள் மகிழ்ச்சிதரும்.

**கடகம்:** சிக்கனமாக இருக்க வேண்டுமென்று நினைத்தாலும் அத்தியாவசியச் செலவுகள் அதிகரிக்கும். சிலவற்றுக்கு உங்கள் அவசர முடிவுகள் தான் காரணம் என்பதை உணர்வீர்கள். உத்தியோகத்தில் ஓரளவு வேலைச்சுமை குறையும்.

**சிங்கம்:** வெளிவட்டாரத்தில் அலைச்சல் அதிகரிக்கும். வியாபாரத்தில் வேலையாள்களால் பிரச்சினைகள் வரும். உத்தியோகத்தில் பொறுப்புகள் அதிகரிக்கும். எதிலும் முன்யோசனையுடன் செயற்படப் பாருங்கள்.

**கன்னி:** திட்டமிட்ட காரியங்களைச் சிறப்பாகச் செய்து முடிப்பீர்கள். பணம் தேவையான அளவு இருக்கும். சகோதர வகையில் மகிழ்ச்சி தங்கும். நண்பர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும்.

**துலாம்:** எதிர்பார்த்த இடத்திலிருந்து பணம் வரும். புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** திறமையுடன் செயற்பட்டு சில காரியங்களை முடிப்பீர்கள். மனக்குழப்பங்கள் நீங்கும். உத்தியோகத்தில் மேலதிகாரியின் பாராட்டைப் பெறுவீர்கள். முன்கோபம், வீண் அலைச்சல் விலகும்.

**தனுசு:** கடந்த காலத்தில் கிடைத்த நல்ல வாய்ப்புகளையெல்லாம் சரியாகப் பயன்படுத்தாமல் விட்டுவிட்டோமே என்றெல்லாம் வருந்துவீர்கள். உங்களின் அணுகுமுறையை மாற்றுங்கள். உத்தியோகத்தில் சில சூட்சுமங்களைக் கற்றுக் கொள்வீர்கள்.

**மகரம்:** கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும். வெளியூரிலிருந்து நல்ல செய்தி வரும். உத்தியோகத்தில் மேலதிகாரி மதிப்பார். எதிலும் நிதானித்துச் செயற்படப் பாருங்கள்.

**கும்பம்:** வெளியூரிலிருந்து நல்ல செய்தி வந்து சேரும். உத்தியோகத்தில் வேலைச் சுமை குறையும். ஆடம்பரச் செலவுகளைத் தவிர்க்கப் பாருங்கள். நட்பு வட்டாரம் விரிவடையும்.

**மீனம்:** தன்னம்பிக்கையுடன் செயற்பட்டு சில வேலைகளைச் செய்து முடிப்பீர்கள். உங்களைச் சுற்றியிருப்பவர்களால் இருந்து வந்த தொல்லைகள் அகலும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு


| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | | 2 | 7 | | | 6 | 3 | |
| | | | | | | | 4 | 9 |
| | | | 4 | | 2 | 1 | | |
| | 8 | 9 | | | | | 1 | 6 |
| 7 | 4 | | 5 | 8 | 1 | | 9 | 2 |
| 5 | 3 | | | | | 4 | 8 | |
| | | 7 | 9 | | 5 | | | |
| 8 | 6 | | | | | | | |
| | 9 | 5 | | | 6 | 7 | | 3 |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 8 | 3 | 9 | 2 | 6 | 7 | 5 | 1 |
| 5 | 1 | 6 | 3 | 7 | 8 | 4 | 9 | 2 |
| 9 | 7 | 2 | 1 | 4 | 5 | 8 | 6 | 3 |
| 3 | 2 | 9 | 5 | 1 | 7 | 6 | 8 | 4 |
| 7 | 6 | 4 | 8 | 9 | 3 | 1 | 2 | 5 |
| 1 | 5 | 8 | 4 | 6 | 2 | 3 | 7 | 9 |
| 8 | 4 | 7 | 2 | 5 | 1 | 9 | 3 | 6 |
| 2 | 3 | 1 | 6 | 8 | 9 | 5 | 4 | 7 |
| 6 | 9 | 5 | 7 | 3 | 4 | 2 | 1 | 8 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## பலாலி தெற்கு
# வயாவிளான் புனித யாகப்பர் ஆலய நூற்றாண்டு நிறைவு விழா சிறப்பு மலர்
## 1914 - 2014



### சிறப்பு வாழ்த்து

வயாவிளானில் வீற்றிருந்து வாளேந்திப் பகை விரட்டும் திருமறை வீரன் சந்தியோகுமையோர் ஆலய நூற்றாண்டு விழா அனைவருக்கும் உவகையூட்டி அருள் நிறையும் நாளாக அமைவதாக!

புனிதரின் சீடத்துவ பண்புகளையும், நீதியை நிலைநாட்டும் தாகத்தையும் பின்பற்றி சாட்சிய வாழ்வு வாழ யாழ் ஆயர் சமூகமும், குருக்கள், துறவிகள், இறைமக்கள், ஆலய நிர்வாகிகள், பங்கு மக்கள் அனைவரும் மனமகிழ்வுடன் வாழ்த்துகின்றனர்.

"ஆலயம் சிறக்கட்டும் ஆன்மீகம் வளரட்டும்"

### ஆசிச் செய்தி

வயாவிளான், பலாலி தெற்கு, புனித பெரிய யாக்கோபுவின் பெயரில் அமைந்துள்ள ஆலயத்தின் மக்கள் தமது ஆலயத்தின் அதாவது தமது விசுவாச வாழ்வின் நூறாவது ஆண்டு நிறைவை இவ்வருடம் கொண்டாடி மகிழும் வேளை இவ்வாசிச் செய்தியை வழங்குவதில் பெரு மகிழ்வடைகின்றேன்.

ஆலயங்களும், திருவழிபாடுகள் மற்றும் பக்தி முயற்சிகளும், பக்திச் சபைகளும், மனித வாழ்விற்கு அன்றாடம் நம்பிக்கை என்னும் உரமூட்டுகின்றன. தமது முன்னோருடைய குருதியினாலும் வியர்வையினாலும் கட்டியெழுப்பப்பட்ட இவ்வாலயம் திருமுழுக்கு, முதல் திருமணம் வரை அருட்சாதன வாழ்விற்கு வழி வகுத்த இவ்வாலயம் கடந்த 25 வருடங்களுக்கு மேலான இடப்பெயர்வு, புலப்பெயர்வு காரணமாக பொலிவிழந்து காணப்படுவதை எண்ணும் போது இவர்களுடைய மனவலியின் வேதனை எனக்குப் புரிகிறது.

இடம்பெயர்ந்து பல்வேறு துன்பங்களுடன் வாழ்ந்துவரும் இவ்வாலய மக்கள் மீண்டும் இந்த இடத்திற்குத் திரும்பிவந்து குடியமர, இறைவன் நல்லதொரு எதிர்காலத்தை வழங்க வேண்டும் என்று ஆசிக்கிறேன்.

அருட்தந்தை கு.யே.அன்ரனிபாலா
பங்குத்தந்தை - அச்சுவேலி.

### தோற்றமும் நூற்றாண்டும்

பலாலி தெற்கு, வயாவிளானில் அதியுயர் பாதுகாப்பு வலயப் பகுதியில் அமைந்துள்ள வெண்புரவி மீதேறி வாளேந்தி வெற்றி கொள் வீரரான புனித யாகப்பர் ஆலயத்திற்கு இன்று நூற்றாண்டு நிறைவு விழா எடுக்கின்றனர் ஆலய மக்கள். யாழ் ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் திருவிழா சிறப்புத் திருப்பலி நடைபெறும்.

இவ் ஆலயமானது மயிலிட்டி பங்குத்தந்தையாக பணிபுரிந்த அருட்திரு சந்தியாப்பிள்ளை அடிகளின் அனுசரணையுடன் சிலுவேஸ்திரி என்பவர் வழங்கிய காணியில் 1914ஆம் ஆண்டு சிறு ஓலைக் குடிசையில் ஆரம்பிக்கப்பட்டது. அப்பகுதி முன்னோர்களான மாட்டின்(இளையவி), சிலுவேஸ்திரி, பேனாட் (வெறுநாடு), பியோ சூசை, அலேசு அந்தோனி ஆகியோரின் கூட்டு முயற்சியால் வளர்ச்சி கண்டது.

இங்கு பணிபுரிந்த பங்குத் தந்தையர்கள் அருட்சகோதரிகளின் வழிகாட்டல் ஒத்துழைப்பும் அருட்பணிச் சபைகளின் ஆதரவும் மக்களின் விவசாயத் தொழில் வருமான பங்களிப்பும் சிரமதான உடல் உழைப்பும் ஒன்றுதிரண்டு 1930ஆம் ஆண்டு ஆரம்பித்த கற்கோயிலின் கட்டுமானம் 1980இல் பெருமளவு நிறைவடைந்து இன்று அருள்பொழியும் ஆலயமாக உயர்ந்து நிற்கிறது. யோ.அருளானந்தத்தின் முயற்சியால் பங்குப் பணிமனை உருவானது.

ஆலய வளர்ச்சியும் மக்களின் ஆன்மீக வாஞ்சையும் இறை அழைத்தலை ஊக்குவித்ததன் விளைவாக இரு குருக்களும் இரு அருட்சகோதரிகளும் இறைபணி புரிகின்றனர்.

24 ஆண்டு கால இடர்பெயர்வில் ஆலயம் சேதமுற்று பொலிவிழந்து நின்றாலும் இறைவனின் வல்லமை அனைத்தையும் வெற்றி கொண்டு சிதறிய மக்கள் சேர்ந்து வாழ மீள்குடியமர்வுக்கு வழி வகுக்கும் என்ற நம்பிக்கையுடன் நூற்றாண்டு விழா மகிழ்வான நன்றியுடன் முன்னெடுக்கப்படுகிறது.

சிலுவை யுத்தத்திற்கு மானசீகமாக தலைமைதாங்கி திருமறைக்கு எதிரான சக்திகளைத் தோற்கடித்த போர்வீரன் புனிதயாகப்பர் தடைகளைத் தகர்த்து அருள்பொழிவாராக.

தொகுப்பு : எஸ்.யேசுதாஸ்

சிறப்புற வாழ்த்தும் மண்ணின் மைந்தர்கள்

**யாழ் எலக்ரோனிக்ஸ் வோச் வேக்ஸ்**
கடிகார விற்பனையாளரும், திருத்துநரும்.
இல.55, 57, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே : 021 561 8114

**நியூ நெல்சன் லேணர்ஸ்**
முதல்தர சாரதியப் பயிற்சி நிறுவனம்
இல. 89, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.
கிளைகள் : சாவகச்சேரி, சுன்னாகம்.
நெல்லியடி, வல்வெட்டித்துறை.

(39640)(7.6.3)


Hero
கேளிக்கை
உலகின்
புதிய பரிணாமம்
அறிமுகப்படுத்துகின்றோம் கண்களை கவரும் விதத்தில் அமையப்பெற்ற புதிய ஹீரோ ப்ளஷர், நவீன வசதிகளுடன்
ஓட்டிச்செல்லுங்கள் புதிய புத்துணர்ச்சியுடன்
புதிய ஹீரோ ப்ளஷர் உங்கள் மனதை கொள்ளை கொள்ளும் விதத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளது.
புதிய மாற்றங்களின்றி வாழ்வின் புத்துணர்ச்சி ஏது?
புதிய
Pleasure
The light 'n' zippy scooter
2014
அறிமுக விலை
ரூ. 178,563 + vat
Hero
5
WARRANTY
கைப்பேசிகளை
சார்ஜ் செய்ய
ஏற்ற வசதிகள்
டியுப் லெஸ்
டயர்கள் மற்றும்
தரமான
ப்ரேக் முறை
லக்கேஜ் பெட்டியில்
லைட் வசதி
அழகிய மீற்றர் தொகுதி
C/15519
☎ : 011 5777000
நாடெங்கிலுமுள்ள் அபான்ஸ் ஹீரோ காட்சியறைகள் மற்றும் ஹீரோ விற்பனை முகவர்களிடமும் பெறலாம்.
Abans

## தையல் கணினி பயிற்சி

தேசிய இளைஞர் சேவைகள் மன்ற மாவட்ட தொழிற் பயிற்சி நிலையத்தினரால் தையல் மற்றும் கணினி (வன் பொருள், மென்பொருள்) ஆகிய பயிற்சிகளை நாளை திங்கட் கிழமை கைதடி- நுணாவில் தொழிற்பயிற்சி நிலையத்தில் ஆரம்பிக்கவுள்ளனர்.

ஆறு மாத காலப் பயிற்சி நெறியில் பங்குபற்ற விரும்பும் இளைஞர், யுவதிகள் அன்றைய தினம் வருகை தருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)

## கல்வி அடைவை அதிகரிக்கும் நோக்கில் அபிவிருத்தி மையம்

குருநகர், ஜூலை 27

யாழ்.சென்றோக்ஸ் சன சமூக நிலைய எல்லைக்குள் கல்வி கற்கும் பாடசாலை மாணவர்களின் கல்வி அடைவை அதிகரிக்கும் நோக்குடன் யாழ். சென் றோக்ஸ் கல்வி கலாசார அபிவிருத்தி மையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இதன் தலைவர் எஸ்.பீ. பீற்றர்போல் தெரிவித்தார்.

இந்தக் கல்வி கலாசார அபிவிருத்தி மையத்தின் ஆரம்பக் கூட்டம் அண்மையில் யாழ். சென் றோக்ஸ் சனசமூக நிலையத்தில் நடைபெற்றது.

தலைவராக எஸ்.பீ.பீற்றர் போல், உப தலைவராக பீ.அருள்நேசன், செயலாளராக திருமதி ஸ்ரெலா நித்திலநாயகம், உப செயலாளராக ஜே. மது, பொருளாளராக பி.ஸன் மார்சிங் ஆகியோர்கள் தெரிவு செய்யப்பட்டனர். நிர்வாக சபை உறுப்பினர்களாக 16 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

இதேவேளை யாழ். சென் றோக்ஸ் கல்வி கலாசார அபிவிருத்தி மையத்தினால் யாழ். சென் றோக்ஸ் சனசமூக நிலையத்தில் மாணவர்களுக்கான மாலை நேர வகுப்புக்கள் நடத்தப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தரம் 1 தொடக்கம் தரம் 5 வரையுள்ள மாணவர்களுக்கு இந்த வகுப்புக்கள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

## 494 பெண் நாய்களுக்கு கருத்தடை சிகிச்சை

### சண்டிலிப்பாயில்

வலி.தென்மேற்கு, ஜூலை 27

சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 494 பெண் நாய்களுக்கு கருத்தடை சத்திரசிகிச்சை செய்யப்பட்டுள்ளது.

வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் கட்டாக்காலி நாய்களின் இனப்பெருக்கம் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுவதுடன் மக்கள் நிம்மதியாக நடமாட முடியாத நிலையும் தோன்றியுள்ளது. கட்டாக்காலி நாய்களின் கடிக்கு இலக்கான பலர் சிகிச்சை பெற்று வந்துள்ளனர்.

இந்த நிலையில் கட்டாக்காலி நாய்களின் இனப்பெருக்கத்தைக் கட்டுப்படுத்த முன்வந்துள்ள சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி, பெண் நாய்களுக்கான கருத்தடை சத்திரசிகிச்சை செய்வதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டிருந்தார்.

இதன் அடிப்படையில் கொழும்பிலிருந்து வரவழைக்கப்பட்ட மிருக வைத்திய குழுவினர் சண்டிலிப்பாய் பிரதேசத்தில் கடந்த ஒரு வார காலமாக பெண் நாய்களுக்கான சத்திரசிகிச்சை மேற்கொண்டனர். கட்டாக்காலி நாய்கள், வளர்ப்பு நாய்கள் உட்பட 494 பெண் நாய்களுக்கு கருத்தடை சத்திர சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. (வ-115)

## பயணிக்க முடியாத நிலை உதயபுரம் கிராம பாதை

கொழும்புத்துறை, ஜூலை 27

கொழும்புத்துறை உதயபுரம் கிராமத்துக்கான கடற்கரையோரமாக அமைந்துள்ள பிரதான போக்குவரத்துப் பாதை மிகவும் சேதமடைந்து மக்கள் பயணிக்க முடியாத நிலை காணப்படுவதாக விசனம் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த வீதி இதுவரை தார் வீதியாக அமைக்கப்படவில்லை. கட்டட இடிபாடுகள் மற்றும் மண்கொண்டு அமைக்கப்பட்டது. இந்த நிலையில் நீண்ட காலமாக கவனிப்பின்றி மேடு பள்ளங்கள் ஏற்பட்டு போக்குவரத்துச் செய்ய முடியாது சேதமடைந்து காணப்படுகிறது. அதேவேளை - கடற்கரையோரமாகச் செல்லும் இந்த வீதி கடல் வெள்ளம் அதிகரிக்கும்போதும் மழை காலங்களிலும் அரிப்புக்கு உள்ளாகி சேதமடைவதாக மக்கள் சுட்டிக் காட்டுகின்றனர். நூற்றுக்கு மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வரும் உதயபுரம் பகுதிக்கான பிரதான பாதை இதுவாகும். மக்களின் வசதி கருதி இந்த வீதியைப் புனரமைக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (வ-135)

## கட்டி முடிக்கப்பட்ட சுற்று மதிலுக்கான நிதியை பிரதேச சபையே செலுத்தும் நிலை

### படையினரால் அடாத்தாக பிடிக்கப்பட்ட பிரதேச சபைக்குரிய காணியில்


வலி.வடக்கு, ஜூலை 27

வலி.தென்மேற்கு பிரதேசத்தில் பாதுகாப்புப் படையினரால் அடாத்தாகப் பிடித்து வைத்திருக்கும் பிரதேச சபைக்குச் சொந்தமான 40 பரப்புக் காணியில் ஏற்கனவே கட்டி முடிக்கப்பட்ட சுற்று மதிலுக்குரிய பணத்தை ஒப்பந்தகாரருக்கு பிரதேச சபையே வழங்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

இது குறித்து ஆராய்ந்த நிதிக் குழு சுற்றுமதிலில் ஏற்பட்டுள்ள வெடிப்புகளுக்குரிய பணத்தைக் கழித்து மிகுதிப் பணத்தை ஒப்பந்தகாரருக்கு வழங்கலாம் என்று பரிந்துரை செய்ததை அடுத்து பணத்தை வழங்குவதற்கு பொதுச் சபை உறுப்பினர்கள் அனுமதி வழங்கியுள்ளனர்.

வலி.தென்மேற்கு பிரதேசத்தில் பண்டத்தரிப்பு பிரதேச மருத்துவமனைக்கு அருகில் காடாப்புலத்திலுள்ள பிரதேச சபைக்குச் சொந்தமான 40 பரப்புக் காணியைப் பாதுகாக்கும் நோக்குடன் பிரதேச சபை காணியைச் சுற்றி 40 லட்சம் ரூபா செலவில் சுற்று மதிலை அமைத்துள்ளதுடன், பல லட்சம் ரூபா செலவில் அந்தக் காணியில் கொல்களத்தையும் அமைத்திருந்தது.

இந்த நிலையில் மேற்படி காணியை சட்ட விரோதமான நிலையில் பிரதேச சபையின் அனுமதியின்றி பாதுகாப்புப் படையினரால் அபகரித்து, அங்கு நிலை கொண்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (வ-115)




மிகக்குறைந்த வட்டியில் அதிகூடிய பணம்
பொன் LOAN
24 கரட் 33,000/- வரை
22 கரட் 30,000/- வரை
(011) 4 667 222
பான் ஏஷியா வங்கி
www.sarva.lk


# மனதிற்கு எவ்வித சுமையும் இல்லாமல் ஓய்வு பெறுங்கள்

BOC அபிமான
ஓய்வூதியத் திட்டம்

நீங்கள் எத்துறையில் பணியாற்றினாலும் மாதாந்தம் ஓய்வூதியம் உங்கள் கையில். இச் செயற்திட்டத்தின் கீழ் 18 வயதிற்கு மேற்பட்டவராயின் நீங்கள் மாதாந்தம் ஒரு தொகையை சேமித்து ஓய்வூதியக் காலத்தில் நிரந்தரமான ஓய்வூதியத்தை அல்லது வேலையில் இருந்து ஓய்வு பெறும் சந்தர்ப்பத்தில் கிடைக்கும் கொடுப்பனவுகளை தொகையாக வைப்பு செய்து அடுத்த மாதத்திலிருந்தே ஓர் நிரந்தரமான ஓய்வூதியத்தை பெறுங்கள்.

| செயற்திட்ட இல | நன்மைகள் கிடைக்கப்பெறும் வயது | நன்மைகள் முடிவுப்பெறும் வயது | நன்மைகள் கிடைக்கப்பெறும் கால எல்லை |
|---|---|---|---|
| 01 | 55 | 65 | 10 (120 தவணைத் தொகை) |
| 02 | 55 | 70 | 15 (180 தவணைத் தொகை) |
| 03 | 60 | 70 | 10 (120 தவணைத் தொகை) |
| 04 | 60 | 75 | 15 (180 தவணைத் தொகை) |
| 05 | 55 | வாழ்நாள் முழுவதும் ஓய்வூதியத் தொகை | |
| 06 | 60 | வாழ்நாள் முழுவதும் ஓய்வூதியத் தொகை | |
| 07 | 55 வயதிற்கு மேல் | அடுத்து வரும் மாதத்திலிருந்து 10 வருடங்களுக்கு ஓய்வூதிய நன்மைகள் (120 தவணைத் தொகை) | |
| 08 | 55 வயதிற்கு மேல் | அடுத்து வரும் மாதத்திலிருந்து 15 வருடங்களுக்கு ஓய்வூதிய நன்மைகள் (180 தவணைத் தொகை) | |
| 09 | 55 வயதிற்கு மேல் | அடுத்து வரும் மாதத்திலிருந்து வாழ்நாள் முழுவதும் ஓய்வூதிய நன்மைகள் | |

மனதில் எவ்வித பயமும் இல்லாமல் பெருமிதத்துடன் வாழ்க்கையை உணர்வுபூர்வமாக அனுபவியுங்கள். நீங்களும் இன்றே இலங்கை வங்கியில் அபிமான ஓய்வூதிய திட்டம் ஒன்றை ஆரம்பியுங்கள்.




www.boc.lk

தலைமைக் காரியாலயம், "இலங்கை வங்கிச் சதுக்கம்"
இல 01, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 01

அழைப்பு நிலையம்
(+94) 011 220 4444

இலங்கை வங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்

# கிராம அலுவலர்களுக்கு மோட்டார் சைக்கிள்கள்

கிராம அலுவலர்களுக்கு மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்படவுள்ளன என்று பொதுநிர்வாக அமைச்சினால் சுற்றறிக்கை ஒன்று மாவட்ட செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இது சம்பந்தமாக பிரதேச செயலாளர்களினால் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற பகுதி நாள் கூட்டத்தில் கிராம அலுவலர்களுக்கு பிரதேச செயலர்களால் வாசித்துக் காட்டப்பட்டுள்ளது.

இதற்கான கட்டணம் மானி யமாக வழங்கப்படவுள்ளதா? அல்லது சந்தை விலையில் வழங்கப்பட்டவுள்ளதா? தீர்வையற்ற முறையில் வழங்கப்படவுள்ளதா? என்ற விவரங்கள் எவையும் வழங்கப்படாமையால் கிராம அலுவலர்கள் எதுவும் புரியாமல் உள்ளனர். (ஓ-86)







SINGER
Tefal Prestige KENWOOD SINGER SISIL Moulinex BEKO KRUPS
SISIL SL-4MIXGR Mixer Grinder ரூ. 7,699/-
SINGER KAEASYBLEN Blender ரூ. 4,999/-
SISIL SL-SHMS949 Bowl Mixer ரூ. 4,999/-
SINGER KA-SKA3002 Food Processor ரூ. 8,499/-
MADE IN FRANCE
Moulinex MXDD100141 Stick Mixer ரூ. 3,699/-
KENWOOD KN-JE680 Juicer ரூ.12,999/-
KENWOOD KN-JE280 Citrus Press ரூ. 3,499/-
SINGER Prisma Jug Kettles ரூ.1,499/- முதல்
KA-PRISMA1.7SS
KA-PRISMA-1.7
KA-PRISMA-1.2
Moulinex MXTT110031 Pop-up Toaster ரூ. 3,199/-
SINGER KA-SST032 Sanwich Maker ரூ. 1,799/-
SISIL SL-SST082 Sandwich Maker ரூ. 1,999/-
SINGER SRC-1018HS Rice Cooker ரூ. 3,199/-
SINGER SLMC-18DSLHS Multi-Cooker ரூ. 8,999/-
அனைத்து சமையலறை உபகரணங்களுக்குமான
ஒரே கொள்வனவு நிலையம்
உலகத்தரமான நாமங்களையுடைய விசாலமான தெரிவுகளையும் ஒப்பிட முடியா தயாரிப்பு வரம்பையும்
நம்பிக்கையான சிங்கர் உத்தரவாதத்துடன் பெற்றுக் கொள்ளுங்கள்
Prestige Pressure Cookers ரூ.799/-
PCD-80SS
PCP100
PCP-HAND48
PCP-COMB3875
SINGER SIH-S217C Induction Cooker ரூ.7,999/-
MADE IN FRANCE
Tefal
Prestige Non-Stick Cookware ரூ.599/-
KENWOOD KN-KMC010 Kitchen Machine ரூ. 79,999/=
SINGER GCB8402 Gas Oven ரூ. 56,599/=
BEKO B-HIZM64120SX Built-in Oven Hobb ரூ. 35,999/=
BEKO B-CWB6441XN Built-in Hood ரூ. 19,999/=
KRUPS KR.XP5240 Coffee Machine ரூ. 29,999/=
MADE IN FRANCE
Tefal Actifry TF-FZ706226 Fryers ரூ. 44,999/=
Electric Oven
SINGER ST034BHT ரூ. 11,199/=
Microwaves
SINGER SMW23GA9 ரூ. 12,399/=
Gas Cookers. ரூ. 2,699/= முதல்
SISIL SL-S203
HITACHI H-MPH-21R1
SINGER STT-300S
நிபந்தனைகளுக்குட்பட்டது
நம்பிக்கையான SINGER உத்தரவாதத்துடன்
011 5 400 400
http://www.singersl.com
SINGER Plus


Atlas
tools for success...
அட்லஸ் தாளில்
தாயின் நற்குணத்தை எழுதி
வெற்றிபெற்ற
சிறந்த 10 வெற்றியாளர்கள்
எமது வாழ்த்துக்கள்!
Atlas
அன்புள்ள அம்மா
அ
வீ. எழிலரசி
புலோலி - வடமேற்கு, தம்பசிட்டி, பருத்தித்துறை
ரவினந்த ஷிவனியா
இல.67, பெனிதுடுமுள்ள, நாவலப்பிட்டிய
ஈ. சுகன்யா
வைத்தியசாலை வீதி, மன்னார்
ஜே. சிந்துஜா
கரம்பொன் - கிழக்கு, வைத்தியசாலை வீதி, ஊர்காவற்றுறை
எம். எஸ். எப். ரய்ஹானா
எம். என். எப். ஷிரோசியா
இல. 101, வவுனியா வீதி, கியூலேகடே, ஹொறொவ்பொத்தான
பீ. உஷான்திகா
கருவில் வீதி, ஊர்காவற்றுறை, யாழ்ப்பாணம்
டீ. திக்ஷான்
இல. 15, அலுவலக வீதி, கலஹா
கஜனி இலங்கோ
காலைக்கோவிலடி, அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி
வத்சலா
சக்தி இல்லம், பெண்கள் விடுதி, இல. 72,C3, கந்தவல வீதி, இரத்மலானை
C/13322


100% வரை நிதியுதவி
சகல
HYBRID
வாகனங்களுக்கும் அதிசிறந்த குத்தகை வசதி
அல்ஃபலாஹ் வழங்கும் விசேட இஜாரா குத்தகை சேவை
லங்கா ஒறிக்ஸ் பினான்ஸ்
0115 500 786
الفلاح
AL-FALAAH
ISLAMIC FINANCIAL SERVICES



வவுனியா கோயில்குளம் இந்துக் கல்லூரியின் உயர்தர மாணவர் ஒன்றியத்தால் நடத்தப்பட்ட உயர்தர மாணவர்களுக்கான விருந்துபசார நிகழ்வு கல்லூரியின் சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்றபோது. (ஒ-402)



கிளிநொச்சி பொது மருத்துவமனையில் நட்பு நிலையத்தை கிளிநொச்சி அரச அதி திருமதி றூபவதி கேதீஸ்வரன் கடந்த 14 ஆம் திகதி திறந்து வைத்து பின்ன உரையாற்றுகின்றார். (





வவுனியா மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் வருடாந்த இப்தார் நிகழ்வு வவுனியா முஸ்லிம் மகா வித்தியாலய பாடசாலையில் பிரதான மண்டபத்தில் இடம்பெற்றபோது நிகழ்வின் பிரதம விருந்தினராக வர்த்தக வாணிப கைத்தொழில் அமைச்சர் றிஸாத் பதியுதீன் கலந்து கொண்டு சிறப்பித்ததுடன் நிகழ்வில் கலந்து கொண்ட ஏனைய விருந்தினர்களையும் காணலாம். (ஒ-421)



தமிழர் பண்பாட்டு விழாவான ஆடிப்பிறப்பு விழா இயற்கையான சூழலில் முல்லைத் றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தில் பாடசாலை முதல்வர் அருட்சகோதரி நீற் தலைமையில் இடம்பெற்றது. மாணவிகளின் ஆடிப்பிறப்பு நடனத்தையும் மாணவ ளுக்கு ஆடிக்கூழ் வழங்குவதையும் கலந்து கொண்டவர்களையும் காணலாம்.





யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு நிகழ்வில் யாழ். ஆயருடன் லண்டன் சென் மேரிஸ் பல்கலைக்கழக பேராசிரியர்கள் டேவிட் வின்செம், ஜோண் லைடென் ஆகியோரும், இலங்கை சுங்கத் துறை உயரதிகாரி பசில் ஞானராஜும் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டார்கள். அதிதிகள் அழைத்துவரப்படுவதையும் கல்லூரி அதிபர் அருட் திரு ஜெறொ செல்வநாயகம் வருடாந்த அறிக்கை சமர்ப்பிப்பதையும் பிரதம அதிதி வெற்றிக் கிண்ணத்தைக் கையளிப்பதையும் காணலாம். (ஒ)





மன்னார் தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் குறும்பட இயக்குநரான அ.நிஸாந்தனால் தயாரிக்கப்பட்ட 'கவனம்' எனும் குறும்படம் மன்னார் நகர சபை மண்டபத்தில் வெளியீடு செய்யப்பட்ட போது... (ஒ-56)



புதுக்குடியிருப்பு பிரதேச கலைக்கதம்ப விழா புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் கலாசார உத்தியோகத்தர் றீ.பிரதீபன் தலைமையில் இடம்பெற்றபோது மாணவிகளின் பாம்பு நடனத்தையும், கவிஞர் யோ.புரட்சியின் படைப்புக்கள் பற்றி ஆய்வை அதிபர் சி.நாகேந்திரராசா நிகழ்த்துவதையும் காணமுடிகின்றது. (க)





வவுனியாவில் நடைபெற்ற இரு வீணை இசை அரங்கேற்றத்தில், அரங்க பூசை இடம்பெறுவதைய கலாவித்தகர் திருமதி யசோதா பாலேஸ்வரன், வீணாம்ருத கலையக இயக்குநர் திருமதி செந்தில் பரமசிவராஜா ஆகியோர் மங்கல விளக்கேற்றுவதையும் தமிழருவி த:சிவகுமாரன் தலைமையு யாற்றுவதையும் செல்விகள் சாம்பவி, காயத்திரி ஆகியோர் வீணைகளை இசைப்பதையும் சபையோரை காணலாம். (ஒ-4


## சுயதொழில்கள் தொடர்பான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூலை 27

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் வாழ்வாதார எழுச்சித் திட்டத்தின் கீழ் கால் நடைகள், கோழிவளர்ப்பு தொடர்பான பிரச்சினைகள் குறித்த கலந்துரையாடல் எதிர் வரும் 5 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு நல்லூர் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறும். இந்தக் கலந்துரையாடலின்போது சுயதொழில்கள் தொடர்பாக பயனாளிகளுக்கு மக்கள் வங்கி அதிகாரிகள் தெளிவுபடுத்தவுள்ளதால் பயனாளிகள் இதில் கலந்துகொள்ளுமாறு நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் அறிவித்துள்ளார். (வ-7)


## பால் பொருள் உற்பத்தியாளருக்கு இலவச பயிற்சி

நல்லூர் பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் பால்பொருள்கள், ரொபி, யோக்கட் போன்றவற்றை உற்பத்தி செய்வோர் அவை தொடர்பான பயிற்சிகளைப் பெற விரும்பின் நல்லூர் பிரதேச உதவித் திட்டமிடல் பணிப்பாளருடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளுமாறும் பயிற்சிகள் இலவசமாக வழங்கப்படும் என்றும் நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில் நந்தனன் தெரிவித்துள்ளார். (வ-7)



நாவற்காடு அச்சுவேலியில் உள்ள ஒருவரின் வீட்டில் ஐந்துமாத வளர்ச்சி கொண்ட தென்னம்பிள்ளை பாளை வந்து காய்களோடு காணப்படுகின்றது. இதனை மக்கள் ஆர்வத்தோடு பார்வையிடுகின்றனர். "இரண்டு வருடங்களால் காய்க்கும் என உறவினர் வழங்கிய தேங்காயில் இருந்து முளைத்த தென்னம்பிள்ளை 5 மாத வளர்ச்சியில் காய்த்திருப்பதாக" வீட்டு உரிமையாளரான செல்வநாயகம் தெரிவித்தார். (ஒ-11)

## மட்பாண்டத் தொழிலாளருடன் நடைபெற்ற கலந்துரையாடல்



நல்லூர் பிரதேச செயலகப் பிரிவில் மட்பாண்டத் தொழிலில் ஈடுபட்டுள்ள உற்பத்தியாளர்களுடனான சந்திப்பு கடந்த வாரம் இடம்பெற்றது.

நல்லூர் பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் இ.சுரேந்திரநாதன் தலைமையில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் மட்பாண்ட உற்பத்தியாளர்களுடன் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் பிரதேச பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர்.

மூலப் பொருள் பற்றாக்குறை வங்கிக் கடனுதவி தொடர்பாக உற்பத்தியாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து இதன் போது ஆராயப்பட்டதாக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் தெரிவித்தார். கல்வியங்காடு ஜே/109 கிராம அலுவலர் பிரிவில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது. (வ-7)

# விளை நிலங்களில் பயிர்களை அழிக்கும் கட்டாக்காலி கால்நடைகள்

### சாவகச்சேரி மக்கள் விசனம்

தென்மராட்சி, ஜூலை 27

சாவகச்சேரி பெருங்குளம், கிராம்புவில் பகுதிகளில் இரவு வேளைகளில் நடமாடும் கட்டாக்காலி மாடுகள் அங்குள்ள விளை நிலங்களில் புகுந்து பயிர்களை அழித்து வருகின்றன என்று விவசாயிகள் முறையிடுகின்றனர்.



பெருங்குளம், கிராம்புவில் பகுதிகளில் காலபோக நெற்செய்கையின் பின்னர் விவசாயிகள் உப உணவுப் பயிர்களான கத்தரி, புடோல், பூசணி, வெண்டி, மிளகாய், வற்றாளை, சணல், பயிற்றை போன்றவற்றைப் பயிரிடுகின்றனர். தற்போது பச்சை மிளகாயின் விலை அதிகரிப்பை அடுத்து பல வயல்களில் மிளகாய்ச் செய்கையும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

கல்வயல் கமக்கார அமைப்புக்கு உட்பட்ட பகுதிகளில் மாடுகள் வளர்ப்போர் பகல் வேளையில் மாடுகளை மேய்ச்சல் தரவைகளில் கட்டி வைத்து இரவு தமது வளவுகளில் கட்டி விடுகின்றனர். கடந்த இரண்டு வாரங்களாக இந்த விளை நிலங்களில் இரவு வேளைகளில் வரும் கட்டாக்காலி மாடுகள் அங்கு பயிரிடப்பட்டுள்ள பயிர்களையும் பூசணிக்காய், புடலங்காய், கத்தரிக்காய், வெண்டிக்காய் போன்றவற்றையும் அழித்து விவசாயிகளுக்கு பெரும் நட்டத்தை ஏற்படுத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதனால் விவசாயிகள் கால்நடைகளைத் துரத்துவதற்காக தமது தோட்ட நிலங்களில் இரவில் காவல் காப்பதாகவும் தெரிவித்தனர்.

கடந்த வருடம் போதிய மழைவீழ்ச்சி இல்லாததால் காலபோக நெற் செய்கையில் போதிய விளைச்சல் பெற முடியாமல் தாம் நட்டமடைந்ததாகவும், இதனை ஈடு செய்ய பயிரிடப்பட்ட உப உணவுப் பயிர்களும் கட்டாக்காலி கால்நடைகளால் அழிக்கப்பட்டு நட்டத்தை ஏற்படுத்தி வருவதாகவும் விவசாயிகள் தெரிவித்துள்ளனர். (வ-9)



## செல்வாபுரம் வீதி புனரமைப்பு எப்போது?

கரணவாய், ஜூலை 27

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட மூத்த விநாயகர் செல்வாபுரம் வீதி நீண்ட நாள்களாக புனரமைக்கப்படாது குன்றும் குழியுமாகக் காணப்படுவதால் அந்த வீதியால் பயணம் செய்வோர் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்த வீதியால் பாடசாலை மாணவர்கள், அரச உத்தியோகத்தர்கள், வியாபாரிகள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் நாளாந்தம் பயணம் செய்து வருகின்றனர். இந்த வீதியிலேயே கரணவாய் கிராம சேவையாளர் அலுவலகம் அமைந்துள்ளது. அந்த அலுவலகத்துக்கு அண்மை யில் பெரிய குழிகள் காணப் படுவதால் குறிப்பிட்ட அலுவலகத்துக்குச் செல்வோரும் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். குறிப்பாக இந்த வீதியில் சில இடங்களில் மின்விளக்குகள் பொருத்தப்படாமையால் இரவு நேரங்களில் பயணம் செய்வோர் குழிகளில் விழுந்து விபத்துக்குள்ளான பல சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன. இது தொடர்பாகச் சம்பந்தப்பட்டவர்களுக்கு பல தடவைகள் தெரியப்படுத்திய போதும் இதுவரை எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

எனவே அந்தப் பகுதி மாணவர்கள் மற்றும் விவசாயிகள் உட்பட அனைவரினதும் நன்மைகருதி இந்த வீதியைப் புனரமைப்புச் செய்ய உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (வ-108)

## பாதீனியம் பிடுங்கி அழிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 27

யாழ்.பண்ணையை அண்டிய கடற்கரை வீதியின் ஓரமாகக் காணப்படும் பெருமளவிலான பாதீனியச் செடிகள் பிடுங்கி அகற்றப்பட்டுள்ளன.

பிடுங்கிய செடிகள் முழுவதும் நேற்று கடற்கரைப் பகுதியில் குவிக்கப்பட்டு தீயிட்டு கொளுத்தி அழிக்கப்பட்டன. (ஒ-17)

## நீர்வேலி - பூதர்மடத்தில் பஸ்தரிப்பு நிலையம் அமைக்குக

### அந்தப்பகுதி மக்கள் கோரிக்கை

பருத்தித்துறை பிரதான வீதியில் நீர்வேலி-பூதர்மடம் பகுதியில் பஸ்தரிப்பு நிலையம் ஒன்றை அமைப்பதற்கு வலி. கிழக்கு பிரதேச சபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறித்த பகுதியில் உரிய பஸ் தரிப்பு நிலையம் ஒன்று இல்லாததால், பாடசாலை செல்லும் மாணவர்கள் மற்றும் பொது மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

அத்துடன் பிரதான வீதியூடாகச் செல்லும் போக்குவரத்துச் சபையின் பஸ்கள் அந்தப் பகுதியில் பஸ்ஸுக்காகக் காத்து நிற்கும் பொதுமக்கள் மற்றும் மாணவர்களை ஏற்றிச் செல்லாமலும், செல்லும் நிலை காணப்படுகின்றது. எனவே பஸ்ஸுக்காக காத்து நிற்கும் மக்களும், மாணவர்களும் ஏமாற்றமடைந்து பல மணி நேரம் காத்து நிற்க நேரிடுகிறது.

எனவே பிரதேச மக்களின் வசதி கருதி பஸ்தரிப்பு நிலையம் ஒன்றை குறித்த இடத்தில் அமைப்பதற்கு சம்பந்தப்பட்டோர் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் மக்கள் கேட்டுள்ளனர். (வ-17)



### மலிவு விற்பனை

வீட்டுக்குத் தேவையான பாவித்த கதவுகள், ஜன்னல்கள், நிலைகள் குறைந்த விலையில் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 736 0353, 077 048 8322
(50318)(3.6.4)

### அறைகள் நாள் வாடகைக்கு

ஒருவருக்கு 500/=, இருவர் 1000/=, நால்வர் 2000/=
(Attached Bathroom).
Hotel Villa City
422, Galle Road, Wellawatte
T.P: 072 255 2222 (சி/14692)(4.6.3)

### மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

மோட்டார் சைக்கிள் CD 200 Road Master உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 075 988 0000, 021 791 2997
Multi farm (Rajeevan)

### குணமளிக்கும் வழிபாட்டு ஆராதனை

(கர்த்தர் என் இருளை வெளிச்சமாக்குகிறவர் - II சாமுவேல் : 22:29)

விசுவாச வாழ்வு திருச்சபையும் தேவவார்த்தை மிசனறி சபையும் இணைந்து நடத்தும் கூட்டம்




காலம் : 26,27.07.2014 (சனி, ஞாயிறு)
நேரம் : மாலை 4.30 மணி
இடம் : ஐயனார் விளையாட்டு மைதானம் செட்டிப்புலம், வேலணை.

இறைவனால் வல்லமையாக பயன்படுத்தப்பட்டு வரும் தேவமனுஷன் இவரை தேவன் பலமக்களுக்கு ஆசீர்வாதமாக மாற்றியுள்ளார்.

பாடல்கள், இறைசெய்திகள், எல்லா வியாதிக்காரர், பிசாசின் பிடியில் உள்ளவர்கள், சாபக்கட்டுகளில் இருந்து விடுதலைபெற உங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

(50244) (7.6.3)

**தேவவார்த்தை மிசனறி சபை வேலணை 077 600 0937**




சேவைகள்
திங்கள் முதல்
வெள்ளி வரை
மாலை
4.00 - 8.00
மணி வரை
சனி, ஞாயிறு
முழு நேரம்
நடைபெறும்.

**பற்சிகிச்சை நிலையம்**
561, Palaly Road. Thirunelvely, Jaffna.
0094 2122 12599, 076 635 7290
(50292)(7.6.3)

## உயர்நிலை (A/L) பரீட்சைக்குப் பின்

## ரூ.100,000/- க்கு மேல் சம்பாத்தியம் + மோட்டார் சைக்கிள்



1957ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டு தற்சமயம் பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்டுள்ள சென்ட்ரல் ஃபினான்ஸ் கம்பனி பி.எல்.சி. இலங்கையிலுள்ள 25 தலைசிறந்த நிறுவனங்களில் ஒன்றாகும். இந்த நாட்டின் நிதிச் சேவைத் துறையில் முன்னணி வகிக்கும் இக் கம்பனி நாடெங்குமுள்ள 85 கிளைகள் ஊடாக குத்தகை, வாடகைக் கொள்வனவு, நிலையான வைப்புக்கள், சேமிப்புக் கணக்குகள், வாகனங்களை வாடகைக்கு விடுதல் போன்ற சேவைகளை வழங்குவதுடன், தொடர்ந்து வளர்ச்சியடைகின்றது.

எமது தேர்ச்சிமிக்க 1,500க்கு மேற்பட்ட அலுவலர்களின் அணியில் இணைய இதோ உங்களுக்கோர் வாய்ப்பு.

### பயில்நிலை சந்தைப்படுத்தல் அலுவலர்கள் (ஆண்கள்/பெண்கள்)

*உங்களிடம் இருக்க வேண்டியவை*
- உயர்தர (A/L) பரீட்சைக்குத் தோற்றியிருக்க வேண்டும்
- கவரத்தக்க ஆளுமை
- சிறந்த தொடர்பாடல் திறமை

*நீங்கள் பெறக்கூடியவை*
- 3 மாத பயிற்சிக் காலத்தில் மாதாந்தம் ரூ.15,000/-
- பயிற்சியின் பின்பு, ரூ.21,000/-க்கு மேல் மற்றும் கம்பனியால் பராமரிக்கப்படும் மோட்டார் சைக்கிள்/ஸ்கூட்டர்
- ஆறு எண் தொகையிலான ஊக்குவிப்புக் கொடுப்பனவைச் சம்பாதிக்கலாம்
- கம்பனியில் பதவி உயர்வுக்கான உத்தரவாதம்

உங்கள் சுயவிபரங்கள் மற்றும் உறவினரல்லாத இரு நடுவர்களின் பெயர் மற்றும் தொடர்பு விபரங்கள் உள்ளடங்கிய விண்ணப்பத்தை மின்னஞ்சல் / தபால் மூலம் எமக்கு அனுப்புங்கள்.

பொது முகாமையாளர் - மனித வளங்கள் பிரிவு
சென்ட்ரல் ஃபினான்ஸ் கம்பனி பி.எல்.சி.
270, வொக்சோல் வீதி, கொழும்பு 02.
(சி/15546) hrd@cf.lk

### கடை வாடகைக்கு

541, பருத்தித்துறை வீதி, நல்லூரில் அமைந்துள்ள கடை வாடகைக்குண்டு. நல்லூர்த் திருவிழா உற்சவநாள்களில் மட்டும். திருவிழாவுக்குப் பின்னரும் வாடகைக்குத் தொடர்ந்து எடுக்கக்கூடியவர்கள் விரும்பத்தக்கது.

(50283)(12.3.6) தொடர்பு: 021 222 7077

### வீடு வாடகைக்கு

யாழ் இந்து பாடசாலைக்கு அண்மையில் சிவகுருநாதர் வீதியில் 3 பேர் கொண்ட சிறிய குடும்பத்துக்கு வீடு வாடகைக்குண்டு. (50285)(7.6.3)

தொடர்பு : 077 226 8505

### வீடு வாடகைக்கு

யாழ்.கச்சேரிக்குக்கு அண்மையில் உள்ள 5 படுக்கையறைகள், 2 குளியலறைகள், கார்த்தரிப்பிடவசதியுள்ள வீடு வாடகைக்கு விடப்படும். (நிறுவனங்கள் விரும்பத்தக்கது)

(50307)(12.3.6) தொடர்பு:077 569 6881

### வீடு வாடகைக்கு

யாழ்.Town Bus தரிப்பிடத்திற்கு அண்மையில் 5 அறைகள், Attached Bathroom உடன் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு.

தொடர்பு:077 602 5552 (சி/15537)(4.6.3)

### காணி விற்பனைக்கு

மல்லாகம் உப தபாலகத்துக்கு அருகில் காங்கேசன்துறை வீதியிலிருந்து இரண்டாவது காணி பரப்பு ஐந்து அரை 5½ உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 259 9879/077 815 1879
(சி/15541)(4.6.3)

### J.C.B (பைக்கோ) வாடகைக்கு

குறிப்பு:
போக்குவரத்து கூலி அறவிடப்பட மாட்டாது



தொடர்பு இல: 021 224 1466 யாழ்ப்பாணம்
077 771 2482 கன்னாகம்
077 984 7285 பருத்தித்துறை

இல. 207,
புதிய எரிபொருள் நிரப்பு நிலையம்,
K.K.S. ரோட், கன்னாகம். (50310)(18)

### தேவை

- யாழ் மாநகர சபை எல்லைக்குள் இயங்கும் வைத்திய நிறுவனத்திற்கு ஓரளவு ஆங்கில அறிவு உடைய, கணினியில் Accounts செய்யக்கூடிய Accounts Cleark (பெண்) தேவை. (மாநகர சபை எல்லைக்குள் வசிப்பவர் விரும்பத்தக்கது)
- பார்மசி வியாபார ஸ்தாபனம் மேற்பார்வை செய்யக்கூடிய முன் அனுபவம் உள்ள 40 வயதுக்கு மேற்பட்ட ஆண் தேவை.

தெளிவான விலாசம், தொலைபேசி இலக்கம் குறிப்பிட்டு விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி
விளம்பர இல - 5003
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (50284)

## வ/நெடுங்கேணி மகாவித்தியாலயம் பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம்

காலம்: 29.07.2014 செவ்வாய்க்கிழமை
நேரம் : மு.ப.10.00 மணி
இடம் : பாடசாலை பிரதான மண்டபம்

(50314) (12.3.6) - அதிபர் -

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கோப்பாய் தெற்கைப் பிறப்பிடமாகவும் சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட

**பூலோகம் ஸ்ரீஸ்கந்தராசா**

(ஆசிரியர் யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி)


அவர்கள் கடந்த 2014.07.22ஆம் திகதியன்று யாழ்ப்பாண நீதிநிர்வாக வலயத்துக்கான சமாதான நீதிவானாக, யாழ்.மாவட்ட நீதிபதி அ.ஆனந்தராசா அவர்களின் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். இவர் மேலும் பல சிறப்புக்களைப் பெற்று வாழ்வில் உயர கோப்பாய் பரமேஸ்வரி அம்பாளின் துணை வேண்டிப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

Best wishes

(50263)(12.3.6)

செ.சிவகுமாரன் குடும்பத்தினர்,
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

## விண்ணப்பம் கோரல்



கைதடி இணுங்கித் தோட்டம் அருள்மிகு கந்தசுவாமி கோயிலுக்கு ராஜகோபுரம் அமைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.
இக் கோபுரம் அமைப்பதற்கு தகுதியான ஆச்சாரியார்களிடம் இருந்து கேள்வி விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
விண்ணப்பிக்க விரும்புபவர்கள் பின்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

தலைவர்: சி.சிவானந்தம்- ஆலய பரிபாலனசபை
செயலாளர்: சு.பேரின்பலிங்கம் -ஆலய பரிபாலனசபை
தொலைபேசி இல:021 790 2897
குறிப்பு: 10.08.2014 இற்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

(50302)(4.6.3)

## மணமகள் தேவை

சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட 1985 இல் பிறந்த ரோகினி நட்சத்திரம் 3 ஆம் பாதம் கிரகபாவம் 10 உயரம் 5' 7" உடைய கொழும்பு தனியார் துறையில் பணிபுரியும் மணமகனுக்கு அரச பணிபுரியும் மணமகள் தேவை.
தொடர்பு: 075 551 2919 (43692) (3.6.4)

## பணிப்பெண் தேவை

நேசறி செல்லும் சிறுவனைப் பராமரிப்பதற்கு 45 வயதுக்கு மேற்பட்ட பெண்மணி தேவை. ஒரு நாளுக்கு 400/= வழங்கப்படும். இடம் - சுண்டுக்குளி.யாழ்.

(50283) (12.3.6) தொடர்பு: 077 675 2865

## மேல்மாடி வீடு வாடகைக்குண்டு

யாழ்ப்பாணம், நீராவியடியில் இந்துக்கல்லூரிக்கு அருகில் மாடிவீட்டின் மேல்மாடி மட்டும் வாடகைக்குண்டு.
தொடர்புகளுக்கு: (50273) (12.3.6)
021 222 7475/077 544 0293

## வீடு வாடகைக்கு

பலாலி வீதிக்கு சமீபமாக கோண்டாவிலில் சகல வசதிகளும் கொண்ட (வாகனத் தரிப்பிடம், தொலைபேசி வசதி) வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 077 917 8993

(50137)(5.6.3)

## G.S MARBLES & GRANITES

மாபிள்ஸ், கிறனைற் கற்கள்
ஒரு சதுர அடி 1000/=-2000/= வரை விற்பனைக்குள்ளது.
தொடர்பு: 077 155 4628, 072 129 9067
யாழ்ப்பாணம்.
web: www.kgexporters.com

(50096)(4.6.3)

## வீடு வாடகைக்கு

இல.02, கச்சேரி கிழக்கு ஒழுங்கையில் அமைந்துள்ள மேல்மாடி வீடு வாடகைக்குண்டு. திணைக்களங்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும். பார்வையிடும் நேரங்கள் காலை 07.30 மணிக்கு முன்னரும், மாலை 5.30 மணிக்குப் பின்னரும் பார்வையிடலாம்.
தொடர்புகளுக்கு: (50311) (12.3.6)
077 720 0839/075 049 8617

## காணி விற்பனைக்கு

பன்னாலை "தச்சன்புலம்" பரப்பு 24 கிணற்றுடன் வீடு கட்ட, தோட்டம் செய்யக்கூடிய இருபக்கம் கிராமசபை ஒழுங்கையும் ஒரு பக்கம் பாதையும் உடைய காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 021 222 4004 (50214) (12.3.6)

## எதிர் காலத்தில் பசுமை உலகம் (தனியார்) நிறுவனம் வரைவுள்ளது
## பசுப்பால் கொள்வனவு / விற்பனை - யாழ்.மாவட்டம்

எமது நிறுவனத்தின் திட்டங்களில் ஒன்றான விலங்கு வேளாண்மையை ஊக்குவிக்கும் பொருட்டு தூய பாலினை விற்பனை செய்யவுள்ளதோடு, பால் சார்ந்த உள்ளூர் உற்பத்திப் பொருள்களையும் உற்பத்திசெய்து சந்தைப் படுத்தவுள்ளோம். மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் இத்திட்டத்தில் இணைய விரும்பும் எமது பிரதேச பால் உற்பத்தியாளர்கள் எம்மோடு
077 330 3337
எனும் இலக்கத்தினூடாக அலுவலக நேரத்தில்
***08.08.2014ஆம் திகதிக்கு முன்னதாக***
தொடர்பு கொள்ளும்படி வேண்டப்படுகின்றீர்கள்.

திட்ட அமுலாக்கல் பிரிவு, (50141) (12.3.6)
எதிர்காலத்தில் பசுமை உலகம் (தனியார்) நிறுவனம் வரைவுள்ளது,
இல.133, கண்டி வீதி, கச்சேரி, யாழ்ப்பாணம்.

## கடைகள் வாடகைக்கு

ஆறுகால்மடம், மானிப்பாய் பிரதான வீதியில் எட்டு பரப்புக் காணியுடன் புதிதாகக் கட்டப்பட்ட நான்கு தொடர் கடைகள், 24 அடி அகலம் 40 அடி நீளம் கொண்ட உணவு விடுதி மற்றும் 12 அடி அகலம்40 அடி நீளம் கொண்ட 3 கடைகள் விற்பனைக்கு அல்லது வாடகைக்கு உள்ளன.

**குறிப்பு:** கடைகள் மானிப்பாய் பிரதான வீதியில் உள்ளது. கடைக்கு மேல் இன்னும் ஒரு மாடி கட்டக் கூடியவாறு கட்டடம் கட்டப்பட்டுள்ளது. கடைக்குப் பின்பக்கம் இரு வழிப் பாதையுடன் உங்கள் வசதிக் கேற்றவாறு கட்டடம் கட்டக்கூடியவாறு 5 பரப்புக் காணி உள்ளது.

தொடர்புகளுக்கு:
ஜேர்மனி 004971138894879, 004915218997832
இலங்கை (யாழ்ப்பாணம்) 077 615 3786, 021 300 2187

(50157)(4.6.3)

## விசா பெற்றுக் கொள்ள இருப்பவர்கள்

**STUDENT VISA 100%**
(Genuine Student Only)



**June, July, September - Any other intake**

- இதோ உங்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு! நீங்கள் விரும்பும் பல்கலைக்கழகத்துக்கு அனுமதிக் கடிதம் மிகவிரைவில் இயலுமான செலவில் நாம் பெற்றுத் தருவோம்.
- எமது விரைவான, வசதியான, இலாபகரமான சௌகரியமான சேவையை இன்றே நீங்களும் பெற்றுக்கொள்ளுங்கள்.
- எமது பயிற்சி பெற்ற சட்ட வல்லுநர்கள் புதிய சட்டதிட்டங்களுக்கு அமைவாக விசா தொடர்பான சகல கருமங்களையும் செய்து தருவார்கள்.

ONLINE விசாவுக்கான விண்ணப்பம் மற்றும் விசாக்கட்டணக் கொடுப்பனவு செய்து கொடுத்தல்.

**வங்கியில் பணவைப்பு**
Saving book, Fixed Deposit, Statement

**UK, USA, AUSTRALIA, CANADA, NEW ZEALAND & All other Countries**

எவ்வித முற்பணமும் இல்லாமல் எம்மிடம் வந்து கதைத்து உண்மையான, நேர்மையான, நம்பிக்கையான முறையில் ஆலோசனை களைப் பெறலாம்.

(நேரத்தை முன் கூட்டியே பதிவு செய்து கொண்டு வரவும்).

FLEX Graphics

SKYWALK Visa Solutions

**SKYWALK VISA SOLUTION**
No. 65, 1/1, Galle Road, Dehiwala. (Food City-1st Floor)
Web: www.skywalk.com

**Hotline: 0777 711 905**

(சி.14696) (45.6.3)

# மாணவருக்கான பண்ணிசைப் போட்டி

நல்லூர் கந்தசுவாமி கோவில் மஹோற்சவத் தை முன்னிட்டுயாழ்.மாநகரசபையின் சைவசமய விவகாரக் குழுவினால் பாடசாலை மாணவர்களிடையே ஆன்மிக விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் நடத்தப்படும் பண்ணிசைப் போட்டி எதிர்வரும்புதன் கிழமை காலை 9 மணியளவில் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.மாநகர சபையினால் இந்தப் போட்டிக்குரிய விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்த வேளையில் விண்ணப்பித்திருந்த மாணவர்கள் தாம் விண்ணப்பித்த பிரிவுக்குரிய அனைத்துத் தேவாரப் பாடல்களையும் பாடுவதற்கு ஏற்ற வகையில் தயார்செய்து வருதல் வேண்டும் என்றும் - போட்டியில்மூன்று பிரிவுகளிலும்முதல்மூன்று இடங்களைப்பெறும் மாணவர்களுக்குத் தலா 10ஆயிரம் ரூபா, 7ஆயிரம் ரூபா, 5 ஆயிரம் ரூபா பணப் பரிசுகள் வழங்கப்படும் என்றும் சைவசமய விவகாரக்குழு அறி வித்துள்ளது. (ஒ-7)

### சேவை நல ன் பாராட்டு விழா

வரணி இடைக்குறிச்சி கிராம அலுவலராக கடமையாற்றி இடமாற்றம் பெற்றுச் சென்ற திருமதி ம.தீபாவுக்கான சேவை நலன் பாராட்டு விழா இன்று ஞாயிறு பிற்பகல் 3 மணிக்கு வரணி இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாசாலை மண்டபத்தில் சாவகச்சேரி பிரதேச சபைத் தலைவர் சி.துரைராசா தலைமையில் இடம்பெறும். (ஒ-122)

## மரண அறிவித்தல்

திருமதி

### கலாதேவி கணேசலிங்கம்



யாழ்.நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும், கிளிநொச்சி, D.08, ஆனந்தம் பண்ணை, உருத்திரபுரத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி கலாதேவி கணேசலிங்கம் 24.07.2014 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சாம்பசிவம் (உருத்திரபுரம்) - இராஜேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும், கந்தையா (உருத்திரபுரம்)- பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், கணேசலிங்கம் (S.M.O)அவர்களின் அன்பு மனைவியும், யதார்த்திகா, பிராத்தன், காலஞ்சென்ற கவியார்த்திகா மற்றும் நிதார்த்தல் ஆகியோரின் அன்புத் தாயும், குணராஜன் (றஞ்சன் - கனடா) அவர்களின் பாசமிகு சகோதரியும், பிரியசாந்தா, காலஞ்சென்ற புவனேந்திரராஜா(சிவா) மற்றும் விக்னேஸ்வரன்(கிருபா-கனடா), மகேஸ்வரன்(கமல் - பிரான்ஸ்), குககுமாரராஜா (குகா - M.P.C.S - கிளிநொச்சி), பிரபாகரன் (பிரபா - உருத்திரபுரம்), தட்சனேஸ்வரி (செல்வி - கனடா) ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், தர்மநாயகம் (இலங்கை), கோணேஸ் (இந்தியா), பவானி (கனடா), பவா (பிரான்ஸ்), வித்தியா (இலங்கை), கவிதா (இலங்கை) ஆகியோரின் அன்பு உடன்பிறவாச்சகோதரியும், ...ஜன், யாழினி, பிரணவன் ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.07.2014) ஞாயிற்றுக்கிழமை பி.ப.2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பின்னர் உருத்திரபுரம் இந்துமயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கணேசலிங்கம் - இலங்கை (+94773[illegible]4373)
குகா - இலங்கை (+94779157633)
பிரபா - இலங்கை (+94774303426)
சாந்தா - இலங்கை (+94778214962)
ரஞ்சன் - இலங்கை (+94776183951)

(ஜ15241) (12.3.6)

தகவல்:
குடும்பத்தினர்.

## வீட்டுக்கிருத்திய அழைப்பு

மண்ணில் 18 12 1931

விண்ணில் 01 07 2014



### திருமதி பூமணி செல்லப்பா

இன்று (27.07.2014) ஞாயிற்றுக்கிழமை மு.ப.10.00 மணிக்கு நடைபெறும் அன்னாரது ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அத்துடன் எமது குடும்பத்தலைவியின் இறுதிக்கிரியைகளில் பங்கெடுத்து ஆறுதல் வழங்கிய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

"சிங்ககிரி", அளவோடை வீதி,
இணுவில் மேற்கு.

(50264) (12.6.3)

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### லயன் ஆறுமுகம் சாந்தலிங்கம் J.P



5ஆம் வட்டாரம், புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் பாண்டியன்தாழ்வு, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் தற்காலிமாக கச்சாய் வீதி, சாவகச்சேரியில் வசித்து வந்தவருமான லயன் ஆறுமுகம் சாந்தலிங்கம் 25.07.2014 வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் -அமராவதி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ் சென்ற கந்தசாமி மற்றும் கனகாம்பிகை தம்பதியரின் அன்பு மருமகனும், தர்சினியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சுந்தரலிங்கம் மற்றும் ராசலிங்கம், காலஞ்சென்ற சண்முகலிங்கம் மற்றும் பஞ்சலிங்கம், அமுதலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், சுடர்விழி, கயல்விழி, சரவணபவன், ரவிசங்கர், தினேசன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.07.2014) ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரியில் உள்ள அவரின் இல்லத்தில் மு.ப. 10.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக துண்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
077 833 0151

(50317) (7.6.3)

கச்சாய் றோட், வீரசிங்கம் வீதி,
சப்பச்சி மாவடி கோயில், சாவகச்சேரி.

## மரண அறிவித்தல்



திருமதி

### நகுலேஸ்வரி கனகசிங்கம்

முல்லைத்தீவைப் பிறப்பிடமாகவும், நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட கனகசிங்கம் நகுலேஸ்வரி நேற்று (26.07.2014) சனிக்கிழமை அதிகாலை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகமுதலியார் - அழகம்மா தம்பதியரின் மகளும், காலஞ்சென்ற கனகசிங்கம் (ஓய்வுபெற்ற நீர்ப்பாசனப் பொறியியலாளர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற செல்லையா - புனிதவதி மற்றும் வைத்திய கலாநிதி செல்வி புஸ்பம் சண்முகம் (ஓய்வுபெற்ற பணிப்பாளர், யாழ்.போதனா வைத்தியசாலை) ஆகியோரின் சகோதரியும், பாஸ்கரதேவன் (பொறியியலாளர் - அமெரிக்கா), அமரதேவன் (கணக்காளர், கொழும்பு), கலாவதி, வசந்தகுமார் (யாழ்.மாநகரசபை) ஆகியோரின் அன்புத் தாயாரும், பாலசாந்தினி (அமெரிக்கா), தேவகுமாரி (கொழும்பு), மோகனசுந்தரம் (யாழ்.மாநகரசபை), நந்தினி ஆகியோரின் மாமியும், காலஞ்சென்ற Dr.யோகரத்தினம் அவர்களின் மைத்துனியும், சஞ்சீவ் (அமெரிக்கா), சிவானி (அமெரிக்கா), ஞானகி (அமெரிக்கா), பிரணவன் (கொழும்பு), பவஹரினி, திவ்யபாரதி, ஷந்தனா, ஹம்சானந்த் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.07.2014) ஞாயிற்றுக்கிழமை காலை அவரது இல்லத்தில் நடைபெற்று, மு.ப.10.00 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

465/24,
பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(50288) (12.3.6)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### வயிரவன் செல்லத்துரை

கருகம்பனை, கீரிமலையைப் பிறப்பிடமாகவும், தெல்லிப்பழை, மாவிட்டபுரம் தெற்கை வசிப்பிடமாகவும், சங்கானை சேத்துப்பிடிச்சியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட வயிரவன் செல்லத்துரை 23.07.2014 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வயிரவன் - லட்சுமி தம்பதியரின் புதல்வரும், யோகமலர் அவர்களின் அன்புக் கணவரும், தனஞ்சயன் (லண்டன்), குமரக் குன்றன் (லண்டன்), நிவேதிகன் ஆகியோரின் தகப்பனாரும், பகீரதி, உஷாஜினி, தனுசா ஆகியோரின் மாமனும், கதிரவேலன், காலஞ்சென்ற கோவலன் மற்றும் குணபாலன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான அழகம்மா, அன்னபரிபூரணம், அன்னலிங்கம் மற்றும் நேசமலர், யோகராணி, காலஞ்சென்ற யோகரட்ணம் மற்றும் யோகசீலன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.07.2014) ஞாயிற்றுக்கிழமை மு.ப.10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சங்கானை கரைச்சி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சேத்துப்பிடிச்சி வீதி,
சங்கானை.

(50291) (12.3.6)

தகவல்: குடும்பத்தினர்.
021 373 4415

## வேலை வாய்ப்புக்கள்

V & L நிறுவனத்தில் தரம் 8 தொடக்கம் ...தாரிகள் வரைக்கும் வேலை வாய்ப்புக்கள்.

தொடர்பு: 075 487 6233

## ...ற்சி வகுப்பு

கொழும்பில் பயிற்றுவிக்கும் ...தையல் ஆசிரியையினால் சிறந்த விளக்கத்துடன் ...தேவான முறையில் சாறிபிளவுஸ், சல்வார், பாவாடைகள், ...ளவுஸ்கள், சட்டைகள், நைட்டி பயிற்றப்படும். ...பம் 09.08.2014. 07.08.2014 இற்கு முன் பதியவும். ...43, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம் 077 929 7474 (சி/15535) (4.6.3)

## VAN FOR SALE

...YOTAடொல்பின் HExxxx, GQ - xxxx, Full Option ...amera A/wheel, D/AC, White Adjustable Sheet.

தொடர்பு: 077 605 0963

## வீடு வாடகைக்கு

யாழ்.நீராவியடி, பிறவுண் வீதிக்கு அருகில் வீடு வாடகைக்குண்டு. மு.ப.10.00 மணிக்குப் பின் பார்வையிடலாம்.

(சி:15539) (12.3.6) தொடர்பு: 071 627 4916

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ வயது 25 5' 7' உயரம் France PR உள்ள படித்த அழகிய மணமகனுக்கு மணமகள் தேவை.

www.friendsmatrimony.com

011 236 3663 (சி/15538) (3.6.4)

## வாடகைக்கு

இல.08, புகையிரத வீதி, வெள்ளவத்தையில் அமைந்துள்ள லொட்ஜில் இணைந்த குளியலறையுடன் கூடிய அறைகள் மற்றும் தனியறைகள் நாள், கிழமை, மாத வாடகைக்குண்டு.

(சி:15536) (12.3.6) தொடர்பு: 071 299 1256/011 250 4281

## வீடு, காணி விற்பனைக்கு

யாழ். உரும்பிராயில் கற்பக விநாயகர் கோயிலுக்கு அருகில் 3 பரப்பில் வீடு, இந்துக்கல்லூரிக்கு அருகில் 9½ பரப்புக் காணி பலாலி வீதியில் உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 365 8485 (சி/15642) (3.6.4)

## காணி விற்பனைக்கு

இராசவீதி, கரந்தன் சந்திக்கு அருகில் 8 பரப்புக் காணி கிணற்றுடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 118 5263, 077 735 3179

## கட்டட நிர்மாணத்துறை சார்ந்த வேலைவாய்ப்பு

உங்களுக்குத் தேவையான சகல கட்டட நிர்மாணத்துறை சார்ந்த வேலைகளை உங்கள் இடங்களிற்கே வந்து செய்து தரப்படும். தரமான தாகவும்/நம்பிக்கையாகவும் செய்து தரப்படும். (கட்டடம்/வீடு)

(48952) (12.3.6) தொடர்பு: 077 419 4953

## கோல்டன் பலஸ் அன் ராம் பிரதர்ஸ்
## GOLDEN PALACE & RAM BROTHERS




திருமண நிகழ்வு, பூப்புனித நீராட்டு விழா, பொதுக் கருத்தரங்கு மற்றும் அனைத்து நிகழ்வுகளுக்கும் ஏற்ற பிரமாண்டமான ஒரே இடம்.

மேலும் ஓடர்களுக்கு உணவுகளும் செய்து கொடுக்கப்படும்.

(48951)(7.6.3)

**கோல்டன் பலஸ்**
பாடசாலை அருகில்,
சூமாங்குளம், வவுனியா

T.P. : 077 656 2247
077 087 7366

## விநியோகஸ்தர்கள் தேவை

இலங்கையில் நீர்க்குழாய்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் சந்தையில் SLS மற்றும் ISO தரச்சான்றிதழ் பெற்ற முன்னணி நிறுவனத்தின் முகவராக ஆகுவதற்கு உங்களுக்கும் ஓர் மகத்தான வாய்ப்பு.

**பின்வரும் மாவட்டங்களில் விநியோகஸ்தர்களை எதிர்பார்க்கின்றோம்.**

KTK PVC

- அம்பலாங்கொடை
- தெஹிவளை
- கல்முனை
- அவிஸ்சாவெல்லை
- பலங்கொடை
- அம்பாறை
- திருகோணமலை
- இரத்தினபுரி
- காலி
- அனுராதபுரம்


பின்வரும் வசதிகள் மற்றும் தகைமைகள் உங்களுக்கு உள்ளனவா?

- போதுமான மூலதனம் மற்றும் பண முதலீடு
- அனுமதிப்பெற்ற வங்கியிடமிருந்து வங்கிப்பிணையம்
- 600 சதுர பரப்பளவையுடைய களஞ்சிய மற்றும் அலுவலக வசதி
- பண்டங்கள் விநியோகத்திற்கு தேவையான லொறி

அனுபவமிக்க முகாமையாளர் மற்றும் பிரதேச விற்பனை பிரதிநிதிகளின் கண்காணிப்புடன் உங்கள் முதலீட்டுக்கு அதிகூடிய இலாபத்தினை உறுதி செய்கின்றோம்.

**இரண்டு மில்லியன் ரூபாயை முதலீடு செய்யுங்கள் மாதாந்தம் ரூ.100,000 சம்பாதியுங்கள்**

விற்பனை பிரதிநிதிகளின் தொடர்புகளுக்கு:
077 3457847 / 077 2385732



விண்ணப்பங்கள்:
சந்தைப்படுத்தல் முகாமையாளர்
கமல் பீ.வீ.சீ. தனியார் நிறுவனம்
இல. 56, கந்தவல மாவத்தை, இரத்மலானை.
E-mail: sales@kamalpvc.com
Tel: 0112 624800

## விசா பெற்றுக்கொள்ள இருப்பவர்கள்

UK, Australia, Canada, USA, New Zealand, Denmark, France, Germany, Italy, Japan, Netherlands, Norway, Switzerland, Sweden மற்றும் ஏனைய நாடுகளுக்கு எமது பல வருட அனுபவமுள்ள UK, USA, CANADA போன்ற நாடுகளில் பயிற்சி பெற்ற சட்டதரணிகளால் விசா பெற்றுக் கொள்வதற்கான உதவிகள் செய்து கொடுக்கப்படும்.

## VISIT VISA



- சுபகாரியங்களுக்கும், திருமணங்களுக்கும், மங்கல, அமங்கல காரியங்களுக்கும் மற்றும் அவசரமாக செல்ல இருப்பவர்களுக்கும் விசேடமாக உடனே விசா பெற்றுக் கொள்வதற்கு ஏற்பாடுகள் செய்து தரப்படும்.
- பெற்றோர், பேரன், பேர்த்தியர்களுக்கான சுப்பர் விசா - கனடா, மணமான தம்பதியருக்கான வதிவிட விசா - சகல நாடுகளுக்கும்.

ONLINE விசாவுக்கான விண்ணப்பம் மற்றும் விசாக்கட்டணக் கொடுப்பனவு செய்து கொடுத்தல்.

**தாமதமாகிய வீசாக்கள் - நிராகரிக்கப்பட்ட வீசாக்கள் உள்ளனவா? விசா பெற்றுக் கொள்வதில் பிரச்சினை உள்ளதா?**

Refused? Rejected?

- உங்கள் ஆவணங்களை சரியான முறையில் சமர்ப்பிக்கத் தவறி விட்டீர்களா?
- உங்கள் விசா முடிந்ததும் இலங்கைக்குத் திரும்பி வருவீர்கள் என்ற சந்தேகமா?
- உங்கள் வங்கியில் சேமிப்புப் பணம் பற்றாக்குறையா?
- உங்கள் ஆவணங்கள் திருப்தி தரக்கூடியதாக இல்லையா? மற்றும் ஏதாவது காரணங்கள் இருப்பின் அது நிவர்த்தி செய்து சரியான முறையில் VISA பெற்றுக் கொடுக்கப்படும்.
- விசா சம்பந்தமான சகல ஆலோசனைகள் வழங்கப்படும்.
- விசா விண்ணப்பப் படிவம் பூர்த்தி செய்து கொடுக்கப்படும்.
- Embassy கடிதங்கள் மொழி பெயர்த்துத் தரப்படும்.
- Ticket, Hotel Booking, Travel Insurance செய்து தரப்படும்.
- வெளிநாட்டிலிருந்து கிடைக்கும் Sponsor கடிதங்களுக்கு விசா பெற்றுக் கொள்வதற்கு தேவையான ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.
- வெளிநாட்டில் உள்ள உறவினர்களிடம் செல்வதற்கான வசதிகள் செய்து தரப்படும்.

## வங்கியில் பணவைப்பு

*Savings Book, Fixed Deposit, Statement*

3, 6, 12 மாதங்களுக்கான (முன், பின்) பணவைப்பு

எவ்வித முற்பணம் இல்லாமல் எம்மிடம் வந்து கதைத்து உண்மையான, நேர்மையான, நம்பிக்கையான முறையில் ஆலோசனைகளை பெறலாம்.

(நேரத்தை முன் கூட்டியே பதிவு செய்து கொண்டு வரவும்).

## உங்களின் விசா எங்களின் சவால்

Migration / Skill Migration / Work Permit / Visit Visas / Student Visas / Dependent / Family Visas / Business / Investment / Rejection Appeals New Applications etc...

SKYWALK Visa Solutions

**SKYWALK VISA SOLUTION**
No. 65, 1/1, Galle Road, Dehiwala. (Food City-1st Floor)
Web: www.skywalk.com

Hotline: 0777 711 905

# நீதிமன்றப் பதிவாளரின் கடமைக்கு இடையூறு பெண்கள் ஐவருக்கு அபராதம்

தென்மராட்சி,ஜூலை 27
சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றப் பதிவாளரின் கடமைக்கு இடையூறு விளைவித்த வரணி இயற்றாலையைச் சேர்ந்த ஐந்து பெண்கள் மன்னிப்புக் கோரியதை அடுத்து தலா ஆயிரத்து 500 ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டது.

சர்வகச்சேரி நீதிமன்றில் நடைபெற்ற காணி வழக்குத் தொடர்பாக வழக்காளியை குறித்த காணியில் வேலி அடைக்க நீதிமன்றில் அனுமதி வழங்கப்பட்டது. அதற்கான நடவடிக்கையை ஆரம்பித்த போது எதிராளி தரப்பினர் தடுத்துள்ளனர். இது தொடர்பாக நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டதை அடுத்து நீதிமன்றப் பதிவாளர் முன்னிலையில் வேலி அடைக்க உத்தரவிடப்பட்டது.

அதன் பிரகாரம் கடந்த மாதம் 30 ஆம் திகதி வேலி அடைப்பதைப் பார்வையிட நீதிமன்றப் பதிவாளர் குறித்த இடத்துக்குச் சென்றுள்ளார். அந்த வேளையில் எதிராளியின் மனைவி தலைமையிலான ஐந்து பெண்கள் அந்த இடத்துக்கு வேலி போடக் கூடாது என்று ஆர்ப்பாட்டம் செய்ததுடன் அந்த இடத்தில் அமர்ந்தும் படுத்தும் இருந்தனர். இதனால் வேலி போட முடியாததால் பதிவுகாரர் நீதிமன்றில் முறையிட்டார்.

பின்னர் கடந்த 3 ஆம் திகதி கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் தனது கடமைக்கு இடையூறு விளைவித்ததாக 5 பெண்கள் மீது முறைப்பாடு செய்திருந்தார்.

குறித்த ஐந்து பெண்களையும் பொலிஸார் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்திய போது புதன்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது.

வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது ஐந்து பெண்களுக்கும் தலா ஆயிரத்து 500 ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டது. (வ-9)


## யாழ் மண்ணில் லண்டன் கருவள மருத்துவ நிபுணர்

யாழ் மண்ணில் பிறந்து உயர்கல்வி மற்றும் பயிற்சியும் பெற்று ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்கா, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளில் மருத்துவ நிபுணராய் பணியாற்றிய **வைத்திய கலாநிதி எம். சதானந்தன் 35 வருடங்கள்** மருத்துவ சேவை அனுபவத்துடன் இப்போது தாய்நாட்டுக்கு சேவையாற்ற இலங்கை திரும்பியுள்ளார். அவர் **கருவளம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள், கருப்பை சம்பந்தப்பட்ட பிரச்சினைகள், மலட்டுத்தன்மை மற்றும் ஹார்மோன் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் மற்றும் மாதவிடாய் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்கு** சிகிச்சைகளை வழங்குவதில் விசேட நிபுணத்துவம் பெற்றவராவார். இவருடைய மருத்துவ ஆலோசனைகளை **யாழ்ப்பாணத்தில் - நொதேர்ண் சென்ரல் வைத்தியசாலையில்** பெற்றுக் கொள்ளலாம்.

முன்பதிவுகளுக்கு: 077-3439988 (ராணி)



## குறைந்த விலையில் உன்னதமான பயணம்



உலகில் எந்தப்பகுதிக்கும் சென்றுவர விமான பயணச்சீட்டுக்களை குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம். *Conditions apply

**ஹேலீஸ் டிரவல்ஸ் & டூர்ஸ்**
உங்கள் உல்லாச பயணத்திற்கு ஒரே தெரிவு!

யாழ்ப்பாணக்கிளை: 275, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 021 222 1878 மனோ : 077 773 0818

Skyline



இரண்டு தசாப்தங்களுக்கு மேல் கடிதங்கள், பொதிகள் சேவையில் பல்லாயிரக் கணக்கான வாடிக்கையாளர்களின் மனதில் இடம்பிடித்து நிற்கும்

## திருமுருகன் கொம் நெற்

நமது வாடிக்கையாளர்களுக்கு விசேட சலுகைகளை வழங்கவுள்ளது.

- 220 க்கு மேற்பட்ட நாடுகளுக்கான துரித சேவை.
- 3 - 5 வேலை நாள்களில் உரிய முகவரியில் ஒப்படைக்கப்படும்.
- உங்கள் இல்லங்களில் வந்து பொறுப்பேற்று உரிய முகவரியில் ஒப்படைக்கும் வசதி.
- கடிதங்கள், உடுபுடைவைகள், அன்பளிப்புப் பொருள்கள், கடலுணவுகள், மருந்துப் பொருள்கள், மற்றும் இதர பொருள்களையும் அனுப்பிட முடியும்.
- தற்போது 11Kg ற்கு மேற்பட்ட பொதிகளுக்கு விசேட சலுகைகள். (1kg க்கான கட்டணம்).

(லண்டன் 625/=, கனடா 950/= பிரான்ஸ் 675/=, ஜேர்மனி 650/=, சுவிஸ் 750/= இத்தாலி 800/=, அவுஸ்ரேலியா 700/=)

திருமுருகன் கொம் நெற் பிறைவெட் லிமிட்டெட்
271A, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்

கிளைகள்:
46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
18, பிரதான வீதி, நெல்லியடி.
30, கனகபுரம் வீதி, கிளிநொச்சி.
50, கே.கே.எஸ் வீதி, சுன்னாகம்.
பிரதான வீதி, சங்கானை.
(ஆசைப்பிள்ளை நகைக்கடைக்கு முன்பாக)



தொடர்புகளுக்கு: 0766901514 / 0212227835


## பொதுக்கூட்டம்

கரணவாய்,ஜூலை 27
இமையாணன் அ.த.க.வித்தியாலய பழைய மாணவர் சங்கப் பொதுக் கூட்டம் இன்று ஞாயிறு பிற்பகல் 3 மணிக்கு சங்கத் தலைவர் சி.வசந்தகுமார் தலைமையில் இடம்பெறவுள்ளது.

பாடசாலையின் அபிவிருத்தி தொடர்பாக பல முக்கிய விடயங்கள் கலந்துரையாடப்படவுள்ளன. அனைத்துப் பழைய மாணவர்களையும் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-108)

◆ ◆ ◆

வவுனியா,ஜூலை 27
நெடுங்கேணி மகாவித்தியாலய பழைய மாணவர் சங்கப் பொதுக் கூட்டம் நாளை மறுதினம் செவ்வாய்க் கிழமை முற்பகல் 10 மணிக்கு பாட சாலை பிரதான மண்டபத்தில் நடைபெறும். (ஓ)

## விளையாட்டு விழா

அளவெட்டி,ஜூலை 27
அளவெட்டி தெற்கு வாணி முன்பள்ளி விளையாட்டு விழா நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு முன்பள்ளி மைதானத்தில் திருமதி கி.தர் சிகா தலைமையில் நடைபெறும். இந்த நிகழ்வில்பிரதமவிருந்தினராக அளவெட்டி தெற்கு அ.மி.த.க. பாடசாலை அதிபர் எஸ்.வாமதேவன் கலந்து கொள்வார். (ஓ-36)

◆ ◆ ◆

யாழ்ப்பாணம்,ஜூலை 27
மக்கள் நலன் காக்கும் பிரிவு பாலர் பாடசாலை விளையாட்டு விழா இன்று ஞாயிறு பிற்பகல் 2மணிக்கு கோப்பாய் மகா வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

இந்த நிகழ்வுக்கு மக்கள் நலன் காக்கும் பிரிவு நிறுவனத் தலைவர் கோ.சிவசுந்தரமூர்த்தி தலைமை தாங்கவுள்ளதுடன் பிரதம விருந்தினராக கோப்பாய் மகாவித்தியாலய அதிபர் எஸ்.சிவகுமார் கலந்து கொள்வார். (ஓ-10)


## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தங்கராசா சுகந்தன் — மண்ணில் 29.08.1980 — விண்ணில் 11.08.2010



கஜந்தி சுகந்தன் — மண்ணில் 04.03.1982 — விண்ணில் 28.08.2010



இல்லத்தில் ஒளிஏற்றி இணையில்லா இன்பம் தந்தவனே
உள்ளத்தில் இருள் பரப்பி துணையுடனே விண்ணடைந்தாய்
ஆண்டுகள் பல கடந்தாலும் ஆறாதடா எம் துயரம்
மீண்டும் வந்து பிறப்பாயடா நித்திலம் ஒளி பெறவே!

உங்கள் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்
தந்தை – க.தங்கராசா
மகன் – சுகந்தன் சந்தோஷ்
சகோதரி, மைத்துனி – ச.சங்கீதா
மைத்துனர், சகோதரன் – ச.சந்திரகாந்
மருமக்கள் – சஜீவன், சஞ்சய்
அப்பம்மா – க.இராஜேஸ்வரியம்மா

பத்திரகாளி கோயில் ஒழுங்கை,
பருத்தித்துறை.

(50276)(7.6.3)



அமரர் மதிப்பிற்குரிய **அல்பிரட் தங்கராஜா துரையப்பா**
அவர்களின்

## 39ஆவது ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் : 15.07.1926 மறைவு : 27.07.1975



அன்னார் லண்டன் ஒக்ஸ்போட் பல்கலைக்கழகத்தில் சட்டத்தரணியாகப் படித்தவரும் யாழ்.மாநகர சபை முன்னாள் முதல்வரும் அமரர் மதிப்பிற்குரிய ஸ்ரீமாவோ பண்டார நாயக்க அம்மையார் காலத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் பிரதம அமைப்பாளரும் இன மத பேதமின்றி எல்லோருக்கும் வேலை வாய்ப்புக்களை வழங்கியவரும் திக்கற்றோருக்குத் திசைகாட்டிய தீப ஒளியும் நல்லவரும் சேவைகள் செய்வதில் வல்லவரும்.....

ஆறாது ஆறாது அழுதாலும் தீராது
நெடுந்தூரம் போய்விட்டீர்களே
ஆறாத் துயரில் இருக்கின்றோம்

உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.



இன்று 27.07.2014 இந்திரன் அம்மன் கோயிலில் பூசை வழிபாடுகள் நடைபெறும்.
அல்பிரேட் பரமேஸ்வரி தம்பதியரின் மகள் திரு.திருமதி ஈசா.
வடமராட்சி K.A.வைகுந்தநாதன் J.P
(முன்னாள் யாழ்.மாநகர பாதுகாப்பு உத்தியோகத்தரும்,
அரச ஓய்வுபெற்ற ஓய்வூதியரும், இலங்கை சமாதான நீதிவானும், கட்சி அங்கத்தவரும்)

(50216)(5.6.3)



## கடை வாடகைக்கு

சுன்னாகம், K.K.S.வீதியில்
இரண்டு கடைகள் வாடகைக்கு
உள்ளன. (லங்கா பெல்லுக்கு அருகில்)
தொடர்பு: 077 802 3557
(50295)(12.3.6)



## காணி கட்டடம் விற்பனைக்கு

நகரின் மத்தியில் 3½ பரப்புக்கு மேல் விஸ்தீரணமுடைய காணியுடன் கூடிய அலுவலகத்துக்கு உபயோகமான கட்டடம் விற்பனைக்குண்டு.
தரகர் தேவையில்லை.
தொடர்பு: 077 415 6107
(50298) (3.6.4)



CEYLON THEATRES
**இப்பொழுது திரையில்**
**MAJESTIC CINEMA - CARGILLS SQUARE**
(Opposite Jaffna Teaching Hospital)




Platinum 3D 10.30am, 2.30pm, 6.30pm




Silver 10.15am, 2.15pm, 6.15pm




Bronze 10.30am, 2.30pm, 6.30pm
விசாரணை ☎ 021-2227712
www.facebook.com/CeylonTheatres www.ceylontheatres.com



**வாடகை** மூன்று அறைகளுடன் மேல் மாடி வீடு வாடகைக்கு. 5/1, கருவப்புலம் வீதி (பிரதேச சபை வீதி) கோணாவளை, கொக்குவில் கிழக்கில் வாடகைக்கு உள்ளது. (யாழ். மருத்துவக் கல்லூரி முன்னால் உள்ள ஆயுர்வேதர் ரோட்டில் தொடர்பு ரோட் ஆதம்)
தொடர்பு: 077 732 8370/071 829 6065



## Batik ஆடைத் தெரிவுகளுக்கு

உங்களுக்குத் தேவையான அனைத்து விதமான பற்றிக் (Batik) ஆடைகளையும் மலிவாகவும் தரமாகவும் அவரவர் அளவிற்கு ஏற்றவாறு மொத்தமாகவும், சில்லறை விலைக்கும் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்

Sunshine, 351, Sea Street, Colombo-11
www.sunshine Batik.comT.P:077 866 3652
E.mail:ceylonbatik@gmail.com




## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1979 மக நட்சத்திரம், தனியார் நிறுவனமொன்றில் தொழில் புரியும் ஆஸ்திரேலிய குடியுரிமை உள்ள மணமகனுக்கு படித்த, ஆங்கில அறிவுள்ள மணமகளைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். குறிப்பு : படம், தொலைபேசி எண்களுடன் தொடர்பு கொள்ளவும்.
விளம்பர இல: 4503 (சி/15560)(7.6.3)
மே/பா.உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
senvin.advt@gmail.com



## விற்பனைக்கு

இத்தாலி தச்சுவேலைப் பட்டறை
விற்பனைக்குண்டு.
தொடர்பு:077 609 2839/077 894 6575



# சட்ட அதிகாரி (வட மாகாணம்)

இப் பதவிக்கு விண்ணப்பிப்பவர்கள் பண மீட்பு அலுவல்களிலும் முறையீட்டுப் பத்திரங்கள் மற்றும் சட்ட ஆவணங்களைத் தயாரிக்கும் சிவில் விடயங்களிலும் வழக்குகள் மற்றும் விசாரணைகள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதிலும் திறமையான சேவை வழங்கக்கூடியவர்களாக இருக்க வேண்டும்.

தகுதிகள்

- ஒரு சட்டத்தரணியாக இருக்க வேண்டும்.
- மாவட்ட நீதிமன்றத்தில் சிவில் விடயங்களை, குறிப்பாக பண மீட்பு விடயங்களைக் கையாள்வதில் குறைந்தபட்சம் 3 – 4 வருடகால அனுபவத்தைக் கொண்டிருக்க வேண்டும்.
- ஒரு வங்கியில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிதிச் சேவை நிறுவனத்தில் முன்பு பணியாற்றிய அனுபவம் நிச்சய அனுகூலமாகக் கருதப்படும்.
- சிறந்த தொடர்பாடல் திறமையுடன் தமிழிலும், ஆங்கிலத்திலும் சரளமாக உரையாடக்கூடியவராக இருப்பது அவசியம். சிங்களம் தெரிந்திருந்தால் அனுகூலமாகக் கருதப்படும்.
- முறையீட்டுப் பத்திரங்கள் மற்றும் சட்ட ஆவணங்களை வரைவதிலும் விசாரணைகளை நடத்துவதிலும் திறமையுள்ளவராக இருப்பது கட்டாயம்.

இந்த விளம்பரம் பிரசுரமான 7 தினங்களுக்குள், உறவினரல்லாத இரண்டு நடுவர்களின் பெயர்கள் சகிதம் உங்கள் விண்ணப்பத்தை தபால் மூலம் அல்லது மின்னஞ்சல் மூலம் மனித வளங்கள் உதவி உப தலைவருக்கு அனுப்பவும். விண்ணப்பிக்கும் பதவியின் பெயரை கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் அல்லது மின்னஞ்சல் விடயப்பொருள் கட்டத்தில் குறிப்பிடவும். சுயவிபரக்கோவை ஆங்கில மொழியில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

தெரிவு செய்யப்படுபவர்களின் தகைமைகள், அனுபவம், ஒட்டுமொத்தமான அறிவு என்பவற்றிற்கேற்ப கவர்ச்சியான சம்பளமும் ஏனைய கொடுப்பனவுகளும் சலுகை வட்டி வீதத்தில் ஊழியர் கடன் வசதியும் வழங்கப்படும்.

## எம்முடன் இணையுங்கள்.
## எம்முடன் வளருங்கள்.

இலங்கையில் அதிவேகமாக வளர்ச்சி அடைந்துவரும் வங்கிகளில் ஒன்றான யூனியன் வங்கி, சிறிய மற்றும் நடுத்தரத் தொழில் முயற்சிகள் மற்றும் நுகர்வு வங்கிச் சேவைகளில் தனது முக்கிய கவனத்தைச் செலுத்துகின்றது.

அதன் கிளை வலையமைப்பும் யுனிட் ட்ரஸ்ட் உள்ளடங்கலான வியாபாரச் செயற்பாடுகளும் விரிவடைந்து வருவதால், இலங்கையின் வங்கிச் சேவைகள் துறையில் யூனியன் வங்கி இன்று முக்கியமான ஓர் இடத்தை வகிக்கின்றது.

யூனியன் வங்கி
ඔබේ දියුණුවේ බැංකුව

(சி/15551)

தலைமை அலுவலகம்: 64, காலி வீதி, கொழும்பு 03. மின்னஞ்சல்: :jobs@unionb.com | www.unionb.com


## மில்க்வைற் கனகராசா நினைவு தின நிகழ்வு நாளை

யாழ்ப்பாணம்,ஜூலை27

அகில இலங்கை காந்தி சேவா சங்கம் கொக்குவில் இந்துக் கல்லூரி சமூகத்துடன் இணைந்து நடத்தும் மில்க்வைற் கனகராசாவின் நினைவு தின நிகழ்வும் காந்தீயம் பத்திரிகை அறிமுகமும் நாளை திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி சுப்பிரமணியம் மண்டபத்தில் நடைபெறும். இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக அண்ணா கோப்பி நிறுவன தொழிலதிபர் பொ.நடராசா கலந்து கொள்வார். (ஓ)

## கருத்தரங்கு

கரணவாய்,ஜூலை27

அல்வாய் அவை (போரம்) நடத்தும் கருத்தரங்கு இன்று ஞாயிறு மாலை 4 மணிக்கு அல்வாய் கலையகத்தில் இடம் பெறவுள்ளது.

தெணியான் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் 'தேசிய இனப் பிரச்சினை' என்ற தலைப்பில் மகரகம ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் கலாநிதி ந.ரவீந்திரன் கருத்துரை வழங்கவுள்ளார். (ஓ-108)

## பரிசளிப்பு விழா

கரணவாய்,ஜூலை27

புற்றளை மகா வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா நாளை திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் அதிபர் ஆ.சிவநாதன் தலைமையில் இடம்பெறும்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சர் த.குருகுலராஜாவும், சிறப்பு விருந்தினராக வடமராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர்சி.நந்தகுமாரும் கலந்து கொள்வர். (ஓ-108)


### இடமாற்றத்தை முன்னிட்டு.....

யாழ். நகரம் காணாத மிக மிக மலிவு விற்பனை!
இருப்பகற்றலை முன்னிட்டு சில தினங்கள் மட்டுமே

- பட்டு சாறிகள் - 2250/=
- சல்வார் - 800/=
- இந்தியன் ஸ்கேட் - 300/=
- இந்தியன் ரொப் - 750/=
- சேட் - 250/=
- ஜீன்ஸ் - 650/=



மேலும் அனைத்து ஆடைகள் மற்றும் பான்சி பொருள்கள், சிறுவர்களுக்கான விளையாட்டு பொருள்கள் அனைத்தும் குறித்த விலையிலிருந்து பாதி விலைக்குப் பெற்றுக் கொள்ளலாம்.

கனடா ஜெயசாயி சுப்பர் சென்ரர்
114, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 221 9393

### வைத்தியம்

ஞாயிறு, திங்கள், செவ்வாய்
நாள்பட்ட தீராத தலைவலி, கழுத்து முதுகு வலி, முள்ளந்தண்டு குத்து, L4-L5 அடி முள்ளந்தண்டு விலகல், முழங்கால், குதி, பாதம் வலிகள், தீராத நெஞ்சுச் சளி, இருமல், ஆஸ்துமா, இளைப்பு, வயதானகால களைப்பு
Diabitics-High BP-Cholestrol
குழந்தை நோய்கள், மாணவ, மாணவியர்களின் மனச்சோர்வு, படிக்க முடியாமை, ஞாபகசக்தி குறை, குழந்தை வேண்டும் தம்பதியர்க்கான அதி விஷேட சிகிச்சைகள், கருக்கட்டலுக்கான வலுவூட்டும் சிகிச்சைகள்.
சித்த வைத்தியர் Dr.R.Sivagurunathan
(Homoeopathy + Acu puneture)
நல்லூரில் சந்திக்கலாம். (சி/15557) (3.6.4)
சந்திப்பு இலவசம் உங்களை அறிமுகப்படுத்தி சந்திப்பு நேர ஒதுக்கீட்டுக்கு 077 730 1669

### நிரந்தர வேலை வாய்ப்பு

18-50 வயது ஆண்/பெண் உடனடியாகத் தேவை. சம்பளம் 15000/=, 18000/=, 28000/= கொழும்பை அண்மித்த பிரதேசங்களில் ஜாம்/ரொபி/பிஸ்கற்/கோடியல்/கிளவுஸ்/PVC/Paint/Print.... போன்ற தொழிற்சாலைகளில் உற்பத்தி/லேபல்/பொதியிடல்/களஞ்சிய பிரிவுக்கு ஆள்கள் தேவை. உணவு, தங்குமிடம் குறைந்த விலைகளில். (நண்பர்கள், தம்பதியினர், குழுக்கள் ஒரே தொழிற்சாலைகளில்)

(48952) (12.3.6) மேலதிக தொடர்புகளுக்கு : 077 683 8231

### அறைகள் வாடகைக்கு

கொழும்பு வெள்ளவத்தையில் குறைந்த நாளாந்த வாடகையில் வீடு A/c, Non A/c அறைகளை பெற்றுக்கொள்ள தொடர்பு கொள்ளுங்கள்.

THAAS REST
391/6, Galle Road, Wellawatte
Mangala Halt அருகில்
011 2360515, 011 2362586

UTHAYA REST
No 58, Harmes Avenue, Wellawatte
011 2503552, 011 2361242

(C/15555) GOOD WIN

# பாதுகாப்பு வலயத்தில் நூற்றாண்டு காணும் வயாவிளான் புனித யாகப்பர் ஆலயம்

## இன்று யாழ். ஆயர் தலைமையில் திருப்பலி.

■ எஸ்.யேசுதாஸ்,
கொழும்புத்துறை.

வலி.வடக்கு, வலி. கிழக்கு ஆகிய இரண்டு பிரதேசங்களின் எல்லையில் அதி உயர் பாதுகாப்பு வலயத்தினுள் சிக்குண்டு கிடக்கும் பலாலி தெற்கு வயாவிளான் பகுதியில் அமைந்துள்ள புனித யாகப்பர் ஆலயத்தின் நூற்றாண்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை சிறப்பாகக் கொண்டாடப்படவுள்ளது.

கடந்த 24 வருடங்களாக இடம்பெயர்ந்த நிலையில் பல்வேறு இடங்களில் தமது சொந்த மண் மீதான ஏக்கத்துடன் வாழ்ந்துவரும் இந்தப் பகுதி மக்கள் தமது பாதுகாவலரான புனித யாகப்பருக்கு கோயில் அமைத்த நூற்றாண்டு நிறைவு விழாவில் கலந்து கொள்வதற்காக படைத்தரப் பின் அனுமதி பெற்று இன்று ஒன்றுகூடுகிறார்கள்.

கத்தோலிக்க வழிவந்த மூதாதையர்கள் தமது வழிபாட்டுக்கென ஆலயம் அமைக்க எண்ணி 1914ஆம் ஆண்டில் மயிலிட்டி கோயில் பற்றில் பங்குத்தந்தையாக இருந்த அருட்திரு. சந்தியாம்பிள்ளை அடிகளாரின் ஆலோசனையை நாடினர். அவரது அனுசரணையுடன் சிறிய ஓலைக்கொட்டில் அமைத்து இயேசுவின் அன்புச் சீடரான புனித யாகப்பரின் திருச்சொரூபத்தை வைத்து பூசை வழிபாடுகளை ஆரம்பித்தனர். ஆலயத்துக்குரிய காணியை சில்வேஸ்திரி என்பவர் வழங்கினார்.

ஆரம்பகாலத்தில் ஆலயப் பராமரிப்புக்கென மூத்தோர்களான மாட்டீர் (இளையவி), சில்வேஸ்திரி, வெறுநாடர், பியோசூசை, அலேசு அந்தோனி ஆகியோர் நியமிக்கப்பட்டனர்.

அருட்தந்தையர்களான பாலசுந்தரம், இராசகாரியர், வில்வரசிங்கம், லெபோன், சிங்கராசா, செல்வராசா, குலாஸ், நோபேட், பீற்றர், அன்ரனிதாஸ் ஆகியோரின் ஆன்மிக விசுவாசத்தில் ஊட்டம்பெற்ற மக்கள் கல்லினாலான ஆலயத்தை அமைக்க விழைந்தனர். விவசாய வருவாயின் ஒரு பகுதியை மக்கள் ஆலய திருப்பணிக்கென வழங்கினர்.

1930ஆம் ஆண்டு அத்திபாரம் இடப்பட்டு மக்களின் உடல் உழைப்பும் குருக்களின் வழிகாட்டலும் ஒன்று சேர்ந்து கட்டம் கட்டமாக ஆலய உருவாக்கத்துக்கு வழிகோலியது. இந்த ஆலயம் அரிகற்களின்றி முற்றிலும் காட்டுக்கற்களால் கட்டப்பட்டமை சிறப்பம்சமாகும்.

1960 ஆம் ஆண்டுக்குப் பின்னர் பணியாற்றிய குருக்களான நல்லையா, றெக்னோ, மறைந்த ஆயரான எல்.ஆர். அன்ரனி ஆகியோரின் முயற்சியால் ஆலயக் கட்டுமானப் பணிகள் பெரிதும் நிறைவடைந்தன. பின்னர் கிராம அலுவலரான யோ.அருளானந்தம் உதவியுடன் குருமனை அமைக்கப்பட்டது.

இந்தப் பங்கிலிருந்து அருட்தந்தையர்களாக இ.மரியநாயகம் (அ.ம.தி) அடிகள், றெஜிலாசரஸ் அடிகள், அருட்சகோதரிகளாக இ.விக்ரோறியா, செபமாலைராணி ஆகியோர் இறைபணியில் இணைந்துள்ளனர்.

இந்த நிலையில் 1990ஆம் ஆண்டின் நடுப் பகுதியில் ஏற்பட்ட போர் நடவடிக்கைகளால் வலி.வடக்கு முற்றிலும் வெறுமையானபோது இந்தப் பகுதி மக்களும் சிதறிச் சென் றனர்.

'வெண்புரவி மீதேறி வெற்றி கொள் வீரர்' வீற்றிருந்து அருள் பொழிந்த இந்த ஆலயம் இன்று பொலிவிழந்து கூரைகள் இல்லாத நிலையில் காணப்படுகிறது. ஆயினும் ஓடியாடி உறவாடிய மண்ணின் மீதான பற்றும், புனித யாகப்பர் மீதுகொண்ட பக்தியும் மக்களிடத்தில் மங்காது காணப்படுவதை நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுவதிலிருந்து தெரிகின்றது.

தற்போதைய பங்குத்தந்தை அருட்திரு கு.யே.அன்ரனிபாலா அடிகள், ஆயர் இல்ல நிர்வாகத்தினர், ஆலய நிர்வாகத்தினர் மற்றும் இளைஞர் களின் அயராத முயற்சியின் பயனாக யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் நூற்றாண்டு விழாத் திருப்பலி நிறைவேறவுள்ளமை இறைவல்லமையின் வெளிப்பாடாகும்.

## தொடர்ச்சிகள்

### வடக்கு ஊடக

பொலிஸாரும் இணைந்து தடுத்து வைத்திருந்தனர்.

இராணுவத்தினரே தமது வாகனத்தில் கஞ்சாப் பொதியை வைத்ததாக ஊடகவியலாளர்கள் தெரிவித்ததுடன் தாம் அதனை நேரில் கண்டோம் என்றும் கூறிப் பொலிஸாருடன் கடுமையாகத் தர்க்கப்பட்டதைத் தொடர்ந்து, 6 ஊடகவியலாளர்களையும் நேற்று அதிகாலை 4 மணியளவில் பொலிஸார் விடுவித்தனர்.

ஆனால் ஊடகவியலாளர்களை ஏற்றிச் சென்ற வாகனச் சாரதி வாகனத்துடன் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

(த-5)

### வடக்கு மாகாண

ரூபா தேவை என்று கோரிக்கை விடுக்கப்பட்டது.

இதற்கு வடக்கு மாகாணத்துக்கு என்று விசேட நிதி ஒதுக்கீடு செய்யப்பட முடியாதென்றும், ஒவ்வொரு மாகாணத்துக்கும் 50 மில்லியன் ரூபாவே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும், அதிலும் தற்போது ஒரு மில்லியன் ரூபாவே வழங்கப்படும் என்றும் மத்திய கடற்தொழில் அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு மாகாணத்துக்கு ஏனைய மாகாணங்களை விட கூடுதலான நிதி ஒதுக்கீடு செய்யப்படுவதாக, ஜனாதிபதி மஹிந்த ராஜபக் ஷ முதல் அரசின் அமைச் சர்கள் அனைவரும் கூறி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(த-5)

### ஊடகவியலாளர்

கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் கருத்தரங்கில் பங்கேற்பதற்காக வடக்கிலிருந்து வருகை தந்த ஊடகவியலாளர் குழுவுக்கு இராணுவத் தினர் ஓமந்தையில் வைத்து எவ்விதமான இடையூறுகளையும் விளைவிக்கவில்லை என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஓமந்தைச் சோதனைச் சாவடியில், பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்தே சோதனை நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர். இந்த நிலையில், வானொன்றில் பெருந்தொகையான கஞ்சா கடத்தப்படுவதாக ஓமந்தையிலுள்ள இராணுவத்துக்கு இரவு 9 மணிக்கும் 9.15 க்கும் இடைப்பட்ட நேரத்தில் தகவலொன்று கிடைத்துள்ளது.

பஸ்ஸில் வந்த ஒருவரினாலேயே இந்தத் தகவல் வழங்கப்பட்டுள்ளது. இந்த தகவலையடுத்து விரைந்து செயற்பட்ட இராணுவத்தினரும் பொலிஸாரும் அந்த பஸ்ஸுக்குப் பின்னால் வந்துகொண்டிருந்த சகல வாகனங்களையும் சோதனைக்கு உட்படுத்தினர்.

10 நிமிடங்களுக்குப் பின்னர் வந்த வானொன்றைச் சோதனை செய்தபோது அந்த வானில், சாரதி ஆசனத்துக்குக் கீழிருந்த சிகரெட் பெட்டிக்குள் சிறிய தொகை கஞ்சாவைப் பொலிஸார் மீட்டுள்ளனர். அதனையடுத்து வாகனத்தின் சாரதியை பொலிஸார் கைது செய்துள்ளதுடன் அடுத்த கட்ட சட்ட நடவடிக்கையை எடுத்துள்ளனர்.

ஏனைய ஏழு பேரும் விடுவிக்கப்பட்டுள்ளனர். பொலிஸ் விசாரணையின்போதே அவர்கள் ஊடகவியலாளர்கள் என்று தெரியவந்துள்ளது. வானில் இருந்தவர்கள் ஊடகவியலாளர்கள் என்று தெரிந்துகொண்டு இராணுவத்தினர் இடையூறு விளைவித்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளமை முற்றிலும் தவறானதாகும். பொலிஸாரின் விசாரணைக்கு இராணுவத்தினர் இலகுபடுத்திக் கொடுத்துள்ளனர்-என்றார்.

அந்தக் கஞ்சாவை இராணுவத்தினரே போட்டுள்ளதாக ஊடகவியலாளர்கள் தெரிவிக்கின்றனரே என்று ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு அவர் பதிலளிக்கையில்,

பொலிஸாரே கஞ்சாவை மீட்டுள்ளனர். இராணுவத்தின் மீது அபாண்டமான குற்றச்சாட்டுகளே முன்வைக்கப்பட்டுள்ளன. அதனை இராணுவம் முற்றாக மறுக்கின்றது என்றார். (த-5)

### முல்லைத்தீவு

றுள்ளது. எனினும் இதன்போது எவருக்கும் காயங்கள் ஏற்படவில்லை என்று முல்லைத்தீவுப் பொலிஸார் தெரிவிக்கின்றனர். முல்லைத்தீவு பொலிஸ் நிலைய விடுதிக்கு வெளியில், பொலிஸார் குப்பைகளைக் கூட்டி தீ வைத்ததாகவும் இதன்போதே அதிலிருந்த இனந்தெரியாத பொருள் ஒன்று வெடித்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

நீண்ட காலத்தின் பின் பெரும் வெடிச் சத்தத்தை கேட்ட முல்லைத்தீவு மக்கள் பரபரப்படைந்தனர்.

இந்த வெடிப்புச் சத்தத்தை சுமார் 3 கிலோ மீற்றருக்கு அப்பால் கேட்க முடிந்ததாக மக்கள் கூறினர்.

பொலிஸ் விடுதியானது மூன்று கட்டடத்தொகுதியைக் கொண்டுள்ளதுடன் பொலிஸ் அதிகாரிகள் தங்குவதற்கென தனியான கட்டடத்தொகுதியும் உள்ளது. விடுதி வளாகத்திற்கு வேலியோ மதிலோ அமைக்கப்படவில்லை. விடுதிக் கட்டத் தொகுதியில் நடுக் கட்டடத்தின் அருகே சுமார் 5 மீற்றர் தூரத்திலேயே வெடிப்புச் சம்ப வம் நிகழ்ந்துள்ளது.

(த-5-101-102)

### 28 வருடங்களின்

செயற்பட்டு வருகின்றன. இந்த நிலையில் இரு நாட்டுத் தலைவர்களும் ஒரே காலப் பகுதியில் இலங்கைக்கு வருகை தரவுள்ளனர்.

ஜப்பானியப் பிரதமர் சின்ஷோ அபே எதிர்வரும் செப்ரெம்பர் 6 ஆம் திகதி தொடக்கம், 8 ஆம் திகதி வரை இலங்கை மற்றும் பங்களாதேஷுக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார். இதன்போது, இலங்கையுடன் கடல்சார் பயணப் பாதையின் பாதுகாப்புத் தொடர்பாக இணக்கப்பாட்டை ஏற்படுத்தும் முயற்சியில் அவர் ஈடுபடுவார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

அதேவேளை, ஜப்பானியப் பிரதமர் இலங்கைப் பயணத்தை முடித்துக்கொண்டு புறப்பட்ட, ஓரிரு நாள் களில் சீன அதிபர் ஜி ஜின்பிங் இலங்கைக்குப் பயணம் மேற் கொள்ளவுள்ளார். எதிர்வரும் செப்ரெம்பர் 9 ஆம் திகதி மூன்று நாள் பயணமாக அவர் இலங்கை வரவுள்ளார். 1986 ஆம் ஆண்டுக்குப் பின்னர், சீன ஜனாதிபதி ஒருவர் இலங்கைக்கு மேற்கொள்ளும் முதல் பயணம் இதுவாகும். (த-5)

### அரச

கோப்பாய் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பூதர்மடம் பகுதியில், இராணுவத்தினர் அரச காணியில் நீண்டகாலமாக நிலை கொண்டிருந்தனர். குறித்த காணியிலிருந்து இராணுவத்தினர், கடந்த சில மாதங்களுக்கு முன்னர் வெளியேறியிருந்தனர். இந்த நிலையில், வலி. வடக்கிலிருந்து இடம்பெயர்ந்து காணியில்லாமல் வாழ்ந்து கொண்டிருந்த சில குடும்பங்கள் குறித்த காணியில் குடியமர்ந்தன.

மேற்படி காணியில் கோப்பாய் பிரதேச செயலகத்துக்குரிய, பிரதேச செயலர் விடுதி கட்டவுள்ளதாகத் தெரிவித்து, குறித்த காணியில் குடியமர்ந்த மக்களை வெளியேறுமாறு கோப்பாய் பிரதேச செயலாளர் ம.பிரதீபன் தெரிவித்துள்ளார். அதற்கு அந்த மக்கள் தமக்கு அரச காணி ஏதாவது தந்தால் வெளியேறுவதாகத் தெரிவித்துள்ளனர்.

அதற்குப் பிரதேச செயலகத்தினர், ஊரெழுவிலுள்ள சுடலையாகப் பயன்படுத்தப்பட்ட அரச காணியைக் காண்பித்துள்ளனர். அதற்கு அந்த மக்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். அத்துடன், தமது காணியில் (வலி.வடக்கு உயர்பாதுகாப்பு வலயம்) இராணுவத்தினர் எந்த அனுமதியுமில்லாமல் குடியிருக்கின்றனர். அவர்கள் எமது காணியைப் பிடித்து வைத்திருந்தால், நாங்கள் அரச காணியில் குடியிருப்பதில் என்ன தவறிருக்கின்றது என்றும் அவர்கள் கேள்வியெழுப்பியுள்ளனர்.

இதேவேளை குறித்த காணியில் குடியமர்ந்துள்ள மக்களை வெளியேற்றுவதற்காகக் கோப்பாய் பிரதேச செயலாளரால் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(த-5)

### உரிய தீர்வு

இராமேஸ்வரம் மீனவர் சங்கத் தலைவர் எஸ்.யேசுராஜா தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள இந்திய மீனவர்கள் மற்றும் படகுகளை விடுவிக்க மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்திய மீனவர்கள் சுதந்திரமாக மீன்பிடிப்பதற்கு இலங்கை அரசுடன் பேசித் தீர்வைப் பெற்றுத்தர வேண்டும் என வலியு றுத்தி இராமேஸ்வரம் மீன வர்கள் மேற்கொள்ளும் காலவரையறையற்ற வேலைநிறுத்தம் 3 ஆவது நாளாகவும் தொடர்ந்து நடைபெற்று வரும் நிலையில் இது தொடர்பில் மத்திய அரசோ, மாநில அரசோ கவனிக்கவில்லை. இதனால் மீனவர்கள் தொழில் இன்றி அவர்களது குடும்ப வாழ்வாதரத் தேவைகளைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலையில் உள்ளனர்.

நாமும் எமது மீனவர் பிரச்சினையை முன் வைத்து பல வித போராட்டங்களை நடத்தி விட்டோம். ஆனால் இதற்குத் தீர்வு காணப்படவில்லை.

இந்த முறை ஆரம்பித்துள்ள இந்தப் போராட்டத்தைத் தீர்வு காணும் வரை நாங்கள் நிறுத்துவதாக இல்லை. எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 2 ஆம் திகதிக்கு முன்னதாக அரசு நடவடிக்கை எடுக்காவிட்டால் படகுகளில் வெள்ளைக்கொடி கட்டி இலங்கைக் கடற்படையிடம் தஞ்சமடைவதற்கு மீனவர்கள் முடிவெடுத்துள்ளனர் -என்றார்.

மீனவர்களின் இந்தப் போராட்டத்தால் ஆயிரக்கணக்கான படகுகள் கரையில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. (த-14)

### வடக்கு முதல்வர்

பொறுப்புக்களுடன் ஏனைய சில துணை அமைச்சுப் பொறுப்புக்களும் உள்ளன.

இதில் குடிதண்ணீர் விநியோகம் என்ற அமைச்சுப் பொறுப்பும் உள்ளது. இதனை வடக்கு மாகாண விவசாய அமைச்சின் கீழ் மாற்றுவதற்கும் இதேபோல், உணவு விநியோகம் என்ற அமைச்சுப் பொறுப்பைச் சுகாதார அமைச்சின் கீழ் மாற்றுவதற்கும் ஆலோசிக்கப்பட்டு வருகின்றது.

எதிர்வரும் ஒக்ரோபர் மாத மளவில் இந்த மாற்றங்கள் செய்யப்படலாம் என்று நம்பகரமாகத் தெரியவருகின்றது.

இதேவேளை, கடந்த வருடம் அமைச்சுப் பொறுப்புக்கள் வழங்கப்படும்போது, ஒரு வருடத்தின் பின்னர் அமைச்சுக்கள் மீளாய்வு செய்யப்படும் என்று முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-5)

### ஜனாதிபதி

கப்பட்டதாகத் தெரிய வருகிறது.

'நிறைவேற்று ஜனாதிபதி முறையை நீக்கவேண்டும்' என்ற தொனிப்பொருளில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்தக் கூட்டத்தில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், ஜனநாயகக் கட்சியின் தலைவர் சரத் பொன்சேகா உட்பட எதிர்க்கட்சிகளின் முக்கியஸ்தர்களும் முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவும் கலந்து கொண்டிருந்தனர்.

முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு ஜனாதிபதி வேட்பாளராவதற்கான சகல தகுதிகளும் இருப்பதாகவும் எனவே, அவரைப் பொது வேட்பாளராக நிறுத்துவது பொருத்தமானது எனவும் இந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது ஏன்று அறிய முடிகிறது. பொதுவேட்பாளர் பட்டியலில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்காவும், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் இருந்தனர்.

எனினும் ஷிராணி பண்டாரநாயக்க எவ்வித அரசியல் பிரவேசமும் இன்றி பக்கச் சார்பற்ற வேட்பாளராக தேர்ந்தெடுக்கப்படுவது உசிதம் எனவும், அவரது பதவி நீக்கத்துக்குப் பிறகு இதுவரை அவர் எந்தவொரு அரசியல் கட்சியிலும் சேராமல் இருப்பது அவருக்குரிய சாதகமான நிலைமை எனவும் இந்தக் கூட்டத்தில் பலரும் கருத்துக்களை முன்வைத்தனர் எனவும் தெரிய வருகிறது.

(த-5)

# தேசிய மட்ட வீரர்களுக்கான பயிற்சி முகாம் நெல்லியடியில்

கரணவாய், ஜூலை 27

வடமராட்சிக் கல்வி வலயத்திலிருந்து தேசியமட்ட மெய்வன்மைப் போட்டிகளில் பங்குபற்ற தெரிவு செய்யப்பட்ட மாணவர் களுக்கான பயிற்சி முகாம் எதிர்வரும் 29 ஆம், 30 ஆம் திகதிகளில் காலை 8.30 மணிமுதல் மாலை 5.30 மணிவரை நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத் தில் இடம்பெறவுள்ளது.

இந்தப் பயிற்சி முகாமில் மாகாண மட்டப் போட்டிகளில் பங்குபற்றி முதல் நான்கு இடங்களைப் பெற்ற மாணவர்களைப் பங்குபற்றுமாறும் -

பயிற்சி வகுப்புக்கு வரும் மாணவர்கள் விளையாட்டுச் சீருடையுடன் வருகை தருமாறும் அதற்கான ஏற்பாடுகளை பாடசாலை அதிபர்களை மேற்கொள்ளுமாறும் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் கேட்டுள்ளார்.

இதேவேளை வடமராட்சி வலயத்திலிருந்து தேசிய மட்டப் போட்டிகளில் பங்கு பற்றுவதற்கு தனி விளையாட்டுக் களுக்கு 21 மாணவ மாணவிகளும், மூன்று அஞ்சல் ஓட்டங்களுக்கும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் விவரங்கள் வருமாறு:-

எம்.அபிராமி (ஹாட்லிக்கல்லூரி - 100 மீ, 200 மீ, தட்டு எறிதல்), பி.ஆனந்த் (ஹாட்லிக் கல்லூரி- தட்டெறிதல்), என்.ரசாந்த் (ஹாட்லிக் கல்லூரி - 100 மீற்றர், 200 மீற்றர்), வை.அபிதரன் (ஹாட்லிக் கல்லூரி - தட்டெறிதல்), வி.ஜதர்சன் (ஹாட்லிக் கல்லூரி - தட்டெறிதல்), கே.டிலக்ஷன் (ஹாட்லிக் கல்லூரி - 400 மீற்றர், நீளம் பாய்தல்), பி.மதுஜன் (உடுப்பிட்டி அ.மி.கல்லூரி - 100 மீற்றர்), ஏ.கே.அஜித் (கலட்டி றோ.க.த.க.பாடசாலை - 200 மீற்றர், நீளம் பாய்தல்), வி.ரவிவர்மன் (கொற்றாவத்தை அ.மி.த.க.பாடசாலை - 400 மீற்றர்), வி.மதுரன் (நெல்லியடி மத்திய கல்லூரி - ஈட்டி எறிதல்), வி.றொபின்சன் (நெல்லியடி மத்திய கல்லூரி - குண்டு போடுதல்), ஐ.நிலக்ஷன்ராஜ் (மணற்காடு, றோ.க.த.க.பாடசாலை - 200 மீற்றர்), ஆர்.மயூரன் (வேலாயுதம் மகா வித்தியாலயம் - தட்டெறிதல், ஜே.ஜெயப்பிரியன் (தொண்டமானாறு வீ.ம.வி. -நீளம் பாய்தல்).

**பெண்களில் 15 வயதுப் பிரிவு**

ஏ.அபிநயா (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி - 100 மீற்றர், 200 மீற்றர், நீளம் பாய்தல்), ஏ.வைஷ்ணவி (மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை - 100 மீற்றர் தடை தாண்டல்)

**17 வயதுப் பிரிவில்**

எஸ்.ஆரணி (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி - 100 மீற்றர், நீளம் பாய்தல்), எஸ்.சுகந்திகா (கம்பர்மலை வித்தியாலயம் - குண்டு போடுதல், ஈட்டி எறிதல்).

**19 வயதுப் பிரிவில்**


ஆர்.கார்த்திகா (வட இந்து மகளிர் கல்லூரி - 800 மீற்றர், 1500 மீற்றர்), எஸ்.மலர் வாணி (வட இந்து மகளிர் கல்லூரி - 100 மீற்றர், நீளம் பாய்தல், முப்பாய்தல்)

**21 வயதுப் பிரிவில்**

ரி.விதுஷனா (மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை - தட்டெறிதல்)

இதேவேளை உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் 15, 17 வயது அஞ்சலோட்டக்குழு 4×100 மீற்றர் போட்டியிலும் ஹாட்லிக் கல்லூரியில் 17 வயது அஞ்சல் ஓட்டக்குழு 4×100 மீற்றர், 4×400 மீற்றர் போட்டியிலும்பங்குபற்றவுள்ளனர். (த-108)

## குத்துச்சண்டை போட்டியில் இடம்பெற்றவர் கௌரவிப்பு



கிளிநொச்சி, ஜூலை 27

தேசிய இளைஞர் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் கொழும்பு டொறிங்டன் திடலில் இடம்பெற்ற தேசிய குத்துச் சண்டைப் போட்டியில் 3 ஆம் இடம்பெற்ற கிளிநொச்சி பிரமந்தனாறுப் பகுதியைச் சேர்ந்த விற்றாலிற் நிக்கலஷ் (வயது 24) கிளிநொச்சி மாவட்ட செயலர் திருமதி ரூபவதி கேதீஸ்வரனால் கௌரவிக்கப்பட்டார்.

இந்த நிகழ்வு கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்றது.

பயிற்றுவிப்பாளர் எவரது உதவியுமின்றிச் சுயமாகவே கற்றுக்கொண்ட இவர், தேசிய மட்டத் திறந்த போட்டியில் கலந்துகொண்டே மூன்றாம் இடத்தை பெற்றுக்கொண்டார்.(த)



மட்டுவில் வளர்மதி சனசமூக நிலையத்தின் 49 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மின்னொளியில் நடத்தப்பட்ட யாழ். மாவட்ட ரீதியிலான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் வெற்றி பெற்ற ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழக வீரர்கள் விருத்தினர்களுடன். (த-23)

## இன்றைய ஆட்டங்கள்

அச்சுவேலி,ஜூலை 27

அமரர் சு.தற்பரன் ஞாபகார்த்த மென்பந்து துடுப்பாட்ட சுற்றுப்போட்டியின் இறுதியாட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை அச்சுவேலி மத்திய விளையாட்டு கழக மைதானத்தில் பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும்.

இன்று நடைபெறும் இறுதிப்போட்டியில் அச்சுவேலி கதிரொளி றொக்கட் அணியும் - நவக்கிரி எல்லாளன் விளையாட்டு கழக அணியும் மோதவுள்ளன. (த-11)

மீ மீ மீ

யாழ்ப்பாணம், ஜூலை 27

யாழ்.மாவட்ட தாச்சிச் விளையாட்டுச் சங்கம் நடத்தும் 18 ஆவது தாச்சி சுற்றுப் போட்டித் தொடரின்ஆட்டங்கள் கைதடி விநாயகர் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றது.

இன்று ஞாயிற்றுக்கிழமை 6.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் கைதடி வளர்மதி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பண்டத்தரிப்பு அறிவொளி விளையாட்டு அணி மோதவுள்ளது.

இரவு 7.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் மறவன் புலோ அம்பிகை விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சுன்னகம் காந்தரூபன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-23)

மீ மீ மீ

யாழ்ப்பாணம் ஜீலை 27

அமெரிக்க உதைபந்தாட்ட பயிற்றுநர் குழாம் இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் எற்பாட்டில் வடமராட்சி உதைபந்தாட்ட லீக்கினால் ஒழுங்கு அமைக்கப்பட்டு நடைபெற்ற உதைபந்தாட்டப் பயிற்சி பாசறையின் இறுதிநாள் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை இடம் பெறவுள்ளது.

இன்றைய இறுதிநாள் நிகழ்வில் மாலை 4 மணிக்கு இடம் பெறும் காட்சி உதைபந்தாட்டத்தில் டயமன்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ராணுவ அணி மோதவுள்ளது. (த-23)

## உதைபந்தாட்ட வீரர்களுக்கு 3 நாள் பயிற்சி வடமராட்சியில்

கரணவாய்,ஜூலை 27

வடமராட்சிப் பகுதியைச் சேர்ந்த உதைபந்தாட்ட வீரர்களுக்கான மூன்றுநாள் பயிற்சி முகாம் மாலி சந்தி மைக்கல் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

யாழ்.பாதுகாப்புப் படைகளின் தலைமையகம், இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனம் மற்றும் ஐக்கிய அமெரிக்காவின் சேகர் அவுட்ஸ் ரீட் சேர்விஸ் ஆகியவை இணைந்து இந்தப் பயிற்சி முகாமை ஒழுங்கு செய்திருந்தனர். இதன் ஆரம்ப நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதில் யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் உதய பெரேரா, வெற்றிலைக்கேணி கட்டளைத் தளபதி லெப்கேணல் விஜித் சுபசிங்க ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதில் அமெரிக்காவின் சேகர் அவுட்ஸ் ரீட் சேர்விஸ்த் தலைவர் மத்தியூஸ் பில்மன், பயிற்றுநர்களான கிரேக் டேவிஸ், இவன் டேவிஸ், சாள்ஸ் ஜோன்சன் மற்றும் ரேட்னி பீற்றர் சிமன் ஆகியோரும் இலங்கை உதைபந்தாட்டச் சங்க தொழில்நுட்பப் பணிப்பாளர் டி.சந்திரசிறி, பயிற்றுவிப்பாளர் றொஹான் விக்கிரமரத்தின உட்படப் பலரும் கலந்து கொண்டனர்.

வடமராட்சியைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள், இராணுவ அணி வீரர்கள் உட்பட நூற்றுக்கும் மேற்பட்டோர் பங்குபற்றினர். (த-108)

## சம்பியனானது குருநகர் பாடும்மீன்

யாழ்ப்பாணம், ஜூலை 27

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியின் 107 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு பிரான்ஸ் பழைய மாணவர் சங்கம் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழகத்துடன் இணைந்து யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் 11 பேர் பங்குபற்றும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரின் இறுதியாட்டத்தில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்று சம்பியன் ஆனது.

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இளவாலை சென். ஹென்றிஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணி மோதியது. இரண்டு அணியினரும் ஆட்ட நேர முடிவில் எதுவித கோல் களையும் பெறவில்லை. அதையடுத்து வெற்றி, தோல்வியைத் தீர்மானிப்பதற்காகச் சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன.


அதில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழக அணி களமிறங்கியது.

இரு அணியினாரும் ஆட்ட நேர முடிவில் கோல் எதனையும் பெறாததால், வெற்றி, தோல்வியைத் தீர்மானிப்பதற்காக சமனிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன.

அதில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணி 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று மூன்றாம் இடத்தைத் தனதாக்கிக் கொண்டது.

ஆட்ட நாயகனக சென்.மேரிஸ் விளையாட்டுக் கழக அணி வீரர் யூட்டும், தொடர் ஆட்ட நாயகனக குருநகர் பாடும் மீன் விளையாட்டுக் கழக அணி வீரன் அமுதனும், சிறந்த கோல் காப்பாளராக ஈவினை கலைமகள் விளையாட்டுக் கழக அணியின் கோல் காப்பாளர் பார்த்தீபனும், மக்கள் மனம் கவர் வீரராக ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணி வீரர் தர்மகுலநாதனும், வளர்ந்து வரும் ஒழுக்கமான வீரராக ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணி வீரர் கஜகோபனும் தெரிவு செய்யப்பட்டனர். (ற-23,86)



# இலங்கை முன்னிலை

தென்னாபிரிக்காவுக்கெதிரான இரண்டாவது மற்றும் இறுதி டெஸ்ட் ஆட்டத்தின் மூன்றாம் நாள் ஆட்ட நேர நிறைவில் இலங்கை அணி 150 ஓட்டங்களால் முன்னிலை வகிக்கின்றது. 2ஆம் நாள் ஆட்ட நேர நிறைவில் 3 இலக்குகள் இழப்பிற்கு 98 ஓட்டங்களை பெற்றிருந்த தென்னாபிரிக்க அணி நேற்று 282 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. 4வது இலக்குக்காக 79 ஓட்டங்கள் பகிரப்பட்டிருந்த நிலையில் டி வில்லியர்ஸ் 37 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். தொடர்ந்து வந்த வீரர்களும் சொற்ப ஓட்டங்களுடன் வெளியேற ஒரு கட்டத்தில் 175 ஓட்டங்களுக்கு 6 இலக்குகளை இழந்து தடுமாறியது. ஒரு முனையில் அணித் தலைவரான அம்லா தனித்து நின்று போராட இறுதிக்கட்டத்தில் ஸ்ரெய்ன் 30 ஓட்டங்களையும், தாகிர் 15 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர். இறுதிவரை ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்த அம்லா 139 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார்.

பந்து வீச்சில் தில்ருவான் 5 இலக்குகளையும் ரங்கண ஹேரத் 4 இலக்குகளையும், சுரங்க லக்மல் ஒரு இலக்கினையும் கைப்பற்றிக் கொண்டனர்.

முதல் இனிங்ஸில் 139 ஓட்டங்களால் முன்னிலை வகித்திருந்த இலங்கை அணி இரண்டாவது இனிங்ஸில் நேற்றைய நாள் நிறைவின் போது இலக்குகள் இழப்பின்றி 11 ஓட்டங்களைப் பெற்று 150 ஓட்டங்களால் முன்னிலை பெற்றிருந்தது.

ஆட்டம் முடிவதற்கு இன்னமும் இரண்டு நாட்கள் உள்ளதால் இலங்கை அணி வெற்றி பெறுவதற்கான வாய்ப்புக்கள் அதிகமாகக் காணப்படுகின்றன. (த)

# டோனியின் மீது குற்றச்சாட்டு




இந்திய அணித் தலைவர் டோனியின் இலக்குக் காப்பில் தடுமாற்றம் இருக்கிறது என்று முன்னாள் இலக்குக் காப்பாளர் சையத் கிர்மானி தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே ஷேன் வோர்ன் டோனியின் இலக்குக் காப்புப் பற்றி விமர்சனம் செய்து பேசியிருந்தார். இந்நிலையில் சையத் கிர்மானி இங்கிலாந்து தொடரின் போது டோனி தன்னம்பிக்கையற்று இலக்குக் காப்புச் செய்து வருவதாகக் குற்றம் சாட்டியுள்ளார்.

சையத் கிர்மானி 1976 முதல் 1986 வரை இந்திய அணியின் இலக்குக் காப்பாளராக இருந்துள்ளார். இந்தியாவின் சிறந்த இலக்குக் காப்பாளர் என்று நிபுணர்களால் பாராட்டப்பட்டவர்.

இந்நிலையில் ஆங்கில இணைய தளத்தில் பேசிய சையத் கிர்மானி டோனியின் இலக்குக் காப்பு உத்தியைக் கடுமையாக விமர்சனம் செய்துள்ளார்.

இது பற்றி அவர் கூறுகையில், கிரிக்கெட் ஆட்டத்தில் ஒரு கட்டத்தில் தனிப்பட்ட வீரர் ஒருவரின் உடற்தகுதி உச்சத்திற்குச் செல்லும், டோனியும் அந்தக் கட்டத்தில் தான் இருக்கிறார். ஆனால் அவருடைய இலக்குக் காப்பு சமீபகாலங்களாகச் சிறப்பாக இல்லை.

டோனி வேகப்பந்து வீச்சாளர்களின் பந்திற்கு இலக்குக் காப்புச் செய்யும் உத்தி சரியாக இல்லை. பந்தை வாங்கும் விதத்தில் கோளாறுகள் உள்ளன.

பந்தைத் தோளுக்கு மேல், இடுப்புக்கு மேல் வாங்கும்போது அவரது கைகள் இருக்கும் நிலை முற்றிலும் தவறாக உள்ளது.

அதாவது தோள் மற்றும் இடுப்புக்கு மேல் வரும் பந்தைப் பிடிக்கும் போது டோனியின் விரல்கள் பந்தை நோக்கி நீட்டியவாறு உள்ளது. இது பிடிகளை விடவே வழிவகுக்கும்.

ஆனால் அவர் அந்தக் கடினமான உத்தியை ஓரளவுக்கு சிறப்பாகக் கையாள்கிறார்.

அதேபோல் நிறைய போட்டிகளில் அவர் ஸ்டம்பிற்கு முன்னால் நின்று பந்தை வாங்கி வாய்ப்புகளை தவறவிட்டதை நான் பார்த்திருக்கிறேன். இது சரியான உத்தி அல்ல.

கேரி பாலன்ஸிற்கு ஸ்டுவர்ட் பின்னி பந்தில் டோனி விட்ட பிடி குழப்பத்தில் முடிந்தது. தவான் பிடிப்பார் என்று இவர் விட்டுவிட்டார்.

வலது புறம் ஒரு பந்து இவ்வாறு செல்லும்போது நாம் இலக்குக் காப்பாளரைக் குறை கூறலாம் ஆனால் இடது புறம் செல்லும்போது அவரை பெரிய அளவுக்குக் குறை கூற முடியாது.

ஆனாலும் முன்னேற்றம் தேவை. இப்போதெல்லாம் வீடியோ தொழில்நுட்ப வசதி உள்ளது. தான் இலக்குக் காப்பில் எந்த விதமான தவறுகளைச் செய்கிறோம் என்பதை பார்த்துத் திருத்திக் கொள்ளலாம். இப்போதுள்ள வசதிகளை டோனி பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்று கூறியுள்ளார். (த)



# தலைவர் பதவியிலிருந்து உடன் விலகவேண்டும் குக்

அண்மைக் காலமாக ஓட்டங்களைக் குவிக்கத் திணறிவரும் இங்கிலாந்து அணியின் அணித்தலைவரும், ஆரம்பத்துடுப்பாட்ட வீரருமான அலெஸ்டயர் குக் அணித் தலைமைப் பொறுப்பிலிருந்து விலகவேண்டுமென அவ்வணியின் வீரரான கெவின் பீற்றர்சன் தெரிவித்துள்ளார்.

பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

சிறந்த துடுப்பாட்ட வீரரான குக் அணித்தலைமைப் பதவியிலிருந்து விலகிக் கொள்வதன் மூலம் தனது துடுப்பாட்டத்தில் கவனம் செலுத்த வேண்டும். ஒரு சிறந்த ஆரம்பத் துடுப்பாட்ட வீரராக அவரது பங்களிப்பு அணிக்கு மேலும் 10 ஆண்டுகள் வரை தேவைப்படுகிறது. எனவே அவரே சுயமாகச் சிந்தித்து அணித்தலைமைப் பொறுப்பில் இருந்து விலகவேண்டும் - எனத் தெரிவித்துள்ளா

இங்கிலாந்து அணி குக் தலைமையின் கீழ் அண்மைக் காலமாக வெற்றிகளை பெறமுடியாமல் தவித்து வருவது குறிப்பிடத்தக்கது. (த)

# எனது கிரிக்கெட் வாழ்வை மாற்றியது யார் தெரியுமா?





தனது கிரிக்கெட் வாழ்க்கையில் தனக்கு நடந்த முக்கிய நிகழ்வை பற்றி சச்சின் மனம் திறந்து பேசியுள்ளார். நான் கிரிக்கெட் விளையாட வந்த போது முன்னாள் இந்திய கிரிக்கெட் வாரியத்தின் தலைவர் ராஜ் சிங் துங்கார்பூர் எனக்கு ஒரு தந்தை போல் என்னை வழிநடத்தி சென்றார் என சச்சின் கூறியுள்ளார்.

இது பற்றி அவர் கூறுகையில், நான் ஒரு சிறந்த கிரிக்கெட் வீரனாக வருவதற்கு அவர் சிறப்பான பங்கை அளித்தார். பல்வேறு வாய்ப்புகளை எனக்கு வாரி வழங்கினார்.

எனக்கு 16 வயது இருக்கும் போது இந்திய டெஸ்ட் அணியில் தெரிவானேன். பின்னர் 1989ல் பாகிஸ்தானுக்கு எதிரான தொடரில் விளையாட வாய்ப்பு கிடைத்தது.

பலரும் சச்சின் பாகிஸ்தான் தொடருக்கு செல்லும் முன் மேற்கிந்திய தீவுகள் அணிக்கெதிரான தொடரில் விளையாடினால் அவனுக்கு சிறப்பாக இருக்கும் எனக் கூறினர்.

ஆனால் ராஜ் சிங் துங்கார்பூர் என்னிடம் நீ நேரடியாக பாகிஸ்தான் தொடரில் மட்டுமே விளையாடப் போகிறாய். மேற்கிந்திய தீவுகள் தொடரில் விளையாட வேண்டாம். பாகிஸ்தான் தொடர் வரும் வரை ராஞ்சி போட்டிகளில் கவனம் செலுத்து. அதன் பின்னர் உன்னுடைய படிப்பு தேர்வுகளை நன்றாக எழுது எனக் கூறினார். என்னுடைய ஒளி நிறைந்த கிரிக்கெட் வாழ்க்கையில் அவருடைய பங்கு மிகப் பெரியது என சச்சின் கூறியுள்ளார். (த)

# கணவருக்காக டுவிட்டரில் ஆதரவு தேடும் சானியா

கணவருக்காக ரென்னிஸ் வீராங்கனை சானியா மிர்சா டுவிட்டரில் கருத்து தெரிவித்துள்ளார்.

மேற்கிந்திய தீவில் நடந்து வரும் கரீபியன் லீக் போட்டியில் பார்படோஸ் டிரைடென்ட்ஸ் அணிக்காக விளையாடி வரும் பாகிஸ்தானை சேர்ந்த சொஹைப் மலிக்குக்கு எதிராக செயின்ட் லூசியா ஜோக்ஸ் அணிக்காக விளையாடும் மேற்கிந்திய அணி வேகப்பந்து வீச்சாளர் டினோ பெஸ்ட் பந்து வீசுகையில் இருவருக்கும் இடையே ஏற்பட்ட வாக்குவாதம், தள்ளு முள்ளுவில் முடிந்தது.

இருவருக்கும் இடையிலான இந்த உரசல் ஹோட்டல் அறை வரை நீடித்தது. இந்நிலையில் தெலுங்கானா தூதராக நியமிக்கப்பட்டுச் சர்ச்சையில் சிக்கிய இந்திய ரென்னிஸ் வீராங்கனை சானியா மிர்சா தனது கணவர் சோயிப் மலிக்குக்கு ஆதரவாக டுவிட்டரில் கருத்து தெரிவித்துள்ளார். அதில், கிரிக்கெட் ஆடுகளத்தில் இனப் பாகுபாடா? இது கேவலமாக இருக்கிறது. சொஹைப் மலிக் அடிக்கவில்லை என்பது எனக்கு தெரியும் என்றும் டினோ பெஸ்டின் செயல் முட்டாள்தனமானது எனவும் கூறியுள்ளார். (த)

## வாடகைக்கு உண்டு

நாள், கிழமை, மாத அடிப்படையில்
Apartments Tulasi Mahal இல்
வாடகைக்கு உண்டு.
தொடர்பு : (சி/15775) (7.8.3)
071 328 6890, 021 221 9539

## இதோ ஓர் அரிய சந்தர்ப்பம்!!

கட்டார் நாட்டில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட
விமான நிலையத்தில் மீண்டும் 25 பேருக்கான வெற்றிடம்
உடனடியாக காணப்படுகின்றது.
Trolley Boys - 25 பேர் 800 + OT + Tips
தங்குமிடம், மருத்துவம் என்பன இலவசம்.
கைவசம் வீசா உள்ளதால்
இரண்டே வாரத்துக்குள் பயணம்.

உடன் தொடர்புகொள்ள :
Lankavoice Hotline
யாழ்ப்பாணம் 077 952 7575
மன்னார், வவுனியா : 076 669 7789
E-mail : Lankavoice@job4u.com

Air trust
Government Approval
Human Resource consultants
SIBFE Licence No - 2490
No-945
Marudana Road, Colombo-08.

## தேவை

மேசன் வேலை செய்யக்கூடிய
கொந்திராத்துக் காரரோ,
மேசன்மாரோ தேவை
முல்லைத்தீவு : 071 074 8166
சுன்னாகம் : 071 454 0731
யாழ்ப்பாணம் : 077 375 1803 (சி/15224) (7.8.3)

# VACANCIES
## SOFTWARE ENGINEERS
php .NET
for JAFFNA office

Interviews will be held on
28th of July 2014 at

Advanced Technological Institute
No 665/2 Beach Road,
Gurunagar, Jaffna

Contact : 0114 387 091
email : careers@ceymplon.lk
ceymplon Simply Talented | www.ceymplon.lk

## Mega Sale

ARPICO DAMRO Divestra
ஆடி தள்ளுபடி
10% → 50% வரை
அமோக விலை குறைப்பு
ஞாயிற்றுக்கிழமை திறக்கப்படும்
மங்களா காட்சியறை
536, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.
021 222 8367 - 021 222 8366 0777 286 069

## ஏகவிநியோகஸ்தர் - கந்தவேலன் றேடர்ஸ்

Lankem Chemicals Lt-, இனது ஏக விநியோகஸ்தர்களாகிய நாங்கள் எமது நிறுவன உற்பத்திகளான Thinner வகைகள் Terpentine காவி (Iron oxide) வகைகள் மற்றும் Adhesive என்பவற்றுடன் Dupont Gas R 410, R404, R 134 (காஸ்) ஆகிய வகைகளையும் நியாயமான விலையில் வழங்குவதில் பெருமிதமடைகின்றோம்.

தொடர்புகளுக்கு
I.G. Royce 0777638874
(விற்பனை பிரதிநிதி வடமாகாணம்)
Esan - 0773086904

## உதயன்

விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## German Institute

German Swiss மொழி வகுப்புகள் , Kajen thini ஆசிரியரால் வழங்கப்படுகிறது. அடுத்த பிரிவுகள் ஆரம்பமாகவுள்ளது. தமிழ் மொழி பெயர்ப்புடன்
பருத்தித்துறை றோட், ஆவரங்கால் சந்தி.
10. பலாலி வீதி. யாழ்ப்பாணம். Mrs.P. Kajenthini T.P: 07716048[illegible]

## விற்பனை முகவர்கள் தேவை (Distrbutors)

எமது முன்னணி நிறுவனத்துக்கு யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார் ஆகிய பிரதேசங்களுக்கு விற்பனை முகவர்கள் தேவை.
தொடர்புகளுக்கு:0771930505

## British College of Higher Studies
வழங்கும்

### மிகக்குறைந்த கட்டணங்களில் மாணவர்களுக்கான விடுமுறை காலப் பயிற்சி நெறிகள்

உங்கள் ஒரு மாத பாடசாலை விடுமுறையினை மிகவும் பயனுள்ளதாக்க விரும்புகிறீர்களா? நீங்களும் ஆங்கிலத்தில் சரளமாக ஒரு மாதத்தில் பேச விரும்புகின்றீர்களா? நவீன தொழில்நுட்ப -போதனாமுறையின் கீழ் உங்களை மெருகேற்ற முனைகிறீர்களா? சரளமாக ஆங்கிலத்தில் கதைக்க முடியவில்லையென்று ஏக்கத்துடன் இருக்கின்றீர்களா? கவலையை விடுங்கள் இப்பொன்னான விடுமுறை காலத்தில் உங்களுக்காக விசேடமாக வடிவமைக்கப்பட்ட கற்கை நெறிகளை நாம் வழங்கக் காத்திருக்கின்றோம். உங்களின் நேரத்திற்கேற்ப அனைத்து வகுப்புகளும் ஒழுங்கு செய்து தரப்படும்.

### Spoken English with Grammar
Duration : 80 Hrs

### Diploma in English
Duration : 110 Hrs

வகுப்புகள் யாவும் நவீனமயப்படுத்தலின் கீழ் Speaking, Reading, Writing & Listening என வகைப்படுத்தி ஒவ்வொரு பிரிவும் பிரத்தியேக விரிவுரையாளர்களினால் நடாத்தப்படும்.

Batches Starts on
Batch I : 02/08/2014
Batch II: 03/08/2014
Batch III: 04/08/2014
Batch IV: 05/08/2014
08.30am to 12.30pm & 01.00pm to 05.00pm


BCHS
No.15 , Sirambiyady Lane (Off Stanley Road)
Jaffna. (Near Sathosa & Ariyakulam Junction)
Tel : 021-2224550
No.3, 6th Lane, Vairavarkovil Road,
Vairavapuliyankulam (Near Young Star Club)
Vavuniya. Tel :024-3245287
Hotline(s): 0777585913,0777222422, 0714299935

## கணினி விற்பனை

நலல நிலையிலிருக்கும் HP Branded PC Complete Set, Dwel Core 3.40 GH2, 1GB Ram கணினி , Web camar மற்றும் 3 மாதம் பாவித்த Boofer உடன் 6மாத Worrenty உடன் அவசர தேவைக்காக ரூபா 25.000 இற்கு விற்கப்படவுள்ளது. - 0213200999

## வியாபாரத்தில் SUCCESS...
## ஆக ஒரே தெரிவு
ஜூஸ் பக்கெட் மெசின் மட்டுமே!!






பெறுமதியான பரிசுகளுடன்
1 மணித்தியாலத்தில் 2000 பக்கட்டுகளை தயாரிக்கும் திறன்
- 1 வருட உத்தரவாதம்
- இலவச செயல்முறைகளுடன் கூடிய பயிற்சி வழங்கப்படும்
- விற்பனைக்கு பின் சேவை
- இலவச விநியோகம்

ரூ.2 /=
ரூ.5 /=
ரூ.10 /=
பக்கட்டுகளை தயாரிக்கலாம்
max adz

தமிழில் தொடர்பு கொள்ள
077 391 8870
WINRICH INTERNATIONAL(PVT)LTD
No.18,Ground Floor,Lucky Plaza,St.Anthony's Mawatha,Kollupitya,Colombo - 03

## ALLIANCE FRANÇAISE DE JAFFNA

af பிரெஞ்சு மொழி
கற்பதற்கு (யாழில் 1976 முதல்) FRENCH EMBASSY
இன் கீழ் இயங்கும் உலகின் முதல்தர
சர்வதேச நிறுவனம் AF மட்டுமே. 136+ நாடுகளில்
1040+ கிளைகள். உயர் தகுதியுடைய ஆசிரியர்கள்.
விரைவான பேச்சாற்றல், அங்கீகரிக்கப்பட்ட
CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS
இன்றே அனுமதிகளை பெறுங்கள் ஆரம்பம் 03.08.2014
61, கச்சேரி - நல்லூர் வீதி, யாழ்ப்பாணம் 021 222 8093

## இந்திய சாஸ்திரியார் வருகை

யாழ்ப்பாணப் புண்ணிய பூமிக்கு மீண்டும்
வருகை தந்துள்ளார்
ஓம் சக்தி அருள்வாக்கு பெற்ற பரம்பரை ஜோதிடர்
S.N குமாரசாமி
கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத் தடை, கல்வித் தடையா, குழந்தைப் பாக்கியம் மற்றும் புதிய தொழில் தொடங்க வேண்டுமா ? தொழில் முன்னேற்றம் இல்லையா, குடும்பப் பிரச்சினையா, வெளிநாடு செல்லத் தடையா? மன உளைச்சலா ? எந்தப் பிரச்சினைக்கும் நேரில் சந்திக்கவும்
(காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை)
இல. 97/8, கண்ணகி அம்மன் கோயில் ஒழுங்கை, கோப்பாய் வீதி, உரும்பிராய்.யாழ்ப்பாணம்.
(உரும்பிராய் சந்திக்கு அருகில்)
T.P 072 681 6681, 072 681 6691

# மரண அறிவித்தல்



## மகேஸ்வரி துரைச்சாமி

அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மகேஸ்வரி துரைச்சாமி நேற்று (26.07.2014) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற பொன்னுத்துரை துரைச்சாமி (C.T.B.) யின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற லீலாவதி, மகாலிங்கம் மற்றும் கந்தையா, நடராஜா ஆகியோரின் அருமைச் சகோதரியும், கொங்காதரன் (லண்டன்), சத்தியபாமா (இலங்கை), கஜேந்திரன் (லண்டன்), திருக்கேதீஸ்வரன் (கேதார்-நோர்வே), கேதுரங்கன் (நோர்வே), சத்தியவேணி (லண்டன்), சத்தியவாணி (பிரான்ஸ்),சத்தியராணி (இலங்கை), கேதீஸ்வரநாதன் (லண்டன்), கிருபாகரன் (லண்டன்), குமணேந்திரன் (நோர்வே), சத்தியபூரணி (இலங்கை) ஆகியோரின் அருமைத் தாயாரும்,சாந்தி, சண்முகலிங்கம், உமாரஞ்சினி,கலைமதி, சாந்தசொரூபி, மகேந்திரன், காயா, கௌரிதேவி, சிறீகாந்தன், பத்மரட்ணம் (பவா) ஆகியோரின் அன்பு மாமியாரும்,துஸ்யந்தி,சுஜித்தா, செந்தூரன்,ஜதீஸ், கிருஷ்ணா, பிரசாந்தி, மாதுலன், வினோஜினி, பிரவீன், மதுசன்,மகரன், ஜெயசுபன், சுபசாயினி,மதியுகன்,பவித்திரா, ஹீரோ றியோ, மாய், டிலக்சன், சஞ்சய்,டியஸ்வின்,பிருத்திகா, ஜுலியன், விதுசன் . அபிஷேக், யாஸ்வின் ஆகியோரின் பாசமிகு பாட்டியும்,கனசோ, சயன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (27.07.2014) ஞாயிற்றுக்கிழமை பி.ப.3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:** சகோதரன், பிள்ளைகள்
தொடர்புகளுக்கு:- 021 2211164 (இலங்கை)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 27.07.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.